ஸ்ரீ:

ராமாநுஜ தர்சனம்

1930 - ஹஸ்த்திய 448

ருக்மணீ உபன்யாஸங்கள்

மஹாமஹோபாத்தியாய, பண்டிதாத்தினம்,

லெக்ஷ்மீபுரம் - ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசாரியர்

ஸ்வாமியின் உபன்யாஸங்கள்.

சென்னை :

கேஸரி அச்சுக்கூடத்தில் முத்திரிக்கப் பெற்றது.

1931

INTRODUCTION

In this little book is summarised the second of the series of *Rukmini Lectures* instituted by Messrs. A. Rangaswamy Iyengar and Rao Bahadur N. Gopalaswami Iyengar in memory of their sister, for the propagation of the religion of Bhagavan Ramanuja. The author of these lectures *Mahamhopadyaya Pandita-Ratnam Mahavidwan Lakshmipuram Sri U. Ve. Srinivasacharya Swami* is the foremost Sanskrit scholar in the Mysore Province. The learned Pandit's great learning and austere Orthodox habits is combined in a rare manner with forbearence and toleration (santi) so much so, that even ~~those~~ those who are immersed in the tendencies of modern civilisation, have nothing but admiration for him. Having a deep and settled faith in the religion of his birth, he has yet the natural quality of finding only the good in other religions. The following pages will easily impress the reader of the above qualities of the Pandit. These lectures may be said to give out the essence of his age-long study of numberless works, wide research, the experience of a life and deep faith. In the manner of examining and setting forth the rival religions, there is a main agreement between this pandit and *Vidwan Vidya-Ratnakaram Kodavasal Sri U. Ve. R. Narasimhacharya Swami*, who delivered the Rukmini lectures in the previous year. In a way, therefore, the present lectures may be said to be the complement of the first series. The first year's lectures expound the principles of the various systems of the ancient Indian religion, as promulgated by their respective preceptors : and the religion of Sri Ramanuja is presented in relation to them. They are published in the form of a book "NAVANEETHAM" (fresh-churned butter). In these, the second year's lectures, is taught the course of conduct that should be followed by one who

has imbibed the religion of Sri Ramanuja as presented in the former. Manu and other rishis lay down that 'learning must consummate in conduct"

In the first chapter of this work, it is first taught that the principal fruit of learning the Sastras must be the attainment of self-control and forbearence (Santi). It is attained by a dispassionate and wide study of many religions. The great souls who have preached their religions in our land, begin by declaring that in their religion, there is no room for passion or anger. In this, the religion of Sri Ramanuja stands forth pre-eminently. It teaches that everything seen is God, His body and His property." The grandeur of Santi that should be found in a person whose faith is deeply rooted in this religion is next explained. Wide study is necessary for a clear understanding, without which even a godly person will not have firm faith in his religion. Without faith the teachings of religion bear no fruit. Such faith is the outcome of disciplined habit from early age. Such discipline and habit constitute *Samskaram*, and they set up one's view point (bhavana). Our religions set out three different view points :—(1) that the world is all misery and must be annihilated ; (2) that all but the self (atman) is misery and so must be got rid of ; and (3) that the entire world, the self and the non-self, is real and essentially blissful and so must be had. The last is the view-point of Sri Ramanuja's religion. It proceeds upon the footing that all souls and all things are God's proprium and exists for His use and so the world is good and blissfull to all. The conduct of a person with such an outlook should be appropriate to it. If so, he becomes exalted as a great soul, as a great philanthrophist and even as an Avathar. He would be like God both in his life and in salvation !

The second Chapter begins with an examination of the doctrine of karma, in order to first eliminate the delusion of confounding the self with the body he inhabits. Unless man is

responsible for his actions he cannot be the subject of virtue or sin. Past actions, God's will, etc., how far interfere with man's freedom, to what extent man is a responsible agent and similar questions are next dealt with as expounded in various religions, and how the religion of Sri Ramanuja stands in relation to them is explained. This is a most important question asked about our religion by modern students. The answers given here are sure to convince them. It is also shown that several conflicting theories regarding the nature of karma are reconciled in the religion of Sri Ramanuja. The Veda says, "The worship (aradhana) of the Lord is virtue (Punya) and offending him is sin (Papa). God's decrees of reward or punishment are respectively the causes of our happiness and misery." Hence it follows that man gifted with intelligence and freedom and capacity to act, is responsible for his actions. Doing the works pleasing to God with such knowledge is *Karma Yoga*. It aims at no other object than the pleasing of God. *Karma Yoga* leads to the contemplation the essential nature of the self and eventually to the realisation of the self as inherently good and uniform in all, as the property and the instrument of God, as eternal and as possessing the power of accomplishing the desired end. The use of such a realisation is explained in the later chapters.

Gnana Yoga is explained in the third chapter. The Sastras seem to set forth three different paths for reaching the ultimate goal—*Karma, Gnana,* and *Bhakti.* Each path by itself will not lead to the goal. Persisting in one of them alone may sometimes lead to undesirable results. They are shown to be harmonised in Ramanuja's religion. The entire topic is illustrated by copious authority from the sacred books, and by special reference to a story in the Vedas.

In the fourth chapter is expounded the *Bhakti Yoga,* which is attained by works performed with the true understanding of the self. The essential element in *Bhakti Yoga* is *Santi* which is the negation of desire, anger, delution, etc.

The division of Deva, Man and Asura (Demon), results from the predominance of one or the other of these evil qualities. To attain *Santi, Samadarsana* (viewing all as one and equal) must be developed. For that purpose, the high qualities of soul, namely, Dama (the controling of the senses) Dana (giving) and Daya (mercy) must be nourished and made to grow. This in its turn is effected by weeding out to the root, *Kama,* (desire) *Krodha* (Passion) and *Lobha* (avarice). Here a story from the Upanishads is quoted in illustration. *Bakti Yoga,* therefore is, the unbroken meditation of God with overflowing love, with perfect Santi, gained by the suppression to the root of the evil qualities opposed to it. As the Bhakti Yoga grows, higher experiences up to the realisation of the LORD HIMSELF, develop step by step. Archana (puja to the person of God) Namaskara (devotional prostration), Yatra (pilgrimage) Dhyana (meditation) etc., are in the beginning the limbs or the means of Bhakti Yoga. But in the ultimate realisation, they merge in it. At that stage it is called *Kriya Yoga* (the Yoga of Service). Bakti is essentially pleasent (Ananda). Hence its fruit, namely, the realisation of the Brahman and Brahman Himself are alike bliss-full (Ananda). It is *all-bliss* unmixed. There is no happiness or misery in the nature of things. Happiness and misery are due to man's karma and the differences of time and place, all in the respect of the same thing according to the will (Sankalpa) of God. Hence when viewed as His, all things are good and pleasant. This great ideal of viewing the world and acting in accordance thereto, is the supreme teaching of Ramanuja's Religion. Hence this religion is called *Sarva Anukula Siddhanta* (the religion of seeing good in all.) To one, who follows it, this very life is the enjoyment of the bliss of Heaven.

Moksha Samrajya (The Kingdom of Heaven) is the topic of the fifth chapter. The enjoyment in Heaven must be illustrated only by human exp eriences. Hence the Sastras various-

ly illustrate the relationship of the Lord to man by the relationships existing between the lover and the beloved, the teacher and the pupil, father and son, master and servant, the archer and his butt, and so on. They are separately elucidated with authority. Any one of the above ways suited one's temperament may be adopted for the development of Bhakti with intense devotion on the richesse of Salvation (Moksha Aiswaryam). The greater the intensity of such meditation the greater would be the love towords the world, which is a richesse of the Lord. Needless to say that the conduct of the man imbued with such love would be catholic beyond description. Such is the grandeur of the teaching of our religion. In this connection certain adverse criticisms levelled against Puranic stories such as *Rasakrida* (the sport with the shepherdesses) of Sri Krishna, are answered.

The last and the sixth chapter deals with the climax of Moksha Ananda (Bliss of Salvation) reached by the growth of Bhakti Yoga and which is attained *in this very life* namely the Service of God. This is the supreme teaching of all Sastras. Such service of God is no other than doing good to others (para upakara.) The Sanatana Dharmas (dharma for all times and places) common to all mankind and the Varna Asrama Dharmas prescribed for the different castes etc., laid down in the Smritis and the like, and the rituals &c., laid down in the Vedas (Vaidika Dharma) have only *para upakara* as their goal. God's first form is the Universe (Viswarupa). The Gita and other Holy Books teach that God regards the doing of good to the world as his best puja. God is the soul (Atman) of the world. Whatever is done for the happiness of the body makes the soul happy. Similarly God feels happy if the world is made happy. The worship of God in His Holy Image in temples find consummation in *para upakara*. Similarly gift (dana) penance (tapas) etc., are different kinds of *para upakara*. It follows that it is our duty to

perform this kind of aradhana (worship) to God, *i.e.*, *para upaka a* by thought, word and deed. Doing good to others is meri (punya). Injuring others is sin (papa). The vedas say that at birth man is debted to gods, rishis, and the fathers. The discharge of these debts are the different modes doing *para upakara*. Of all the flowers that we may place at the feet of God *para upkara* is the best. This chapter finishes by quoting a beautiful address to a tree contained in Sri Bhagavata, which brings out how the tree ministers to the comforts of all beings by every one of its belongings from the root to the dried leaf.

These lectures may thus be summed up. An intelligent man learning the satras must first subdue the evil qualities like passion and anger, develop santi; perform the duties laid on him with a full sense of responsibility realising that he and all the creation are God's own and exist only to see His Divine purpose; view, therefore, every one and everything as good, beneficent, and blissful, like God and as part of God; develop an intense love and devotion to God the soul of all souls, desist from doing what He abhors and render services pleasing to Him and thereby enjoy His blissful communion; and realise that the service most acceptable to God is the doing of good to the world (*para upakara*), and accordingly regulate his conduct in life.

N. SRINIVASACHARYA.

ஸ்ரீ:

முகவுரை

பகவத்ராமானுஜஸித்தாந்தத்தைப் பரவச்செய்ய ஸ்ரீமான்கள் ஏ. ரெங்கஸாமி அய்யங்கார், என். கோபாலசாமி அய்யங்கார் இவர்களால் தங்கள் உடன் பிறந்தாள் பெயரால் ஏற்படுத்துப்பட்ட ருக்மணீ உபந்யாஸ பரம்பரைகளில் இரண்டாவது வருஷத்தில் நடைபெற்ற உபந்யாஸங்கள் இச்சிறு புஸ்தகத்தில் ஸங்கிரஹிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை உபந்யஸித்த மஹோமஹோபாத்யாய பண்டிதரத்தினம் மஹாவித்வான் லக்ஷ்மீபுரம் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசாரியஸ்வாமி மைசூர் சமஸ்தானத்தில் பண்டித கோஷ்டியில் முதன்மையான ஸ்தாநத்தை வஹிப்பவர். ஜாகாதுஷ்டான பூர்த்தியையுடையவ ராயிருப்பதொரு புறம் நிற்க, மற்றொருபுறம் பிறமதஸ்தர்களாலும் இக்கால வித்யாவாஸாதிகளில் முழுகிக்கிடப்பவர்களாலும்கூட பஹுமானிக்கப்படத் தக்க சாந்தி நடுவு நிலைமை முதலிய ஆத்ம குணங்கள் நிறைந்தவர். தம் மதத்தில் ஆழ்ந்த நிலையுடையவராயிருக்கச் செய்தேயும் பிறமதங்களில் குணங்களையே உற்று நோக்கும் ஸ்வபாவத்தை யுடையவர். இது இவ்வுபந்யாஸங்களைப் படிப்பவர்களுக்கு எளிதில் அறிந்து கொள்ளும்படியிருக்கும். இவ்வுபந்யாஸங்கள் இந்த ஸ்வாமியின் நீண்டகாலத்தவையும், கணக்கற்ற கிரந்த பராமர்சத்தினுடையவும், பரந்த ஆராய்ச்சியினுடையவும், அநுபவத்தினுடையவும் நம்பிக்கையினுடையவும் ஸாரம் என்னலாம்.

முதல் ஹ்லத்திய உபந்யாஸங்களை நிகழ்த்திய வித்வான் வித்யாரத்நாகரம் கோடவாசல் ஸ்ரீ. உ. வே. ரா. நரஸிம்மாசாரியர் ஸ்வாமியுடையவும் இவருடையவும் அன்ய மதங்களைப் பராமர்சித்து உபந்யஸிக்கும் பிரகாரங்களில் வெகுவாய் ஒற்றுமையே காணப்படும். ஆனதுபற்றி, முதல் ஹ்லத்திய உபந்யாஸங்களுக்கு

இரண்டாவது ௵த்தியவை ஒரு விதத்தில் தொடர்ச்சியானவை யென்றும் பூர்த்தியைக் கொடுப்பவை யென்றும் சொல்லலாம்.

'கற்கக் கசடறக் கற்பவை, கற்றபின்
நிற்க வதற்குத் தக.'

என்னும் குறளின்படியே, முதல் ௵த்திய உபந்யாஸங்களில் நமது நாட்டில் தொன்று தொட்டு வழங்கும் எல்லா பிரஸித்த மதங்களுடையவும் உபதேசங்கள் அவ்வோ மதாசாரியர்களுடைய கிரந்தங்களிலிருந்து திரட்டி நவநீதமாக வெளியிடப்பட்டன. இவற்றின் நேர்களில் பகவத்ராமானுஜ ஸித்தாந்தம் நிற்கும் நிலை இந் நவநீதத்தில் தெளிவாகக் காட்டப்பட்டது. இத் தெளிவையடைந்தவர்கள் இங்கிருந்த காலம் நடந்துகொள்ளவேண்டிய அநுஷ்டான முறைகளை இரண்டாவது வருஷத்திய உபந்யாஸங்கள் வெளியிடுகின்றன வென்னலாம்.

'ஶீலவ்ருத்தபலம் ஶ்ருதம்'
(ஆசாரமும் ஒழுக்கமுமே கற்றதினுலாய பயன்)

என்று மனுமுதலிய ரிஷிகள் உபதேசித்தார்களிறே!

இப் புத்தகத்தின் முதலத்தியாயத்தில் சாஸ்திரங்கற்பதின் முக்கியப் பிரயோஜனம் சாந்தி (அமைதி) என்னும் பெருங் குணத்தைப் பெறுவதே யென்பதும், அத்தகைய சாந்தியும் பலவேறு சமயங்களைக் காமம் கோபம் எனும் மாசுகளற்ற மனத்துடன் பராமர்சிப்பதாலடையத்தக்கதென்பதும், அங்ஙனமேதான் மதாசாரியர்களனைவரும் ஸங்கல்பம் செய்து தந்தம் சமயங்களைப் பரப்பியிருக்கிறார்களென்பதும், அப்படிச் செய்வதில் 'நிற்கின்றதெல்லாம் நெடுமால்' என்று 'எல்லாம் கடவுள், எல்லாம் அவனுடல், அவனுடைமை' என்றுபதேசிக்கும் பகவத்ராமானுஜ ஸித்தாந்தத்தில் நிலை பெற்றவர்களுக்கிருக்க வேண்டிய சாந்தியின் பெருமையும் முற்படவிளக்கப்பட்டது. விரிவாய்ப் படிப்பதினுல் பகுத்தறிவுண்டாக வேண்டும். அஃதின்றி ஆஸ்திகனுக்கின்றியமையாததான தன் மதத்திடத்துத் தீர்ந்த நிலையுண்டாகாது. இந் நிலையில்லையேல் மதோபதேசம் வீணேயாகும். இந்நிலையும் சிறுபிராய முதல்

பெரியோர்களால் பழக்கப்படும் ஸம்பிரதாயத்தைத் தொடர்ந்து நடப்பதால் அடையத்தக்கதெனப்பட்டது. இத்தகைய பழக்கம் அல்லது பாவனைக்குத்தான் ஸம்ஸ்காரம் என்று பெயர். இதுதான் நம் நாட்டுச் சமயங்களில் பொதுவாய் ஸகல உபசம பாவனை, (பிரபஞ்சம் முழுவதும் துக்கமயமாய் ஒழிக்கத்தக்க தாய் பாவித்தல்) ஆத்மாதவிர ஸகல உபசமபாவனை (ஆத்மா ஒன்றே நிற்க மற்றதெல்லாம் ஒழிக்கத்தக்கதாய் பாவித்தல்) ஸகல பிராப்திபாவனை (பிரபஞ்சம் முழுவதையும் உளதாய் அடையத் தக்கதாய் பாவித்தல்), என மூன்று வகுப்புகளில் பிறியக்காணப் படும். பகவத்ராமானுஜ ஸித்தாந்தத்தின்படியில் மூன்றாவதான பாவனை உபதேசிக்கப்படுகின்றது. எல்லாரும் எல்லா வஸ்துக்களும் பகவானுடைமையாய் அவன் பிரயோஜனத்துக் காகவே யுள்ளவையாதலால் பிரபஞ்சம் அனுகூலமாயும் ஸுகமய மாகவும் உளது; இப்படிக்காணும் மனிதனுடைய பிரவிருத்திகளும் இந்த பாவனையையே அனுசரித்திருக்கும்.இவனையே மஹாபுருஷன் மஹாஉதாரன் அவதார புருஷன் என்று உலகம் கொண்டாடும். இவனுக்கு ஸம்ஸாரதசையிலும் மோக்ஷதசையிலும் ஒக்கப் பரமாத் மாவுக்குச் சமானமாயிருக்கும் தன்மை யுண்டாவது திண்ணம்.

இரண்டாவதத்தியாயத்தில் ஆஸ்திகன் சரீரமே ஆத்மா என் னும் மயக்கத்தை முற்படக்கழிக்க வேண்டியதின் பொருட்டுக் கருமம் என்பதின் உண்மை விசாரிக்கப்படுகிறது. மனிதன் தான் செய்யும் காரியங்களுக்கு உத்தரவாதியானுலொழியப் புண்ணியம் பாவம் என்னும் வரம்புகளுக்குக் கட்டுப்பட்டவனுகான். பூர்வ கருமங்கள், ஈசுவரஸங்கல்பம் முதலியவை எம்மட்டில் இவனுடைய பிரவிருத்திகளில் சம்பந்தப்படுகின்றன, இவனது பொறுப்பு எம் மட்டில், என்பது முதலியவைகளைப்பற்ற அவ்வோ மதங்களில் சொல்லப்படும் பிரகாரமும் நம்பி ராஜமானுஜ தர்சனத்திலிருக்கும் படியும் இவ்வதிகாரத்தில் பரக்கப் பேசப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்னை இக்காலக்கல்வியிற் பயின்றவர்கள் நமது மதத்தைப்பற்றிக் கேட்குமவைகளில் மிகவும் முக்கியமானது. இங்கு சொல்லப் படும் உத்தரமும் அவர்கள் மனத்துக்குப் பூர்ணமான சமாதானத் தைக் கொடுக்குமென்பதும் நிச்சயம். கருமத்தின் ஸ்வரூபத்தைப்

பற்றப் பிறமதங்களில் சொல்லப்படும் விவாதங்களெல்லாம் பகவத் ராமானுஜ மதத்தில் சமரஸமாகின்ற பிரகாரமும் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. வேதமானது 'பரமபுருஷனுடைய ஆராதனமே புண்ணியம்; அவனிடத்தில் அபசாரப்படுவதே பாபம் என்று வெளியிடுகிறது. இந்த ஆராதனத்தினாலும் அபசாரத்தினாலும் முறையே உண்டாகும் பகவானுடைய அனுக்கிரஹமும் நிக்கிரஹமும் (தண்டனையும்) நமது சுகதுக்கங்களுக்குக் காரணமாகின்றன ' என்றுபதேசிப்பதால் தன்னறிவையும் சக்தியையும் கொண்டு காரியங்களில் தன்னிஷ்டப்படி பிரவருத்தி செய்யக் கூடிய மனிதன், இவ்வுபதேசத்தை யனுசரித்து நடக்கக் கடமைப் பட்டவனாகிறான். எனவே இவ்வறிவுடன் பகவானுக்குப் பிரீதியை யுண்டாக்கும் வியாபாரத்தைச் செய்வதுதான் கருமயோகம். இதற்கு பகவான் பிரீதி யொழிய வேறு பலன் கிடையாது. கரும யோகத்தினால் பரிசுத்தமான ஜீவாத்மாவின் ஸ்வரூப சிந்தனை யுண்டாகும். இதனால் தன் ஆத்மா தனக்கனுகூலமான ஸ்வபாவத்தை யுடைய தென்றும் ஆத்மாக்களெல்லாம் ஒரே ஆகாரத்தை யுடையவை யென்றும் பகவானுக்கே சேஷமாய் (உடைமையாகவும் கருவியாகவும்) இருப்பவையென்றும், ஆத்மா அழியத் தகாதவனென்றும், தன் பிரவிருத்திகளினால் வேண்டியவற்றை யெல்லாம் முடித்துக்கொள்ளும் சக்தியுடையவனென்றும், அறிந்து கொள்ள சாத்தியமாகும். இப்படித் தெரிந்துகொள்வதின் பிரயோஜனம் வரும் அத்தியாயங்களில் விளக்கப்படுகின்றன.

மூன்றாவது அத்தியாயத்தில் ஞானயோகம் விசாரிக்கப்படுகிறது. பரமபுருஷார்த்தத்தையடைய கருமம், ஞானம், பக்தி என்று வகுத்துக் கூறப்பட்ட உபாயங்களில் கேவலம் ஒவ்வொன்றால் மட்டும் அதை ஸாதிக்கமுடியாதென்பதும், கேவலம் ஒவ்வொன்றை மட்டும் தனியாய் நாடுவதினால் உண்டாகும் கெடுதல்களும், இம்மூன்று மார்க்கங்களும் ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தத்தில் சமரசமாகும் பிரகாரமும், வேதம் புராணம், கீதை, பாஞ்சாராத்ரம் முதலிய பிரமாணங்களைக் கொண்டு நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. முடிவில் எந்தக்காரியத்தையும் தத்துவஞானத்துடன் பகவானுடைய பிரீதியின் பொருட்டுச் செய்யவேண்டியது அவசியமென்று வேதத்

திலிருந்து ஒரு உபாக்கியானத்தை நிரூபித்து வற்புறுத்தப்படுகிறது.

நான்காவது அத்தியாயத்தில் ஆத்மஞானத்தோடு செய்யப்படும் கருமத்தினுல் அடையத்தக்கதான பகவானுக்கு உகப்பான பக்தியோகம் விவரிக்கப்படுகிறது. இதற்கு மூலகாரணமான சாந்தி (அதாவது ஆசை, துவேஷம், மோஹம் முதலியவை யற்றிருக்கும் தன்மை) முற்படத் தெளிவாக்கப்படுகின்றது. இத்தூர்க்குணங்களைக் கொண்டே தேவன், மனிதன் அசுரன், என்னும் பிரிவுகளுண்டாகின்றன. சாந்தியையடைய ஸமதர்சனம் உண்டாகவேண்டும். அதற்குத் துணையாக தமம் (இந்திரியங்களையடக்குதல்) தானம் (கொடை) தயை (அன்பு) ஆகிய ஆத்மகுணங்களைத் தன்னிடம் பெறுக்க வேண்டியது மனிதன் கடமை. இதுவும் இவற்றின் விரோதிகளாகிய காம குரோத லோபங்களை வேருேடு களைவதால் உண்டாகவேண்டும். இந்நீதி ஒரு உபநிஷத்துக் கதையினுல் விளக்கப்பட்டிருக்கிறது. இப்படி விரோதி குணங்களை ஜயித்து பக்திக்கு மூலகாரணமான சாந்தியைப் பெற்று பகவானிடத்தில் இடைவிடாத அளவற்ற அன்பு பெருகும் தியானத்தைச் செய்வதே பக்தியோகம். பக்தியோகம் வளர வளர, பகவானை நேராகக் கண்டு அனுபவிக்கும் வரையில் படிப்படியாக வரக்கூடிய அநுபவ தசைகள் பிறகு விளக்கப்படுகின்றன. அரச்சனை, நமஸ்காரம், யாத்திரை தியானம் முதலியவெல்லாம் பக்தியோகத்துக்கு முதலில் உறுப்புக்களாகவிருந்து அநுபவதசையில் யோகத்தோடு ஒன்றுய்விடுகின்றன. அப்பொழுது இவைகளுக்கு கிரியாயோகம் (பணிவிடையாகிய யோகம்) என்று பெயர் உண்டு. பக்தி இயற்கையில் ஸுக (ஆநந்த) ரூபமானது. அப்படி அதன் பலனுகக் கிடைக்கும் பிரும்மமும் பிரும்மானுபவமும் ஆநந்த மயங்களே. இவற்றிற்கு துக்கத்தின் சம்பந்தமே கிடையாது. உலகத்தில் வஸ்துக்களின் ஸ்வபாவத்தில் ஸுகதுக்கங்கள் என்பதில்லை. கர்மங்களுக் கேடாகவும் காலதேச வித்தியாசங்களாலும் ஒரே வஸ்துவைப்பற்ற ஸுகதுக்கங்களின் பேதங்கள் பகவானுடைய ஸங்கல்ப்பத்தால் உண்டாகின்றன. எனவே, எல்லாம் அவனுடையது என்று நோக்குங்கால், யாவும் நமக்கனுகூலமானவை

யாகவே தோன்றக் குறையில்லை. இப்படி பிரபஞ்சத்தை நோக்கியதன் வழியே நடக்கவேண்டுமென்று உபதேசிப்பது நம்பி ராமானுஜ மதத்தின் உயர்ந்த லக்ஷியம். இதனால் இதற்கு ஸர்வ அனுகூல ஸித்தாந்தம் என்று பெயர் வந்தது. இதைப்பற்றி ஒழுகுகிறவனுக்கு இந்த ஸம்ஸாரமே மோக்ஷானுபவமென்னலாம் படியிருக்கும்.

ஐந்தாவது அத்தியாயத்தில் மோக்ஷ ஸாம்ராஜ்யம் விளக்கப்படுகிறது. மோக்ஷானுபவத்தின் பிரகாரத்தை உலக அனுபவங்களைக் கொண்டே நாம் இந்த ஸம்ஸாரதசையில் தெரிந்துகொள்ள வேண்டியிருப்பதால், அதன் பொருட்டு ஈசவரனுக்கும் ஜீவனுக்கும் உள்ள ஸம்பந்தமானது, நாயகன், நாயகி, குருசிஷ்யன், பிதா புத்திரன், எஜமானன் வேலைக்காரன், அம்பெய்வோன் அவன் இலக்கு, என்றிப்புடைகளில் உள்ள சம்பந்தங்களையிட்டு, சாஸ்திரங்களினால் விளக்கப்பட்டிருக்கிறது. இவைதனித்தனியே பிரமாணங்களால் நிரூபிக்கப்படுகின்றன. இவற்றில் நம்மியற்கைக் கமைந்த ஏதெனுமொரு பிரகாரத்தால் பகவானிடத்தில் பக்தியை (அன்பை) எவ்வளவுக் கெவ்வளவு மிகுத்து மோக்ஷஐசுவரியத்தை அநுஸந்திக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு பகவானுடைய ஐசுவரியமாகிய இந்த பிரபஞ்சத்தைப்பற்றவும் நமது பிரீதி விருத்தியாகும்; அதையனுசரித்து நமது நடவடிக்கைகளும் விசாலப்பட வேண்டுமென்று நமது மதத்தின் ஏற்றமான உபதேசம். இதையொட்டி புராணகதைகளில் ஸ்ரீ கிருஷ்ணனுடைய ராஸக்கிரீடை முதலிய விருத்தாந்தங்களில் . மேல்பார்வைக்குக் காணப்படும் தோஷங்களுக்கு சமாதானங்கள் சொல்லப்படுகின்றன.

கடைசியதாகிய ஆறாவது அத்தியாத்தில் மேழ்க்கூறிய படிகளில் வளர்ந்து வரும் பக்தியோகத்தால் அடையத்தக்க மோக்ஷானந்தத்தின் எல்லைநிலமாயிருப்பதும் இவ்வுலகிலிருந்தே அடையக் கூடியதுமான பகவத் கைங்கரியம் நிரூபிக்கப்படுகிறது. இதைச் செய்வதுதான் எல்லா சாஸ்திரங்களினுடைய்வும் பரம உபதேசம். அதாவது பரோபகாரமெனப்படும் பகவதாராதனம். ஸ்மிருதி முதலியவைகளில் விதிக்கப்படும் பொதுவான ஸநாதன தர்மங்

களும் வர்ணாச்ரமதர்மங்களும், யாகம் முதலிய வைதிக தர்மங்களும் எல்லாம் பரோபகாரத்தையே முக்கிய லக்ஷியமாகக் கொண்டிருப்பது, இங்கு பரக்கக்காட்டப்பட்டிருக்கிறது. பகவானுடைய முதல்ரூபமே பிரபஞ்சம் (விஶ்வரூபம்). அதற்குபகாரம் செய்வதையே பகவான் தன்னுடைய ஆராதனமாகக்கொள்ளுகிறான் என்று கீதை முதலியவற்றால் தெரியவருகிறது. உலகத்துக்கு அவன் உயிராய் நிற்பவன். உடலுக்குச் செய்யும் பணிவிடை உயிரையன்றோ சேருகிறது! உலகத்துக்கு ஸந்தோஷம் உண்டாவதால் அவனுக்கும் ஸந்தோஷம் உண்டாகிறது. கோவில்களில் அர்ச்சாரூபியான பகவானை ஆராதித்தாலும் பரோபகாரத்திலேயே முடிகின்றது. தானம், தபசு, முதலியவையெல்லாம் பரோபகாரம் செய்யும் வகைகள். மனது வாக்கு சரீரம் ஆகிய மூன்று கரணங்களினாலும் இத்தகைய பகவதாராதனத்தையே செய்யவேண்டியதென்னதாயிற்று. பரோபகாரமே புண்ணியம்; பிறரைப் பீடிப்பதே பாவம். தேவர் கடன் ரிஷகள் கடன் பிதிருக்கள் கடன் ஆகிய முக்கடன்களைத் தீர்க்க மனிதன் கடமைப்பட்டிருக்கிறான் என்று வேதத்தில் கூறியிருப்பதும் பரோபகாரக் கடமையைப் பற்றியதே. பகவானுக்கு சமர்ப்பிவிக்கக்கூடிய புஷ்பங்களெல்லாவற்றினும் மேற்பட்டது பரோபகார புஷ்பம். ஒரு விருக்ஷம் தன் வேர் முதல் காய்ந்த இலை வரையிலுள்ள ஒவ்வொரு வஸ்துக்களைக் கொண்டும் பிறர்க்குதவும் உபமானத்தினால், ஸ்ரீ பாகவதத்தில் வெகு அழகாய்க் காட்டப்பட்டிருக்கும் இப்பரமோபதேசம் முடிவில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

எனவே, விவேகியானவன் சாஸ்திரஞானத்தைப் பெற்றால், காமம் குரோதம் முதலிய துர்க்குணங்களைப் போக்கி, சாந்தியை வளர்த்துத் தனக்குறிய கருமங்களை தன் பொறுப்பை யறிந்து செய்து, தானும் பிறரும் பகவானுடைமைகள் அவன் பிரயோஜனத்துக்காக உள்ளவர்களென்று உணர்ந்து எல்லாவற்றையும் பகவானுடைய விபூதிகளாகக் கண்டு அவற்றில் அநுகூலபுத்தியும் சமதர்சனமும் பண்ணி, ஆத்ம பரமாத்மஸ்வரூபங்களை அனுகூலமாகவும் ஆநந்தமயமாகவுமனுபவித்து, எல்லா உயிர்களுக்கும் உயிரான பரமாத்மாவிடத்தில் அளவற்ற அன்பை மிகுத்து, அவனுக்

கபசாரங்களாயும் அவனுக்கு அப்ரீதிகரங்களுமான செய்கைகளை யொழித்து, அவனுக்குகப்பானவையும் ஆராதனரூபங்களுமான காரியங்களைச் செய்து அவனோடு ஒக்க ஆநந்திப்பதே மோக்ஷஸாம்ராஜ்ய மென்பதும், அவற்றிலும் பரோபகார மென்னும் பணிவிடையே அவன் எல்லாவற்றிலும் மேலானதாய் உகந்த கைங்கரியம் என்று எல்லா சாஸ்திரங்களுடையவும் உபதேசங்கள் எல்லா அனுஷ்டானங்களுடையவும் பரம பிரயோஜனம் என்பதும், அதுவே மோக்ஷாநந்தத்தின் எல்லைநிலம் என்பதும் இவ்வுலக வாழ்க்கையிலேயே அது அடையத்தக்கதென்பதும் இவ்வுபந்யாஸங்களின் திரண்ட உபதேசங்கள் என்றதாயிற்று.

க. ஸ்ரீநிவாஸாசாரியார்.

ஸ்ரீ:

ராமாநுஜ தர்சனம்

1930 வருஷத்திய

ருக்மணி உபன்யாஸங்கள்.

முதல் அத்யாயம்.

பீடிகை.

ஶ்ரீராமாநுஜஸித்³தா⁴ந்த நியோகா³தி⁴ஷ்டா²யிந: ।
ஆத்³யம் கர்தவ்யமித்யுக்தம் ஸித்³தா⁴ந்தஸ்ய ப்ரசாரணம் ॥

அறிஞர்களின் கட்டளையை முன்னிட்டு ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தத்தில் செய்யவேண்டிய கடமைகளில் முதலானதென்று விதிக்கப்பட்ட ஸித்தாந்தப் பிரசாரமாகிய இந்த கைங்கர்யம் ஆரம்பிக்கப்படுகிறது.

[சாஸ்திரப் பிரசார பேதங்கள்.]

ஸாமான்யமாய் காலமும் தேசமும் எப்படி மூன்று பாகங்களாகப் பிறிந்திருக்கின்றனவோ அப்படியே சாஸ்திரங்களும் உபதேசங்களென்றும் வியாக்கியானங்களென்றும் விசாரங்களென்றும் மூன்று வகையாகப் பிரிந்திருக்கின்றன. நம் தேசத்தில் உபதேச சாஸ்திரங்களும் வியாக்கியான சாஸ்திரங்களும் அநேக ஆசாரியர்களால் வெகுகாலமாகவும் வெகு பிரகாரங்களாகவும் பிரவர்த்தனம் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இக்காலத்தில் விசார கிரந்தங்களுக்குத் தான் அதிக ஆதரவும் அவகாசமும் காணப்படுகின்றது. இதை யனுஸரித்து மதப் பிரவசனங்கள் நடைபெறவேண்டியதும் அவசியம். அப்படிச் செய்வதில் அவ்வோ மதாசாரியர்களின் உக்திகளை சீர்தூக்கும்போது அவைகளின் தாத்பர்யத்தில் நமது திருஷ்டியை முக்கியமாகச் செலுத்த வேண்டுமே யன்றி வெறும் சப்தார்த்தங்களில் அதிக கவனத்

ஹைப் புகுத்தலாகாது. இதுவேதான் பெரியோர்களின் உபதேசம். எந்தவிஷயத்திலும் அதிகமான தோஷதிருஷ்டியுடன் மனதைச் செலுத்தக் கூடாதென்றூர்கள்.

𑌨 𑌚𑌾𑌪𑍍𑌯𑌤𑍀𑌵 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌦𑍋𑌷𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌪𑌰𑌂 𑌮𑌨𑌃 |
𑌦𑍋𑌷𑍋 𑌹𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑌿 𑌤𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇 ||

என்றூர் ஸ்ரீ குமாரில பட்டாசாரியார். தோஷத்தைக்கண்டு பிடிக்கவேண்டுமென்னும் தீவிரமான நினைவுடன் ஒன்றையும் பரிசீலனம் பண்ணலாகாது. ஏனென்றுல் அவ்வித மனோபாவமுடையவர்களுக்கு அவ்விஷயத்தில் உண்மையில் இல்லாத தோஷங்கள் கூட நிறைந்திருக்கிற மாதிரியாகப் பிரகாசிக்கும். என்று இதன் பொருள் |

[தர்சனங்களின் பிரயோஜனம் சாந்தி.]

எல்லா தர்சனங்களும் ராகத்வேஷங்களை (ஆசை கோபம் முதலியவற்றை) ஒழிக்கவேண்டுமென்றே முக்கியமாக உபதேசிக்கின்றன. ஆகவே மதப்ரவர்த்தகர்கள் தங்தம் தர்சனங்களைப் பரப்பும் நிமித்தமாக காமக்ரோதங்களை வளர்ப்பார்களேயாகில் இதைவிட ஆச்சரியபபடத்தக்க விஷய மொன்றில்லை. ஆனல் அந்தந்த தர்சனங்களின் மூல புருஷர்களின் வார்த்தைகளை ஆலோசித்துப் பார்த்தால் ஒவ்வொருவரும் தமது தமது மதம் ஸம்பந்தப்பட்ட மட்டில் தர்சன நிமித்தமான மேற்கண்ட ராகத்வேஷங்க ளில்லை யென்றே சொல்லியிருப்பது தெரியவருகிறது. உதாரணமாய் புத்த தர்சனத்தில் மாத்யமிக விருத்தி, என்னும் கிரந்தத்தில் நான்காவதுபக்கத்தில்,

𑌸𑌦𑌸𑌤𑍍 𑌸𑌦𑌸𑌚𑍍𑌚𑍇𑌤𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌪𑌕𑍍𑌷𑍋 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 |
𑌉𑌪𑌾𑌲𑌮𑍍𑌭𑌶𑍍𑌚𑌿𑌰𑍇𑌣𑌾𑌪𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 ||

என்று காணப்படுகிறது. இதன் அர்த்தம். உள்ளது இல்லாதது, உள்ளதுமில்லாததும், என்ற பக்ஷங்கள் எந்த ஸித்தாந்தத்துக்கு இல்லையோ அதற்குப் பிறர்களால் எக்காலத்திலும் நிந்தை சொல்லமுடியாது, என்பதே. இதனர்த்தத்தை தீர யோசித்தால் வேறு தர்சனங்களால் தமது தர்சனத்துக்கு ஒரு விரோதமும்

ஏற்படவில்லை யென்று இந்த கிரந்த கர்த்தா அபிப்பிராயப்படு வதாக விளங்குகிறது. மேலும்,

அந்யோந்ய பக்ஷ ப்ரதிபக்ஷ பாவாத்
பரஸ்பரம் த்வேஷிண: ப்ரவாதா: |
நயாநஶேஷாநவிஶேஷமிச்சந்
ந பக்ஷபாதீ ஸமயஸ்ததார்ஹத: ||

தன் பக்ஷமென்றும் எதிரி பக்ஷமென்றும் ஒருவர்க்கொருவர்க் கும் நினைவுண்டாவதால் வெகுவாய் வாதங்களுக்கு பரஸ்பரம் விரோதமுண்டாகின்றது. எல்லா நியாயங்களையும் அவைகள் உள்ளபடியே ஏற்றுக்கொள்ளும் அர்ஹர்மதமோ வென்றால் ஒரு வர் திறத்திலும் பக்ஷபாதியாகமாட்டாது, என்றதினால் தம்மதத் திற்கு வேறெதினாலும் விரோதமென்னும் வாஸனைகூட வர மாட்டாதென்று இவர் எண்ணுகிறது ஸ்பஷ்டமாகிறது. இப் படியே ஸ்ரீ சங்கர தர்சனத்திலும் காணப்படுகிறது.

ஸ்வஸித்தாந்தவ்யவஸ்தாஸு த்வைதிநோ நிஶ்சிதா த்ருடம் |
பரஸ்பரம் விருத்யந்தே தைரயம் ந விருத்யதே ||

துவைதவாதிகள் தங்கள் தங்கள் ஸித்தாந்தங்களின் ஒழுங்கு களில் உறுதியான தீர்மானத்தை உடையவர்களாயிருப்பதால் அவர்களுக்குள் விரோதங்களுண்டாகின்றன. அம்மதங்கள் ஒன்று லும் நமது அத்வைத மதத்துக்கு ஒருவித விரோதமுமில்லை. என்ற மாண்டூக்ய காரிகைக்கு ஸ்ரீ சங்கரபாஷ்யமிருக்கும்படி, இப்படியில் ராகத்வேஷங்களை முன்னிட்டு தங்கள் தங்கள் தர்சன நிமித்தமாகவே ஒருவர்க்கொருவர் கலகப்பட்டிருக்கின்றார்கள். அவர்களோடு ஆத்மைகத்வ (ஆத்மா ஒன்றே யென்கிற) பக்ஷ மாகிற நம்முடைய ஸித்தாந்தத்துக்கு ஒரு விதத்தாலும் விரோத மில்லை. எப்படியென்றால், ஒருவன் தனது கை கால்களால் அடி பட்டாலும் தன் கை தன் கால், என்னும் நினைவினால் தன்னை கோபிப்பதில்லை. அவ்விதமே மற்ற மதங்களினால் நம்மதத் தைப்பற்ற ராகத்வேஷங்களுண்டாக இடமில்லை. அவையெல் லாம் நம்மதத்திலேயே முடிவை அடைவதினால், என்று அர்த்தம்.

இம்மாதிரி வசனங்கள் எல்லா தர்சனங்களிலும் காணப்படுகின்றன.

[இதில் ஸ்ரீ ராமானுஜ மதத்தின் விசேஷம்.]

𑌸𑌰𑍍𑌵𑌂 𑌖𑌲𑍍𑌵𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮

(இவை யெல்லாம் பிரும்ஹ மேயன்றோ? நிற்கின்றதெல்லால் நெடுமால்) என்னும் வேதத் வாக்யத்தை யனுஸரித்து பிரபஞ்சத்தில் காணப்படுபவை யெல்லாம் பிரும்ஹாத்மகம் (பிரும்ஹத்தை ஆத்மாவாக உடையவை) என்று உபதேசிக்கும் நம்பிராமானுஜ தர்சனத்தில் நிலை பெற்றவர்களுக்கு எதைப் பற்றவும் சாந்தி உண்டாவது நிச்சயமாகையால் தர்சன நிமித்தமான ராகத் வேஷங்களுக்குக் கொஞ்சங்கூட இடமில்லை யென்பது தானே விளங்குகின்றது. பிரும்ஹாத் மகத்வ (பிரும்ஹம் எல்லாவற்றிற்கும் உயிர் என்னும்) ஞானத்தால் சாந்தி உண்டாகும் பிரகாரம் பின்னால் விஸ்தரிக்கப்படும். அவன் எல்லாவற்றிற்கும் உயிர் என்றறிந்தால் நமது உடம்பின் அவயவங்களைப்போல் நாமும் பரஸ்பரம் அனுகூலர்களாகவே யிருக்கத் தட்டில்லை. இவ்வர்த்தம்

𑌶𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑌿 𑌮𑌨𑍀𑌷𑌿𑌭𑌿𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌮𑌨𑌸𑍍𑌸𑌦𑌾 ॥

ஞானவான்களால் எல்லா சாஸ்திரங்களும் சாந்தியை உண்டு பண்ணுவதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகையால் எவனுடைய மனது எப்பொழுதும் சாந்தி (அமைதி)யை உடைத்தாயிருக்கிறதோ அவனே எல்லா சாஸ்திரங்களையும் அறிந்தவனாகிறான் என்னும் இதிஹாஸ ஸமுச்சய வசனத்தினால் விளக்கப்படுகிறது. இதின் பொருள் மேல் பக்த்தி யோகத்தைச் சொல்லுமிடத்தில் விவரிக்கப்படும்.

ஸம்பிரதாயம், பலவேறு ஸமயங்களையும் அறிய வேண்டியது அவச்யம்.

இதனால் அதாவது எல்லா சாஸ்திரங்களும் சாந்தியை ஸம்பாதித்துக் கொடுப்பதற்காகவே பிரிவர்த்தித் திருக்கின்றன வென்

பதாலும் எவன் சாந்தனு யிருப்பானே அவனே ஸகல சாஸ்திரங்களேயும் அறிந்தவன், ஏன்பதினுலும் அனேக சாஸ்திரங்களை விசாரித்துப் பார்த்தால்தான் உண்மையான சாந்தி (அமைதி) உண்டாகும், என்னும் பொருளேயும் இந்த சுலோகத்துக்குக் கொள்ளலாம். ஆகையால் பல ஸித்தாந்தங்களேயும் விமர்சித்துப் பார்க்க வேண்டியது மிகவும் அவசிய மென்பதும் தெளிவாகிறது.

𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌵𑌿𑌵𑍇𑌕𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌭𑌿𑌨𑍍𑌨𑍈𑌰𑌾𑌗𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑍈𑌃 ।
𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌵𑌾𑌸𑌿𑌤 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿 ॥

வெவ்வேறு விதங்களான சாஸ்திரங்களாலும் மதங்களாலும் புத்தியானது விவேகத்தை யடைகிறது. அதாவது தெளிவை அடைகிறது, என்றபடி அவற்றைக் கற்க பெரியோர்களே நாடாதவர்களுக்கு அவர்களுடைய வித்யை அதாவதுபடிப்பு அதிகத் தெளிவையடைகிறதில்லே, என்று வாக்யபதி என்னும் கிரந்தத்தில் இப்படி சொல்லப்பட்டிருக்கிறது.

[தன் பகுத்தறிவின் ஆவச்யகதை]

இப்படி பல சாஸ்திரங்களின் பராமர்சத்தோடு தன்னறிவும் கூடினுல் தான் படிப்பு பிரயோஜன முடையதாகும்.

𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌨𑌿𑌜𑌾 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌕𑍇𑌵𑌲𑌞𑍍𑌚 𑌬𑌹𑍁𑌶𑍍𑌰𑍁𑌤𑌃 ।
𑌨 𑌸 𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 𑌦𑌰𑍍𑌵𑍀 𑌸𑍂𑌪𑌰𑌸𑌂 𑌯𑌥𑌾 ॥

(மஹாபாரதம்)

என்கிறபடியே எவனுக்கு ஸ்வயமாக ஞானமில்லேயோ கல்வியை மட்டும் ஏராளமாகக் கற்றிருக்கின்றுனே அவன் சாஸ்திரார்த்தங்களே யறிந்தவனுகான். சமைக்கப்பட்ட உணவின் ரஸத்தை அதைப் பரிமாறும் கரண்டி எப்படி உணராதோ அவ்விதமே இவனும் தன் படிப்பின்ஸாரத்தை அறியமாட்டான்.

[த்ந்தம் மதங்களில் நிலே.]

ஸித்தாந்தங்கள் காளடைவில் வளர்ந்துவந்திருப்பதும் இந்தப் பிரகாரங்களில் தான். பலவேறு சமயங்களேயும் சாஸ்திரங்களேயும் கற்றுணர்ந்து தம் புத்தியையும் உபயோகப்படுத்திசாந்தி

யுடன் பராமர்சித்து ஒரு பக்ஷத்தில் நிலைபெற்றே பெரியோர்கள் தந்தாமுடைய மதங்களைப் பிரவர்த்தனம் செய்துவந்திருக்கிறார்கள். ஒருவருக்குத் தாம் கொண்ட மதத்தில் உறுதியான நிலை வேண்டியது இன்றியமையாதது. இல்லையாகில் அவருக்கும் அவர் மதத்துக்கும் யாதொரு மதிப்புங் கிடையாது.

> பக்ஷோऽங்கீக்ருதோ த்ருடமேவ ந த்யக்தவ்யஶ்ச நிர்பயை: |
> ஹாஸயித்வா ஸ்வயம் தஸ்ய ஶீக்ரம் தத்பயகாரிபி: ||
> ஸந்தி ஸஹஸ்ரஶோ மூர்க்கா: க்வசிதேகோ ஹி பண்டித: |
> தாடிதோऽபி ஸ மூர்க்கைஸ்து அசலோ ய: ஸ புத்திமான் ||

இதன் பொருள். ஒருவன் தான் அங்கீகரித்த பக்ஷத்தைக் கொஞ்சங்கூட பயப்படாமல் தாங்கி நிற்கவேண்டும். தனக்கு உபத்திரவம் செய்பவர்களுக்குப் பயந்தால் தன்மதமும் நிற்காது. நடுவில் தன் பகுத்தறிவையு மிழந்துவிடும்படியான நிலைமையும் வந்துவிடும். உலகத்தில் மூர்க்கர்களே அதிகம். பரிசுத்தமான ஞானத்தை யுடையவன் ஏதோ ஓரிடத்தில் ஒருவன் காணப்படுவான். மூர்க்கர்களால் இடைவிடாமல் வெருட்டப்பட்டாலும் எவன் அசையாமலிருக்கிறானோ அவனே புத்திமானவான், என்று,

இப்படிகளில் குமாரில பட்டாசாரியராலும் ஸ்ரீ வேதாந்தாசாரியாராலும் சொல்லப்பட்ட லோக நியாயங்களை யனுஸரித்தே மதப்பிரவர்த்தகர்களான மூல புருஷர்களாலும் அவர் பின்னோர்களாலும் ஸித்தாந்தங்கள் பிரசுரம் செய்யப்பட்டு விருத்தி யடைந்து வந்திருக்கின்றன.

[அப்பியாஸமும் ஸம்பிரதாயமும்.]

இவ்விதமாக பிரவர்த்திக்கப்பட்டுவருகிற பல மதங்களில் அவரவர்களுக்குத் தந்தம் மதங்களில் ருசியும் ஸ்திதியும் உண்டாவதற்குக் காரணம் பால்யம் முதற்கொண்டு அவர்களுக்கு உண்டாகும் அப்பியாஸமும் தகப்பன் முதலான முறையில் வந்திருக்கும் ஸம்பிரதாயமுமே. இது ஸஹஜஸித்தமாயிருக்கிறது. அவ்வோ மதங்களிலேயே நம்பிக்கைகொண்டு அவற்றை அனுஷ்டித்து வருபவர்களுக்கு அபேக்ஷித பலம் அவச்யம் ஸித்திக்கும், என்

பதும் நிச்சயம் இதுவே பெரியோர்களின் கொள்கை. இதற்கு உசிதமான காரணமிருக்கிறது. எப்படியென்றால், உபனிஷத்துக்களில் பலவிடங்களில் மனிதன் காமமயனென்றும் ஆசைமயனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஒவ்வொருவனும் தான் எதில் ஆசைகொள்கின்றனோ அதன் உருவாகவே ஆகின்றான் என்றர்த்தம். அவன் காமத்துக்கு அனுகுணமாகவே அவனுடைய மனதும் வாக்கும் சரீரமும் தங்கள் தங்கள் வேலைகளைச் செய்கின்றன. அவ்வியாபாரங்களின் பலங்களும் அந்தக் காமத்தையே அனுசரித்து வருமென்பதும் தெளிவாகிறது. இதையே பகவானும் ஸ்ரீ கீதையில்

𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑌾 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌮𑌯𑍋𑌽𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌯𑍋 𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑌦𑍍𑌧𑌃 𑌸 𑌏𑌵 𑌸𑌃 ॥

என்றருளிச் செய்தார். இதனர்த்தம், ஓ பாரதனே! எல்லாருக்கும் தங்கள் தங்களுடைய ஸத்வகுணத்துக்குத் தக்கபடி சிரத்தையுண்டாகிறது. எவனுக்கு எந்த விஷயத்தில் மிகுந்த சிரத்தையிருக்கிறதோ அவன் அதன் உருவமாகவே ஆகிறான். அதை நிறைவேற்றிக்கொள்வதொன்றிலேயே ஆழ்ந்திருக்கிறான். என்று,

[மாண்டூக்ய காரிகையிலும்]

𑌯𑌂 𑌭𑌾𑌵𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑍇𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑌂 𑌭𑌾𑌵𑌂 𑌸 𑌤𑍁 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌤𑌂 𑌚𑌾𑌵𑌤𑌿 𑌸 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾𑌸𑍌 𑌤𑌦𑍍𑌗𑍍𑌰𑌹𑌃 𑌸𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌤𑌂 ॥

எந்த விஷயம் ஒருவன் மனதுக்குப் பிரகாசமாகிறதோ அதையே அவன் எங்கும் காண்கிறான். அதாகவே ஆய்விடுகிறான். பிறகு அதையே காப்பாற்றுகிறான் அதிலேயே அகப்பட்டுக்கொண்டு கடைசியாய் அதையே சேர்ந்துவிடுகிறான். என்று சொல்லப்பட்டது. ஆகையால் இவ்விதமாக நல்வழிகளில் சிறுவயது முதல் உண்டாகும் பாவனையே மனிதனுக்கு மேன்மேலும் நன்மையைக் கொடுக்கத் தகுந்ததென்று விசதமாகிறது.

[அப்பியாஸம் அல்லது ஸம்ஸ்காரத்தின் பிறிவுகள்]

இத்தகைய பாவனை அல்லது பழக்கத்துக்கு ஸம்ஸ்காரமென்றும் அப்யாஸமென்றும் பெயர்கள் சொல்லப்படுகின்றன. இது

தான் எல்லா மதங்களுக்கும் அடிப்படையாகப் பல படிகளில் உபதேசிக்கப்படுகிறது. அவற்றை மூன்று வகுப்புகளாகப் பிரிக்கலாம். அவையாவன : ஸகல உபசமபாவனை, ஆத்மா தவிற மற்ற எல்லாவற்றினுடையவும் உபசமபாவனை, ஸகலப்பிராப்தி பாவனை, என்றபடி.

இவற்றில் முதலிரண்டும் உலகத்திலிருப்பதெல்லாம் துக்க மயம். ஆகையால் அவை நமக்கு பிரதிகூலமானவை. அவற்றை யெல்லாம் ஒழிப்பதே பரம புருஷார்த்தம், என்று உபதேசிக்கின்றன. அதில் முதலாவதான ஸகல உபசமபாவனை யென்பது ஆத்மா, என்று ஒரு வஸ்துவை ஒப்புக்கொள்வது கூட துக்கமானதால் அதுவும் இல்லாத தெசையான ஸர்வ சூன்ய நிர்வாணமே நாம் அபேக்ஷிக்க வேண்டிய பரமபுருஷார்த்த மென்று உபதேசிக்கும். அது பௌத்தாதி மதங்களின்படி. இரண்டாவது பாவனை அத்வைதமதங்களுக்குச் சேரும். அதில் ஆத்மா மட்டும் உண்மையிலுள்ளது. ஸ்வபாவத்தில் அது அனுகூலமானது. மற்றப்படி பிரபஞ்சம் மாயையும் பிரதி கூலமுமானது தான். அதை உபசமனம் பண்ணுவது (ஒழிப்பது) தான் பரமப்ரயோஜனம். அது தான் மதத்தின் பரம உத்தேசம்.

மூன்றுவதான ஸகலப்பிராப்த்தி பாவனையானது எல்லாரும் எல்லா வஸ்துக்களும் பகவானுடைமை. அவன் பிரயோஜனத்துக்காகவே இருக்கின்றன. என்றுபதேசிப்பதினுல் இதன் படியில் எல்லாம் அனுகூலதமமாயும் ஸ்ரகமயமாகவும் காணப்படுகின்றன. இதை யனுசரித்தே பிரவிருத்திகளும் உண்டாகின்றன. எனவே முதலிரண்டு ஸித்தாந்தங்களையும் விநாச ஸித்தாந்தங்க ளென்றும் மூன்றுவதை விகாஸஸித்தாந்த மென்றும் சொல்லக்குறையில்லை.

[ஸ்ரீராமானுஜ மதத்தில் பாவனை ஸம்ஸ்காரம்]

இம்மூன்றுவது மார்க்கம் ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தமாகிறது. சாஸ்திரங்கள் ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை ஸர்வகாமாவாப்த்தி ஸமர்த்தன், அதாவது ஸர்வபோகங்களையும் அனுபவிக்கும் யோக்யதையுடையவன், என்றும் பரமாத்மாவின் ஸ்வரூபத்தை ஸர்வாத்மா, எல்லாவற்றுக்கும் உயிர், என்றும் ஸர்வசரீரீ எல்லாவற்

றையும் தன் உடலாக உடையவ னென்றும் முறை யிடுகின்றன. பூர்வமீமாம் ஸகர்களும் ஜீவனுடைய இந்த ஸ்வரூபத்தை அங்கீ கரித்திருக்கிறார்கள். இவ்விரண்டு ஸ்வபாவங்களை மட்டும் ஆலோ சித்துப் பார்த்தாலும் நாம் எப்படி யிருக்கவேண்டும், என்ன செய்ய வேண்டும், எதை அடைய வேண்டும், என்பவைகளில் பாவனை எத்தகையதாக விருக்க வேண்டிய தென்பது தெளி வாகும். இப்படி ஸர்வானு கூல்ய பவானை எவனுக்கு த்ருடமாக விருக்கிறதோ அவனே மஹா புருஷன், மஹோதாரன். அவதார புருஷன், என்று கொண்டாடப் படுவான். ஏனெனில், இந்த பாவனை ஒருவனுடைய தேகத்தில் அவயவங்கள் பரஸ்பரம் த்வேஷமில்லாமல் பரஸ்பர உபகாரத்தையே அபேக்ஷித்துக் கொண்டு ஆத்மாவுக்கு ஆனந்தத்தைக் கொடுக்க உத்தேசித்துத் தமது வியாபாரங்களை நடத்துவது போலவும் ஆத்மாவுக்குச் சேர்ந்த தெல்லாம் நமக்கும் சேர்ந்ததென்று பாவிக்குமாப்போல வும் மனிதனுக்குப் பிறர் திறத்திலும் பகவான் திறத்திலும் நடக்க வேண்டுமென்று இம்மதத்தில் விதிக்கிறது. இவ்வழியில் நடப் பவன் ஸம்ஸாரதசையிலும் மோக்ஷதசையிலும் ஒக்க இந்த பாவனையின் பலமாக பரமாத்மாவுக்கு ஸமனாய் பரமாத்மாவாக வேயும் ஆய்விடுவான். இந்த ஸித்தாந்தத்தை ஸ்தாபித்த மஹா புருஷனுடைய கெம்பீர மனோபாவத்தைப்பற்றி அதிகமாகச் சொல்லவேண்டுவதில்லை.

———

இரண்டாம் அத்தியாயம்.

கர்மயோகம்.

[கர்மங்களுக்குக் காரணம், நான்குவித வாதங்கள்.]

𑌦𑍇𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌦𑌿 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌕𑌰𑍍𑌮 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌵𑌿𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌕𑌰𑍍𑌮𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑌯𑌾𑌽𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌚 𑌸𑌮𑍍𑌮𑌤𑌮𑍍 ॥

பரம புருஷார்த்தத்தை வேண்டுகிறவர்கள் முதலில்தேஹமே ஆத்மா என்று நினைக்கும் பிராந்தியைக் கழிக்கவேண்டும். அதன் பொருட்டு கருமம் என்பதின் உண்மை இங்கு விவரிக்கப்படுகிறது. கருமமாவது, செய்யப்படும் காரியம். ஜன்மாந்திரங்களில் செய்யப்பட்டவைகளுக்கு அதிருஷ்டமென்று பெயர். அவைகளில் புண்யம், பாபம் என்னும் பிரிவும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. மனிதனுடைய காரியங்களின் பலங்கள் நான்குவிதமான காரணங்களினுல் உண்டாகின்றனவென்று அவ்வோர் பெரியோர்கள் சொல்லுகிருர்கள்.

𑌤𑌤𑍍𑌰 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌦𑍍𑌵𑌾 𑌕𑌾𑌲𑌾𑌤𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑌕𑌾𑌰𑌤𑌃 ।
𑌸𑌂𑌯𑍋𑌗𑍇 𑌕𑍇𑌚𑌿𑌦𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌫𑌲𑌂 𑌕𑍁𑌶𑌲𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃 ॥

(யாக்ஞவல்க்கியஸ்மிருதி.)

அதில் சிலர் மனிதனின் பிரயத்தினமில்லாமல் ஸ்வபாவம் அல்லது இயற்கையினுலேயே அந்தந்தக்காரியங்கள் ஸம்பவிப்பதாகச் சொல்லுகிருர்கள். சிலர் தெய்வத்தினுல் என்பார்கள். மற்றும் சிலர் காலமே காரணமென்றும் வேறு சிலர் அவனவனுடைய புத்தி பூர்வமான பிரயத்தினமே சகல கார்யங்களுக்கும் பலன்களுக்கும் காரணமென்னும் உறைக்கின்ருர்கள். எனவே காரணத்தை நிர்வஹிப்பதில் தெய்வமென்றும் ஸ்வபாவமென்றும் காலமென்றும் புருஷப் பிரயத்தினமென்றும் நான்குவித வாதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவை ஒன்ருென்றும் ஸ்வதந்திரமாய் வேருென்றையும் உதவியாக எதிர்பாராத காரணங்களென்று அந்தந்த வாதிகளின் நிர்வாகம், இவற்றில் ஸ்வபாவவாதத்துக்குப்

புருஷப் பிரயத்தனவாதம் நேர் விரோதமானது என்பது பிரகாச மாய்த் தெரிகிறது.

[ஸமுச்சய (கூட்டு) வாதமே நம் ஸம்பிரதாயம்,]

நம் பெரியோர்கள் காரியங்கள் பலங்கள் உண்டாவதற்கு இந்த நான்கு காரணங்களும் சேரவேண்டுமென்று அவைகளை யெல்லாம் அங்கீகரித்திருக்கிறார்கள். சாஸ்திரங்கள்காரணத்தைத் தீர்மானிக்க மூன்றுவித யுக்திகளைச் சொல்லும். பாதம் (தடை) என்றும் விகல்பம் (இதாவது அதாவது என்பது) என்றும் ஸமுச்சயம் (எல்லாம் கூடினது) என்றும். எனவே நம் பெரியோர்கள் அங்கீகரித்தது ஸமுச்சய பக்ஷமாகும். இவை யெல்லாமே சேர்ந்து தான் ஒருகாரிய முண்டாகவேண்டு மென்பதற்கு ஒரு நியாயமுண்டு. இது ஸ்மிருதிகளில் ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளது. அதாவது?

𑌯𑌥𑌾 𑌹𑍍𑌯𑍇𑌕𑍇𑌨 𑌚𑌕𑍍𑌰𑍇𑌣 𑌨 𑌰𑌥𑌸𑍍𑌯 𑌗𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌏𑌵𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌕𑌾𑌰𑍇𑌣 𑌵𑌿𑌨𑌾 𑌦𑍈𑌵𑌂 𑌨 𑌸𑌿𑌧𑍍𑌯𑌤𑌿 ॥

ஒரே சக்கிரத்தினுலேயே ரதம் எப்படி ஓடமாட்டாதோ அப்படியே தைவத்தின் உதவி யில்லாமல் மனுஷியப் பிரயத்தினத்தினுல் மட்டுமே காரியம் பலம் ஸித்திக்காது என்று. இந்த வசனம் தைவமும் ஒரு காரணமென்பதற்கு பிரமாணம். இதற்கு ஒரு உதாரணமும் இப்படிச் சொல்லப்பட்டது.

𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌸𑌾𑌧𑍍𑌵𑍀 𑌸𑍁𑌤𑌯𑍋𑌃 𑌯𑌮𑌯𑍋𑌸𑍍𑌤𑍁𑌲𑍍𑌯 𑌜𑌨𑍍𑌮𑌨𑍋𑌃 ।
𑌵𑌿𑌶𑍇𑌷𑍋 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨 𑌸𑍌𑌭𑌾𑌗𑍍𑌯𑌾𑌰𑍋𑌗𑍍𑌯 𑌸𑌂𑌪𑌦𑌾𑌂 ॥

பதிவிரதையும் ஸாதுவாயுமுள்ள ஒரேஸ்திரீபெற்ற இரட்டைக் குழந்தைகளிலும் பராக்கிரமம் ஞானம் மங்களங்கள் ஆரோக்கியம் ஸம்பத்து முதலியவைகளும் வித்தியாசம் காணப்படுகின்றதல்லவா? என்று. ஆனுலும் புருஷப்பிரயத்னம் முக்கியமென்றும் அதில் ஸூசிப்பிக்கப்படுகிறது. ஏனென்றால்,

𑌦𑍈𑌵𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌕𑌾𑌰𑍇 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌤𑌤𑍍𑌰 𑌦𑍈𑌵𑌮𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌪𑍌𑌰𑍁𑌷𑌂 𑌪𑍌𑌰𑍍𑌵𑌦𑍈𑌹𑌿𑌕𑌂 ॥

என்கிறபடியே தைவீகமாயும் புருஷப்பிரயத்தினத்தாலும் ஒரு காரியம் ஸித்திக்கு மென்பதில் தைவீகமென்பது புருஷன் தன் முன் ஜன்மத்தில் தான் புத்திபூர்வமாகச் செய்த காரியத்தின் பலன் இப்போது வெளிப்படையாவது தானே ?

இப்படியே முதற் கூறிய மூன்று பக்ஷங்களிலும் உதாஹரணங்களைப் பார்த்தால் இந்தப் பிரகாரமே பலாபல ஸித்திகள் உண்டாகின்றனவென்பது தெரியவரும். புராணகதைகளில் பலவிடங்களில் இவ்வர்த்தம் விளக்கப்படுகின்றது, இவ்விஷயத்தில் நம் பூர்வாசாரியர்கள் அநுக்ரஹித்த மார்க்கமே பிரகாசப்படுத்தப்படுகிறது.

[அதிருஷ்டமான கருமத்துக்கு திருஷ்ட ஸாமக்ரீகளின் ஆவச்யகதை]

அதுதான் முன் சொன்ன ஸமுச்சய பக்ஷம். இதில் முக்கியமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியது அதிருஷ்டம் அல்லது தைவீகமென்பது திருஷ்டங்களை (இப்போது காணப்படும் கருவி செய்கை முதலியவைகளை)க் கொண்டேதான் காரியத்தைச் செய்கிறதென்பதே. பொதுவாய் புண்ணியமென்றும் பாபமென்றும் அதிருஷ்டமென்றும் தைவமென்றும் சொல்லப்படுகிற எல்லா காரியங்களுக்கும் (பலன்களுக்கும்) கருமமே காரணமென்பதை சார்வாகர்கள் தவிற மற்ற எல்லா ஸித்தாந்திகளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அத்தகைய கருமமும் இப்போது காணப்படும் மனுஷ்யப் பிரயத்தினம் முதலிய கருவிகளை சம்பாதித்துக் கொண்டே தன் காரியத்தைச் செய்கிறதென்று கருமத்தை (செய்கை யாகம் முதலியவற்றை) முக்கியமாகக் கொண்ட கருமப் பிராதான்ய வாதிகள் கூறுகிறார்கள்.

நிருபகர்களான ஆஸ்திகர்கள் சொல்லுவது என்னவென்றால் திருஷ்ட ஸாமக்ரீ அதாவது நாம் பார்க்கும் பிரயத்தினம் வஸ்துவின் சேர்க்கை முதலியன குறைவாகவிருந்தால் அது பூர்த்தியாக நேரிடும் வரையில் அதிருஷ்டமென்பது தன் காரியத்தைச் செய்துமுடிக்கத் தகுந்த சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டு தூரத்தில் நிற்குமென்று. இதற்கு மீமாம்ஸா சாஸ்திரத்தில் நியா

யம் ஒன்று சொல்லுவதுண்டு. அதுதான் சித்ராதிகரண நியாயம், என்பது. அதாவது, பசுவை வேண்டுகிறவன் சித்ரா, என்னும் யாகத்தைச் செய்யவேண்டும். யாகம் முடிந்த உடனே அதன் பலமாகிய அதிருஷ்டம் உண்டாய்விடுகிறது. அதற்கு இந்த ஜன் மத்திலேயே இப்போதே பலத்தைக் கொடுக்கக்கூடிய சக்தியிருக் கிறது. ஆனால் அதற்கு வேண்டிய திருஷ்டஸாமக்ரீகள் (பிரத்தி யக்ஷத்தில் காணப்படும் காரியங்கள் வஸ்துக்கள் முதலியன) முழு வதும் சேர்ந்துவிட்டால் அது இப்போதே பசுவாகிற பலத்தைக் கொடுத்துவிடும். இல்லாவிட்டால் காத்திருந்து வரப்போகும் ஜன்மங்களில் தகுந்த காலத்தில் அதைத்தரும், என்று நிச்சயிக் கப்பட்டிருக்கிறது. ஆகவே, திருஷ்டஸாமக்ரீயை அபேக்ஷிக்கா மல் அதிருஷ்டம் ஸ்வயமாகவே தன் காரியத்தைச் செய்துவிடு மென்றால் அது இந்த மீமாம்ஸா நியாயத்துக்கு விரோதிக்கும்.

அதிருஷ்டமே திருஷ்டஸாமக்ரீ (வஸ்துக்)களையும் சம்பாதித் துக்கொண்டு தன் காரியத்தைச் செய்யலாமே யென்றால் அது மனிதனை விதிநிஷேத (கட்டளை தடை) ரூபமான சாஸ்திரங்களுக் குக் கட்டுப்படாதவனாகச் செய்துவிடும். ஏனென்றால் இந்தப் பக்ஷத்தில் தண்ணீர் பிரவாஹத்தில்பரவசனாக அடித்துக்கொண்டு போகப்படுவதுபோல் மனிதன் கர்மப்பிரவாஹத்திலும் பர தந்திரனாய் கொண்டுபோகப்படுவான், என்று விதிப்பதால் அவன் தன் காரியம் ஒன்றுக்கும் உத்தரவாதியாக முடி யாது. இப்படிச் சொன்னால் அதிருஷ்ட வாதத்துக்கும் ஸ்வ பாவ வாதத்துக்கும் அதாவதுமனிதனுடைய சம்பந்த மில்லாமலே விதியினால் அவன் காரியங்கள் நடக்கின்றன, என்னும் நியதி வாதத்துக்கும் ஒரு வித்தியாசமு மில்லாமற் போய்விடும். இதில் மனிதனுடைய ஸ்வதந்திரமான பிரவிருத்தி (முய ற்சி)க்கு ஒரு உபயோகமுமில்லை. விதிநிஷேதரூபமான சாஸ் திரங்களுக்கு விஷயமும் (ஆளும்) ஒரு வருமில்லை. இடம் (தேசம்) காலம் முதலியவைகளைப் பற்றச்செய்யப்படும் வ்யவஸ்தை (ஒழு ங்கு) களுக்கும் அவகாசம் கிடையாது. எங்கும் சோம்பேரித் தனமே தலையெடுப்பதற்கு இது முக்கிய ஹேதுவாய்விடும்.

ஸர்வ வ்யத்யாதிதோ த்ருஷ்டவ்யம் ஸாத்யாதேவ்ய நஸ்ஹ்ருதி: |
கார்யம் தேஹகாராதி நியதேர்வ்யவஸ்திதி: ||

[*நியாயாசாரியர்களின் நிர்ணயம்*]

இவ்விஷயத்தில் நியாயாசாரியரான உதயனாசாரியர் தமது ந்யாயகுஸுமாஞ்ஜலி, என்னும் கிரந்தத்தில் (1-38-58-ல்) கூறியிருப்பதாவது? ஒருகாரியத்துக்கு வேண்டிய திருஷ்டஸாமக்ரீகள் நிறைந்திருந்தால் அதிருஷ்டத்துக்கு ஒருக்காலும் வைகுண்யம் (பலம் கொடாதிருத்தல்) நேரிடாது. அத்தை திருஷ்டங்களான வஸ்துக்களை சௌகரியமாகக் கூட்டுவதே அதிருஷ்டத்தின்பிரயோஜனம். இல்லாவிட்டால் ஒரு வஸ்துவைத் துண்டு துண்டாக விபாகம் செய்யக்கூடிய கருவிகளும் காரியங்களும் இருக்கும்போது அந்த வஸ்து துண்டுகளாகாமலிருக்க வேண்டிவரும். இது ஸம்பவியாது. இப்படி வேறு உதாஹரணங்களையும் காணலாம். மேலும் நமது அனுபவத்தில் விரைகளை விதைக்கும்போது அவைகளின் (பாகஜாதி விசேஷங்களை) பக்குவம் ஜாதிமுதலியவைகளை அனுசரித்தல்லவோ அவைகளைப்பற்ற கிருஷி முதலியகாரியங்களைச் செய்கின்றோம். அதன்மேல் கிருஷி பலிப்பது அதிருஷ்டத்தின் காரியமாகினும் திருஷ்டங்களான (காணப்படுமவைகளான) விரை அதன் ஜாதி பக்குவம் புருஷப்பிரயத்தினம் முதலியவைகளை யெல்லாம் சேர்த்துக்கொண்டுதான் அதிருஷ்டம் வேலை செய்கிறது. இப்படியே தான் பிரஜைகளும் உண்டாகின்றன. ஆனால் ஸ்ருஷ்டி முதலிய காலங்களில் அதிருஷ்டத்தால் மட்டும்தான் முதல் ஸ்ருஷ்டிகள் உண்டாகின்றன. அப்போது திருஷ்டஸாமக்ரீ ஒன்றுமில்லை. அதிருஷ்டத்தினாலேயே அவ்விசேஷங்கள் சேர்ந்து காரியங்கள் உண்டாகின்றன. அதற்குப்பிறகும் இப்பொழுதும் அதிருஷ்டத்தோடு திருஷ்டங்கள் கூடியே காரியங்கள் சம்பவிக்கவேண்டும். இல்லாவிட்டால் அதே நியாயத்தைக்கொண்டு கிருஷி முதலிய லௌகிக வியாபாரங்களும் தடைப்பட வேண்டிவரும். லோகஸித்தமான கார்ய காரண பாவமும் ஒரு நிலை (வ்யவஸ்தை)யில் நில்லாது. எனவே, அதிருஷ்ட கர்மங்கள் திருஷ்டகர்மங்களுடைய வ்யவஸ்தையை (நிலைமைகளை) யனுசரித்தே ஸுகம் முதலிய போ

ங்களுக்குக் கருவிகளாகின்றன, என்றதாயிற்று. ஆகையால் கண் காணிக்கப்பட்ட (திருஷ்டங்களான) ஸாமக்ரீகளை அதிக்கிரமித்து வேலை செய்யக்கூடிய தடங்கலற்ற சாமர்த்தியம் அதிருஷ்டத் துக்கு இல்லையென்றும் சொல்லிற்றாயிற்று, என்று.

[ஸ்ரீ வேதாந்தாசாரியரின் தாத்பர்யம்]

ஸ்ரீமத் கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகையில் (3-8-ல்) ஸ்ரீநிக மாந்த மஹாதேசிகன் அருளிச்செய்வதாவது? கருமங்கள் நிய தங்களென்றும் அநியதங்களென்றும் இருவகையாயிருக்கும். பிர பல சாபம் முதலியவற்றால் உண்டாகுமவை நியதங்கள். மற்றவை அநியதங்கள். நியதங்களென்பவை அவற்றிற்குக் குறிப்பிடப் பட்ட தேச (இடம்) காலங்களில் பலத்தைத் தட்டின்றி கொடுப்ப வை. அநியதங்களாவன? தேசகாலம் முதலிய நியமங்கள் (நிர்பந் தங்கள்) இன்றியே பலம் கொடுப்பவை. இவைகளில் புருஷப் பிரயத்தினத்துக்கு அவகாச (இட)முண்டு. இவற்றைக் குறித் துத்தான் பிராயச்சித்த சாஸ்திரம் மந்திர சாஸ்திரம் வைத்திய சாஸ்திரம் நீதி சாஸ்திரம் முதலியவைகள் ஏற்பட்டிருக்கின்றன. புருஷப் பிரயத்தினமில்லாமல் காரியமுண்டாவதானால் சத்துருக் கள் ஸமீபத்தில் வந்திருந்தபோதிலும் வீரபுருஷர்கள் சதுரங்க சேனையைச் சேர்ப்பதில்லையாய்விடும். வியாதியாய் படுகிறவர்கள் மருந்து சாப்பிடாமலிருக்கவேண்டியதாகும். சாஸ்திரங்கள் ஒன் றுமே உபயோகப்பட இடமில்லை. அதாவது ஆயுஷ்காம இஷ்டி (ஆயுளை விருத்திசெய்யும் யாகம்)முதலானவைதிகவிதிகள் பிரயோ ஜனமற்றுவிடும். ஆத்மஹத்தி (தற்கொலை)யை தோஷமென்று சொல்லும் சாஸ்திரத்துக்கு விஷயமும் (உள்பட வேண்டிவரும்) இல்லாதொழியவேண்டும், என்று.

[பரமாத்மாவின் ஸ்வாதந்திரியம்.]

ஆனால் ஜீவன் பரமாத்மாவுக்குப் பரதந்திரனன்றோ? அவ னுக்குட்பட்டுத்தானே ஜீவன் தன் காரியங்களைச் செய்கின்றான்? ஆகையால் இவன் விஷயத்தில் விதி நிஷேத சாஸ்திரங்களுக்குப் பிரயோஜனமில்லையே? என்றால், இதற்கு ஸ்ரீ ராமானுஜாசாரியர் பகவத்கீதா பாஷ்யத்தில் (18 அத்.) சமாதானம் அருளிச்செய்

கிறர். இதற்கு ஸாபேக்ஷ ஈசுவரவாதம், என்று பெயர். இது பாதராயணுசாரியரின் மதம். அதாவது சைவாகமம் முதலியவற்றிலும் சில புராணங்களிலும் ஈசுவரன் நிரங்குச (ஒருவித வரம்புக்கு முட்படாத) ஸ்வதந்திரனென்பதை ஏற்றுக்கொண்டு அதிலீடுபட்டு தன்னிமித்தமாய் தோஷங்களெல்லாம் குணங்களாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. மனிதனுக்கு பூர்ண சுதந்திரத்துடன் காரியம் செய்யும் யோக்யதையில்லை யென்பதினுல் அந்தப் பக்ஷத்தில் ஒரு குறைவுமில்லை. எனவே அவன் ஒருவ்யவஸ்தை (ஒழுங்கு)க்கும் கட்டுப்பட வேண்டியவனுகிறதில்லை. இது மஹா தோஷமாகும் நமது மதத்தின்படி அவ்விதமில்லை. அவயவங்களோடு கூடின சரீரமென்ன, இவனுடைய பூர்வ புண்ய பாபங்களென்ன, உசிததேசம் காலம் என்ன, இவை முதலிய ஸாமக்ரீகள் சேர்ந்திருக்கும்போது இவற்றின் மத்தியில் பரமேசுவரன் ஸர்வஸ்வதந்திரனுய் தன்னிச்சையால் வந்துசேர்ந்து மனிதன் துவக்கிய காரியத்தை நடத்தி முடித்துவைப்பதால் ஈசுவரனை அதிஷ்டாதா (உள்ளிருந்து நடத்துகிறவனென்றும், காரயிதா (செய்விக்கறவன்) என்றும் சொல்லுகிறது. இவ்வகையால் அவன் காரியங்களுக்குக் காரணமாயிருப்பது (ஹேதுத்வம்) பாயும் ஜலம் பாத்திகளிலுள்ள பலவித விரைகளும் முளைப்பதற்குக் காரணமாகிறது போல்தான். எல்லாப் பாத்திகளிலும் ஒரேவிதமான ஜலம் பாய்ந்தாலும் விரைகளின் வகைப்படியே முளைக்கும் பலன்களும் உண்டாவதுபோல் ஈசுவரன் பொதுக் காரணமாய் எல்லாக்காரியங்களையும் நடத்திவைப்பவனுனும் அவனவனுடைய பிரயத்தினம் முதலியவற்றை யனுசரித்தே அவனவனுடைய காரியங்களும் அவைகளின் பலன்களும் உண்டாகின்றன. ஜீவனும் ஒரு காரியத்தில் தன் புத்தியைக்கொண்டே பிரவிருத்திக்கிறுனுகையால் மற்ற ஸாமக்ரீகளுக்கு நடுவில் இவன் ஸ்வதந்திரனுகவும் விதிநிஷேத சாஸ்திரங்களுக்குக் கட்டுப்பட்டவனுகவும் இருக்கத்தட்டில்லை. இதுதான் ஸ்ரீ கீதையின் உபதேசம்.

அதிஷ்டாநம் ததா கர்தா கரணம் ச ப்ருதக்விதம் |
விவிதாஶ்ச ப்ருதக்சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம் ||

சரீரத்தை சம்பந்தப்படுத்தும் ஒருவஸ்து. செய்கிறவன், பல விதங்களான இந்திரியங்கள் பிராணவாயுவின் பலவித சேஷ்டைகள், ஐந்தாவதான தைவம், இவையெல்லாம் சேர்ந்து ஒரு கருமம் செய்யப்படுகின்றது. என்று. இவ்விடத்தில் ஸ்ரீமத் தாத்பர்ய சந்திரிகையில் அருளிச்செய்யப்படுகிறதாவது ?

ஜீவன் ஒரு காரியத்துக்குக் கர்த்தாவாகும்போது தன் அறிவு (ஞானம்) அக்காரியத்தைச் செய்யவேண்டுமென்னும் ஆவல் (சிகீர்ஷை) அதில் முயற்சி (பிரயத்நம்) இவைகளை முன்னிட்டு மற்றும் வேண்டிய கருவிகளையும்கொண்டு பிரவிருத்திக்கிறுணையால் இவன் சுயேச்சையாகச் செய்கிறுணுகிறுன். இவனுக்கு ஞானம் முதலியவற்றை பரமாத்மா கொடுப்பதால் இவன் பரதந்திரனெனப்படுகிறுன். இவ்விரண்டுக்கும் பரஸ்பரம் விரோதமில்லை. ஏனென்றால் ! பூர்வபக்ஷீ (எதிராளி) சொல்லுகிறபடி பரமாத்மாவின் ஸ்வாதந்திரியம் காற்றும் ஜலமும் வஸ்துக்களை அடித்துக்கொண்டு போவதுபோல் ஜீவனைத் தள்ளிக் காரியம் செய்விப்பதில்லை. அப்படியானல் ஜீவனைக்குறித்து இதைச்செய், அதைச் செய்யாதே, என்றபடிகளில் சாஸ்திரங்கள் ஒரு கட்டளையையும் விதிக்கமுடியாது. அதிக பலசாலியான மற்ருருவனல் எடுத்துக்கொண்டு போகப்பட்டும் தடுக்கப்பட்டுமிருக்கும் ஒருவனைக் குறித்து நீ நில், நீ போ, என்று எப்படி உத்திரவுசெய்யக் கூடும் ? எந்த விஷயத்தில் பரமாத்மா ஜீவனைப் பிரவிருத்திக்கும்படி செய்கிறுனே அதிலிருந்து திரும்ப இவனல் முடியாதாகையால் அதைச் செய்யாதே, என்று இவனைக்குறிததுத் தடுப்பது (நிஷேதம்) பிரயோஜனப்படாது. அப்படியே எதில் பரமாத்மா இவனைத் தூண்டிக் கார்யம் செய்விப்பதில்லையோ அதில் முயலுவதும் இவனுக்கு அசக்யமானதால் அதைச் செய், என்று கட்டளை (விதி) யிடுவதும் பலனற்றதாய்விடும். இந்தப் பூர்வபக்ஷம் எல்லா விததாந்திகளாலும் பேசப்பட்டது. அதின் ஸாராம்சம் இங்கு சொல்லப்பட்டது.

[சாஸ்திரத்துக்கு அவகாசம் (இடம்,)]

இங்கு ஒரு ஸம்சயம் உண்டாகலாம். அதாவது ? நிக்கிரஹத்தையும் அநுக்கிரஹத்தையும் தரவல்ல பூர்வ அதிருஷ்டத்

துக்கு ஆளாயிருக்கும் புருஷன் தானே நிக்கிரஹத்துக்கும் அனுக் கிரஹத்துக்கும் உத்தரவாதியாவது பொருந்துமா ?

> 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌽𑌨𑌗𑍍𑌰𑌹𑍇𑌶𑌾𑌨 𑌵𑌿𑌧𑍌 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌿𑌤𑌃
> 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌽𑌨𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑍍𑌹𑌃 𑌸𑌨𑍍 𑌉𑌦𑍀𑌤𑌂 𑌵𑌿𑌧𑌿𑌦𑍈𑌵𑌤𑌮𑍍 ॥

என்று இதற்குப் பொதுவாய்ச் சொல்லப்படும் ஸமாதானத்தின் ஸாராம்சமாவது புருஷன் தன்னுடைய பூர்வ அதிருஷ்டத்தின் மூலமாய் சாஸ்திரத்தை அதிகரிக்கும் (வழிபடும்) தெசையை அடைகிறான். அதினால் இது இந்த புருஷார்த்தத்துக்கு உபாயம் என்று அறிந்துகொண்டு தன் புத்தியினால் அதற்குவேண்டிய திருஷ்ட ஸாமக்ரீகளையும் ஸம்பாதித்துக் கொண்டு அந்த உபாயத்தில் பிரவிருத்திக்கிறான் எனவே சாஸ்திரத்துக்கு இவனிடத்தில் உபயோக மிருக்கிறது, என்று தெரிகிறது. என்று.

> 𑌤𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌽𑌦𑍃𑌷𑍍𑌟𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌶𑍍𑌯𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑌨𑌾𑌤𑍍 ।
> 𑌸𑌾𑌧𑌨𑌸𑍍𑌯 𑌤𑌯𑌾𑌽𑌦𑍃𑌷𑍍𑌟𑌸𑌂𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑍈𑌵 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥
> 𑌸𑌾𑌹𑌾𑌯𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌾𑌯𑌤𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑍇𑌸𑍍𑌵𑍈𑌰𑍍𑌯𑌾 𑌸𑌾𑌧𑌨𑍈 ।
> 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 𑌤𑌤𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑍌𑌰𑍍𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌽𑌦𑍃𑌷𑍍𑌟𑌚𑍋𑌦𑌨𑌾 ॥

அதாவது, ஜீவனுக்கு ஸ்வாதந் திரியமாவது, ஒரு காரியத்தில் இழிய சக்தியுள்ளவனுக்கு அதில் இச்சை பிறந்தால் அதை அவன் முடித்துக் கொள்வதில் பிறர்களால் தடுக்கப்படாம லிருத்தல், ஆனபின்பு புருஷப் பிரவிருத்திகளில் காணப்படும் பேதங்களுக்கு அவரவர் அதிருஷ்டங்களின் பேதங்கள் காரணமானாலும் அதே அதிருஷ்டமானது சாஸ்திரத்தை முன்னிட்டுக் கொண்டே வேறு அதிருஷ்டத்தையும் உண்டாக்குகிறது. பூர்வஜன்மத்தில்இப்போது அச்வமேத யாகத்தைச் செய்துவைப்பதற்குக் காரணமான அதிருஷ்டம் பண்ணப்பட்டிருந்தபோதிலும் அது மாத்திரமே இந்த ஜன்மத்தில் மேற்படியாகத்தை முடித்து வைப்பதில்லை. ஆனால் சாஸ்திரத்தைக் கற்று அதனாலுண்டாகும் ஞானம். பலத்துக்காகச் சொல்லப்பட்ட உபாயத்தைச் செய்வதில் இச்சை, அதை முடிக்கும் பிரயத்தினம், இவற்றைக்கொண்டு மற்றும் வேண்டிய ஸாமக்ரீ (வஸ்துகருவி) களையும் சம்பாதித்துக் கொண்டு தான் அந்த அதி

ருஷ்டம் தன் காரியத்தைச் செய்கிறது. அதாவது மேற்படியாகத்தை நிறைவேற்றி வைக்கிறது. இப்படியே பாபத்துக்கு மூலமான அதிருஷ்டமும் சாஸ்திரத்தை அறிந்து நடக்கும் தெசையை யடைந்த புருஷனுடைய புத்தி பூர்வமான பிரவிருத்தியில் சேர்ந்தே தன் காரியத்தைச் செய்கிறது. எனவே எந்தப் பிரவிருத்தியிலும் பொதுவாய் முதலில் ஞானமும் பின்னர் இச்சையும் அதன் மேல் பிரவிருத்தியும் காணப்படுகின்றன. லௌகிக வியாபாரங்களான போஜனம் முதலியவற்றிலும் இதேவரிசையும் நியாயமும் தான். லௌகிகங்களான விதிகளும் (கட்டளைகளும்) நிஷேதங்களும் தடையுத்தரவுகளும்) அந்தந்த விஷயங்களைப் பற்றிய (ஞானம் இச்சை பிரவிருத்தி, இவைகளையுடையவன் திறத்தில் எப்படி உபயோகப் படுகின்றனவோ அவ்விதமே சாஸ்திரங்களின் விதிநிஷேதங்கள் ஜீவன் விஷயத்தில் பிரயோஜன முள்ளவையாகக் குறைவில்லை. இப்படிப் புருஷன் பிரவிருத்தி நிவிருத்திகளில் தடுக்கப் படாத ஸ்வாதந்திரியத்தை யுடையவனென்றால் அவன் இஷ்டப் பட்டால் ஒன்றைச் செய்யலாம் செய்யாமலும் விட்டு விடலாம், என்றதாயிற்று. ஆகையால் ஜீவனுக்கு ஸ்வாதந் திரியமும் ரக்ஷணத்துக்கும் சிக்ஷணத்துக்கும் அவன் அருஹனுயிருப்பதும் யுக்தமாகிறது. ஈசுவரனுக்கு ஒரு ஒழுங்கு மில்லாதவன் (அவ்யவஸ்திதன்) என்னும் தோஷமும் வராது. எல்லாவற்றிற்கும் உள்ளுயிராய் (அந்தர்யாமியாய்) இருந்து எல்லாவற்றையும் தந்தம் காரியங்களில் ஏவுகிறவன் (பிரேரகன்) என்னும் குணமும் ஈசுவரனுக்கு நிலைபெற்றதாகவும் குறையில்லை.

[புராணஸாமரஸ்யம்.]

இப்படி லோகானுபவத்தை யொட்டிச் சொன்ன வ்யவஸ்தைக்கு அனுகுணமாகவே புராணங்களிலும் நிர்வாஹங்கள் காண படுகின்றன.

𑌨 𑌦𑍇𑌵𑌾 𑌦𑌣𑍍𑌡𑌮𑌾𑌦𑌾𑌯 𑌰𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑌿 𑌪𑌶𑍁𑌪𑌾𑌲𑌵𑌤𑍍 ।
𑌯𑌂 𑌹𑌿 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌸𑌂𑌯𑍋𑌜𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑌂 ॥
𑌯𑌸𑍍𑌮𑍈 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌪𑌰𑌾𑌭𑌵𑌂 ।
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌕𑌰𑍍𑌷𑌨𑍍𑌤𑌿 𑌸𑍋𑌽𑌵𑌾𑌚𑍀𑌨𑌾𑌨𑌿 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ॥

𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌂 𑌵𑌰𑍍𑌧𑌯𑌤𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌃 ।
𑌵𑍃𑌦𑍍𑌧 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃𑌪𑍁𑌣𑍍𑌯𑌮𑍇𑌵 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌾𑌰𑌭𑌤𑍇 𑌨𑌰𑌃 ॥
𑌪𑌾𑌪𑌂 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌂 𑌨𑌾𑌶𑌯𑌤𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌃 ॥
𑌨𑌷𑍍𑌟 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 𑌪𑌾𑌪𑌮𑍇𑌵 𑌪𑍁𑌨𑌾𑌰𑌭𑌤𑍇 𑌨𑌰𑌃 ॥

(மஹாபாரதம் உத்யோகபர்வம் 35-71-74.)

தேவர்கள் பசு மேய்ப்பவரைப்போல் கையில் தடியை வைத்துக்கொண்டு ரக்ஷிக்கப் புறப்படுவதில்லை. எவனைக் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணுகிறார்களோ அவனுக்குத் தகுந்த புத்தியைக் கொடுக்கின்றார்கள். எவனைத் தேவர்கள் அவமதிக்க நினைக்கின்றார்களோ அவன் புத்தியைக் குறுகும்படி செய்துவிடுகிறார்கள். புத்தி கெடவே அவன் நாசமடைகிறான். புண்யத்தை அடிக்கடி செய்வதினால் ஞானம் விருத்தி யடைகிறது. ஞானத்தில் நிலைபெற்ற மனிதன் மேலும் எப்போதும் புண்யத்தையே செய்கின்றான். பாபமோவென்றால், அதை அடிக்கடி செய்பவனுடைய புத்தியை அழித்துவிடுகிறது. மதிகெட்டவன் மறுபடியும் மேன்மேலும் பாவத்தொழில்களையே செய்து வருகிறான். என்று.

ஸ்ரீ வாஸுதேவனும் கீதையில் அருளிச் செய்வதாவது ?

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌭𑌜𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍
𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥

இப்படி இடைவிடாமல் என்னைப் பிரீதியுடன் பஜிக்கும் யோகிகளுக்கு என்னை யடைவதற்கேற்ற புத்தியோகத்தைக் கொடுக்கின்றேன். என்று.

அப்படி பாரதத்தில் மோக்ஷ தர்மத்தில் சதுர்முகப் பிரும்ஹாவுக்கு பகவானுடைய அம்சத்தின் அனுப்பிரவேசத்தை யுறைக்கு மிடத்தில்,

𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋 𑌮𑌹𑌾𑌯𑍋𑌗𑍀 𑌶𑍁𑌭𑌾 𑌶𑍁𑌭 𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ।
𑌸𑌸𑌰𑍍𑌜 𑌨𑌾𑌭𑌿𑌜𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣 𑌮𑌮𑌿𑌤 𑌪𑍍𑌰𑌭𑌮𑍍 ॥
𑌤𑌤𑌃𑌸 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑌭𑌵𑌤𑍍 𑌅𑌥𑍈𑌨𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ।
𑌤𑍍𑌵𑌂 𑌨𑌾𑌭𑌿𑌤𑍋 𑌜𑌾𑌤𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑌰𑍍𑌗 𑌕𑌰𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ॥

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

மஹாயோகியும் புண்யபாபஸம்பந்தமற்றவனுமான நாராயணன் தன் நாபியி (தொப்புளி) லிருந்து மஹாதேஜஸ்வியான பிரும்ஹா வென்னும் புத்திரனை யுண்டாக்கினார். பிறகு அவனெதிரில் தோன்றி, பிள்ளாய் ? நீ என் உந்தியிலுதித்தவன். ஜீவராசிகளை ஸ்ருஷ்டிக்க வல்லவன். ஆகவே மடையன் முதல் பண்டிதன் வரையிலுள்ள சேதனா சேதனங்க ளடங்கிய நானாவிதங்களான பிரஜைகளை ஸ்ருஷ்டிப்பாயாக. என்று சொன்னார். அதைக் கேட்ட சதுர்முகன் கவலையினால் மனக்கலக்கங்கொண்டு பகவான் வாக்கியத்தை யனுசரித்து ஸர்வேசுவரனும் வரம் கொடுப்பவனுமான அந்த ஹரியை வணங்கி தேவர்களுக்கெல்லாம் பிரபுவே! தேவரீருக்கு நமஸ்காரம் பிரஜைகளை ஸ்ருஷ்டிக்க எனக்கு சக்தி

ஏது ? நான் மதியிழந்தவனுனேன். ஆகையால் வேறு நான் எது செய்யலாமோ அதை நியமிக்கவேண்டும், என்று பதிலுரைத்தான். அதன்மேல் ஸர்வேச்வரனை பகவான் மறைந்து புத்தி தேவதையை நினைத்தார். அத் தேவதையும் உருவெடுத்துக் கொண்டு பிரபுவான ஹரியின்முன் தோன்றியது. பகவான் அவளிடத்தில் தன் யோகசக்தியை (ஐச்வர்யத்தை) யும் பிரவேசிக்கச் செய்தார். இப்படித் தன் ஐச்வர்யத்தோடு கூடிய மஹா சக்தியை யுடையவளாக ஆன உத்தமியான அந்த புத்தியைநோக்கி குறையொன்றுமில்லாத அப் பிரபுவானவர் 'அம்மணி லோக ஸ்ருஷ்டிகள் விருத்திக்கும் பொருட்டு நீ பிரும்ஹாவிடத்தில் பிரவேசிக்கக் கடவாய், என்று நியமித்தார். பிறகு ஈச்வராவேசத்தை யடைந்த அந்த புத்தியானவள் பிரும்ஹாவிடத்தில் வெகு சீக்கிரத்தில் நுழைந்துவிட்டாள். இப்படி புத்தியோடுகூடின பிரும்ஹாவை ஹரியானவர் மறுபடியும் கண்டார். பலவிதங்களான பிரஜைகளை உண்டாக்குவாயாக, என்றும் மறுபடியும் கட்டளையிட்டார். அத்தகைய ஹரியின் ஆணையை இப்பொழுது 'அப்படியே செய்கிறேன், என்று தலைமேற்கொண்டு உலகத்துக்கெல்லாம் பாட்டனும் தர்மமே வடிவுகொண்டவனுமான பிரும்ஹாவானவன் அவற்றை யெல்லாம்' செய்து முடித்தான், என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[ஸம்பிரதாயரகஸ்யம்.]

இந்த வசனங்களால் தேவதைகளும் பகவானும் ஜீவர்களை ரக்ஷிக்கவேண்டியிருந்தாலும் சிக்ஷிக்கவேண்டியிருந்தாலும் அவர்களைக் கொண்டு விலக்ஷணமான காரியங்களை செய்விக்கவேண்டியிருந்தாலும் அவர்களுக்கு மோக்ஷங் கொடுக்கவேண்டியிருந்தாலும் அவர்களுக்கு அவ்வோகாரியங்களுக்கேற்ற புத்திகளைக் கொடுத்து அவற்றின் மூலமாக அவைகளைச் செய்விக்கின்றார்களே யொழிய காற்றும் நீர் பிரவாஹமும் அடித்துக்கொண்டு போகிற மாதிரியாவது பூத பிசாசங்கள் பிரவேசித்து ஆட்டுகிற மாதிரியாவது செய்கிறதில்லை யென்று தெளிவாகிறது.

இந்த உபாக்கியானத்தினுல் பிரும்ஹாவேதத்தை இழப்பதும் அதை அவனுக்கு பகவான் மறுபடியும் ஸம்பாதித்துக் கொடுப்

பதும் ஆன இத்தகைய கதைகளெல்லாம் விளக்கப்பட்டு விடுகின்றன.

அவதார தெசைகளிலும் பகவான் லோகவ்யவஹாரங்களின் வரம்புகளை அதிக்கிரமிப்பதில்லை. இவ்வசனங்கள் அதற்கு பிரமாணம்.

𑌮𑌨𑌸𑍈𑌵 𑌜𑌗𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌸𑌂𑌹𑌾𑌰𑌂 𑌚 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌯𑌃 |
𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑌿𑌪𑌕𑍍𑌷𑌕𑍍𑌷𑌪𑌣𑍇 𑌕𑌿𑌯𑌾𑌨𑌰𑍍𑌥𑍋 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 |
𑌤𑌥𑌾𑌪𑌿 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌯𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 |
𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨𑍇𑌵 𑌤𑌥𑌾𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌹𑍀𑌨𑍈𑌰𑍍𑌯𑍁𑌦𑍍𑌧𑌂 𑌕𑌰𑍋𑌤𑍍𑌯𑌸𑍌
𑌸𑌾𑌮𑍈𑌵𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌂 𑌚 𑌤𑌥𑌾 𑌭𑍇𑌦𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 |
𑌕𑌰𑍋𑌤𑌿 𑌦𑌣𑍍𑌡𑌪𑌾𑌤𑌂 𑌚 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑍇𑌵 𑌪𑌲𑌾𑌯𑌨𑌂 |
𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌂 𑌚𑍇𑌷𑍍𑌟𑌾𑌂 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 |
𑌲𑍀𑌲𑌾𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑍇𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌛𑌨𑍍𑌦𑌤𑌃 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 |
𑌨 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌹𑌾𑌯𑍋𑌷𑍀 𑌕𑍀𑌨𑌾𑌶 𑌇𑌵𑌦𑍁𑌰𑍍𑌮𑌦𑌃 |
𑌕𑌠𑍋𑌰𑌾𑌣𑍍𑌯𑌪𑌹𑌤𑍇 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 |
𑌤𑍇𑌨𑍈𑌵 𑌵𑌞𑍍𑌚𑌯𑌤𑍇 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌮𑌾𑌯𑌾𑌯𑍋𑌗𑍇𑌨 𑌕𑍇𑌶𑌵𑌃 |
𑌯𑍇 𑌤𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌨 𑌤𑍇 𑌮𑍁𑌹𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃 |

(மஹாபாரதம்-உத்யோக பர்வம். 67-10-75.)

ஸங்கல்ப மாத்திரத்தினலேயே பிரபஞ்சத்தின் ஸ்ருஷ்டியையும் ஸம்ஹாரத்தையும் செய்யவல்லனை ஸர்வேச்வரனுக்கு எதிரி பக்ஷத்தை அழிக்க யாது பிரயத்தினம் வேணும்? என்றாலும் அவன் மனுஷ்யர்களுக் குறித்தான தர்மங்களையே அனுசரிக்கிறான் பலவான்களோடு சமாதானம் செய்கிறான். தாழ்ந்தவரொடு யுத்தத்தையும் நடத்துகிறான். அப்படியே தந்திரங்கள் செய்ய வேண்டிய விடங்களில் அவற்றையும் தானத்தை உபயோகிக்கத் தக்க விடங்களில் கொடுத்தும் ஆயுதங்களோடு யுத்தம் செய்தும் சில ஸந்தர்ப்பங்களில் பயந்தவன் போல் ஓடியும் இப்படி யெல்லாம் மனிதராய்ப் பிறந்தவர்களின் நடவடிக்கைகளைத் தானும் பின்தொடர்கிறான். பிரபஞ்சவ்யாபார மெல்லாவற்றையும் தன் லீலை

யாக நடத்தும் ஸர்வேச்வரனுக்கு இவையாவும் அவன் சங்கற்ப மாத்திரத்தினலேயே நடக்கின்றன. எல்லா உலகங்களுக்கும் பிரபுவாய் ஈச்வரனும் மஹாயோகியாயிருக்கும் அவனும் சில சமயங்களில் துர்பலனை எளியவனைப்போல் காரியங்களை யபினயிக்கிறுன். இவ்விதமாய் அக்கேசவன் தன் மாயாஸங்கல் பத்தினல் உலகத்தாரை ஏமாற்றுகிறுன். இதையறிந்து அந்த பகவானையே சரண மடைகிறவர்கள் மோஹத்தை (புத்தி மாருட்டத்தை) யடையமாட்டார்கள். என்று இவ்வர்த்தம் வைகுண்டஸ்தவத்தில் ஸ்ரீ கூரேசனல் இப்படியருளிச் செய்யப்பட்டது.

> 𑌰𑍂𑌪𑌵𑍍𑌯𑌤𑍍𑌯𑌯𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌕𑍃𑌤𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌂
> 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌸𑌿𑌤𑍁𑌮𑌨𑍍𑌯𑌦𑌸𑌙𑍍𑌕𑍁𑌚𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌂 ।
> 𑌕𑌾𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌨𑌿𑌯𑌮𑌂 𑌕𑌿𑌮𑌤𑍀𑌕𑍍𑌷𑌸𑌕𑍍𑌷𑌂
> 𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌮𑌪𑍋𑌹𑌯𑌿𑌤𑍁𑌂 𑌕 𑌈𑌶𑌃 ॥

ஓ பகவானே! உருவம் மாதிரி முதலியவைகளின் மாறுதல்களுக்குதக்கபடி வியவஸ்தை செய்யப்பட்ட இந்த பிரபஞ்சத்தை எதேச்சையாக நிலைமாற்றவோ வேருக்கவோ ஒன்று மில்லாதபடி செய்யவோ சக்தியுள்ள தேவரீர் அந்தவ்யவஸ்தைகள் அப்படியேயிருக்கவேண்டு மென்று கொண்ட தேவரீருடைய நியமத்தைத் தடுக்கவல்லவர் யார்? உம்முடைய ஸ்வாதாந்திரியம் ஒருவராலும் குறுக்கிடப் படக்கூடாத தல்லவா? என்று இந்த சுலோகத்தாலும் லோகஸ்வபாவம் ஒரு நியமத்தை (ஒழுங்கை) உடைத்தானதென்று தெரிவிக்கிறது.

[புருஷப் பிரயத்தினம் முக்கியம்]

இவ்விதமாக அர்த்தம் கொண்டால் கருமங்களுக்கு பலன்களைக் கொடுக்கும் சக்தி உண்டென்றும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேறு ரக்ஷகர்களைத் தேடவேண்டியதில்லை யென்றும் என்றாலும் ஈசுவரனுக்கு பரதந்திரனுயிருப்பதே மனிதனுக்கு ஸ்வபாவத்தில் ஏற்பட்ட தென்றும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ஸாதித் திருப்பது யுக்திகளோடு கூடினதாயும் லோக ஸம்மதமாயும் காணப்படு மென்பது நிச்சயம். மேலும்,

“உத்பத்தி ஸ்தி₂தி நாஶாநாம் ஸ்ருʼஷ்டேர் விஷ்ணோ: கர்த்ருʼத்வத: |
யதோ₂த்பத்திர் யதா₂ நாஶ: ஸ்தி₂திஸ்தத்₃ ப₄விஷ்யதி |
“க்ஷேமே காலே காலேநம் ஶ்ரீ: க்ஷிப்ரம் ப₄வதிஷ்டதி |
கீர்த்தி: கீர்த்யாபி ஸங்க்₃ராமே ந ப்ராப்ய மூர்த்தி |
“உத்₃ப₄வஶ்சாபி காலஸ்ய விநாஶஶ்சைவ ஶாஶ்வதம் |
ஸ்ருஷ்டி ஸம்ஹாரம் நாஸ்தி ஸம்ப₄விஷ்யதே |
அஜ்ஞோ ஜந்துரநீஶோऽயம் ஆத்மந: ஸுக₂து₃:க₂யோ: |
ஈஶ்வரப்ரேரிதோ க₃ச்சே₂த் ஸ்வர்க₃ம் வா ஶ்வப்₄ரமேவ வா |
“யச்சிந்த்யதே த்வயா லோகே ஸர்வம் தத்₃ விஷ்ணுசேஷ்டிதம் |
ஸர்வேஷாம் ஜ்ஞாயதே ஸ்வஸ்த₂ம் விஷ்ணோர்வஶம் |
“யோऽயம் மயா மதஸ்யாபி வ்ருʼத்திம் கல்பிதவாந் ப்ரபு₄: |
ஶேஷவ்ருʼத்தி வியோகேऽபி ஸர்வ: கிம் யோऽயவாப்ரத: |

(விஷ்ணுதத்துவம்)

உலகத்தில் வஸ்துக்களின் உத்பத்தி நிலைநாசம் இவற்றைப் பற்றி உனக்கேன் கவலை? உற்பத்தி உண்டான மாதிரியிலேயே இருப்பும் அழிவும் நடக்கின்றன. கைகால்களை அசைக்காமல் ஒரேயிடத்தில் உட்கார்ந்திருக்கும் ஒருவனுக்கு ஐசுவர்யம் வலிய வந்துவிடுகிறது. கர்மங்களிலீடுபட்ட மற்ற ஒருவன் எவ்வளவு வேலைசெய்தும் நக்கிச் சாப்பிடும் பலத்தைக் கூட அடைவதில்லை. ஆகாசத்தில் தான் பறக்கட்டும், பாதாளத்தில் தான் நுழையட்டும் அல்லது பூமி முழுவதும் சுற்றிவரட்டும், எப்படியானாலும் முன் கொடுத்துவைத்ததை யல்லது மற்றெதையும் எவனும் அடையான். இவன் ஞானமில்லாத பிராணியொன்றன்றோ? ஒருபடியாலும் ஸ்வதந்திரனல்லன். இவனுடைய ஸுகதுக்கங்கள் இவனதீனங்களல்ல. ஈசுவரனால் ஏவப்பட்டவனாய் ஸ்வர்க்கமும் செல்லலாம். அல்லது படுநரகிலும் வீழலாம். உலகத்துக் காணப் படுபவையெல்லாம் என் ஏவுதலின்படி நடக்கின்றன. மற்றவன் வேறாக நினைக்கலாம். நானேயென்றால் என் ஸங்கற்பப்படியே எல்லாவற்றையும் நடத்துகிறேன், எந்த பிரபுவானவர் என்னை

4

என் தாயின் கெர்ப்பத்திலும் உணவுகொடுத்துக் காப்பாற்றி ஞரோ அவர் இனிமேல் என் தேஹயாத்திரை நடக்கும் விஷயத்திலும் விழித்திருக்கிறாரா? அல்லது உரங்கி விட்டாரோ? அன்றி இறந்து தான் போனாரோ?

என்ற இத்தகைய வசனங்களைக் கொண்டு புருஷப் பிரயத்தினம் ஒன்றுமே வேண்டியதில்லை அதினால் பிரயோஜனமுமில்லை. எல்லா வற்றிற்கும் ஈசுவரன் கையைப்பார்த்துக் கொண்டிருப்பது தான் கடமை, என்று அர்த்தம் பண்ணினால் அதே நியாயத்தைக் கொண்டு நமது சாப்பாடு முதலிய வியாபாரங்களையும் கூடத் தவிற வேண்டிவரும். ஆகையால் எதிலும் புருஷப் பிரயத்தினமே முக்கிய மென்றறியவேண்டும்.

उद्यमेनैव हि सिध्यन्ति कार्याणि न मनोरथैः ।
न हि सुप्तस्य सिंहस्य प्रविशन्ति मुखे मृगाः ।

எக்காரியமும் நமது பிரயத்தினத்தினாலேயே ஸித்தி பெற வேண்டும் மனோரதத்தினால் மட்டும் ஒன்றும் நடவாது. ஸிம்ஹத்துக்கும் அது தூங்கும்போது அதின் ஆஹாரங்களாகிய மிருகங்கள் அதின் வாய்க்குள் வந்து நுழைவதில்லையே? ஆகையால் தான் மனு முதலிய ஸ்மிருதிகர்த்தாக்கள் இப்படிச் சொல்லுகிறார்கள்.

नात्मानमवमन्येत पूर्वाभिरसमृद्धिभिः ।
आमृत्योः श्रियमन्विच्छेत् नैनां मन्येत दुर्लभाम्
यद्यत्परवशं कर्म तत्तद्यत्नेन वर्जयेत् ।
यद्यदात्मवशन्तु स्यात् तत्तत्सेवेत यत्नतः ।

இதுவரையில் தனக்கிருந்த ஏழ்மையைக் கொண்டு தன்னைத் தானே அவமதித்துக் கொள்ளக் கூடாது. பிராணம் போகும் வரையில் ஸ்ரீயை (ஸம்பத்தை)த் தேடக்கடவன், அது நமக்கெங்கு கிட்டப்போகிற தென்று அகலாமல் தன் பிரியத்தினங்களைச் செய்யக் கடவன். ஆனால் எதெது பராதீனமான காரியமோ அதைத் தள்ளிவிட வேண்டியது. தன் வசத்திலிருந்து சுதந்திரமாய்ச் செய்யக்கூடியவைகளை விடாமுயற்சியுடன்நாடி முடித்துக்கொள்ள வேண்டும்.

[இதில் நியாயவை சேஷிகர்கர்களின் கொள்கை]

இம்மாதிரி வசனங்கள் ஸ்மிருதி புராணம் முதலியவற்றில் ஆயிரக்கணக்காய்க் காணப்படும். இந்த புருஷப் பிரயத்தின வாதத்தை ஒப்புக் கொண்டால் தான் இவை யெல்லாம் அர்த்த முடையவைகளாக ஆகும். இது சார்வாக மதத்தையும் ஸௌகத (புத்த) மதத்தையும் கண்டித்து (நிரஸித்து) ஆத்மா, என்பது உண்டென்று ஸ்தாபித்துக் கொடுக்கு மென்று தார்க்கிகர்களின் கொள்கை எப்படி யெனில்? லோகத்தில் அசேதந வஸ்துக்களால் நடக்க வேண்டிய காரியங்க ளெல்லாம் சேதனவஸ்துவின் பிரயத்தினத்தினுலேயே நடக்க வேண்டியிருக்கின்றன, என்பது யாவரும் அறிந்த விஷயமன்ருே? ஆகவே ஆத்மாவை ஒப்புக்கொண்டே தீரவேண்டும், என்று, வைசேஷிகர்களுடைய வாதமும் இதை யொட்டியதே. ஒரு காரியத்தினுல் மற்ருெரு காரியம் உண்டாகா தென்று அவர்களின் பக்ஷம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதின் சுருக்கம்.

𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌜𑌨𑍍𑌯𑌾 𑌭𑌵𑍇𑌦𑌿𑌚𑍍𑌛𑌾 𑌇𑌚𑍍𑌛𑌾𑌜𑌨𑍍𑌯𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍𑌕𑍃𑌤𑌿𑌃 |
𑌕𑍃𑌤𑌿𑌜𑌨𑍍𑌯𑌾 𑌭𑌵𑍇𑌚𑍍𑌚𑍇𑌷𑍍𑌟𑌾 𑌚𑍇𑌷𑍍𑌟𑌾𑌜𑌨𑍍𑌯𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 |

புத்தியினுல் இச்சை உண்டாகிறது. இச்சையிலிருந்து ஒரு காரியத்தில் பிரவிருத்தி (கிருதி) உண்டாகிறது. கிருதியினுல் அவயவங்கள் வியாபாரங்களும் அவற்றிலிருந்து காரியமும் முறையே சம்பவிக்கின்றன. என்று.

[ஸ்ரீ ராமாநுஜமதத்தில் கர்மஸ்வரூபம்.]

இப்படி புண்யம் பாபம் என்கிற கர்மத்தின் ஸாமர்த்தியம் நிரூபிக்கப்பட்டால் கர்மஸ்வரூபத்தைப்பற்ற அநேகப் பிரகாரங்களான விவாதங்கள் இருந்தாலும் ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தத்தில் அவைகளெல்லாம் சமரஸமாகின்றன. இவர் மதத்தில் கர்மஸ்வரூபம் பகவானுடைய ஸங்கல்பவிசேஷம். அவருடையகோபம் என்கிற நிக்ரஹ (தண்டிக்கும்) ஸங்கல்பத்துக்கு ஆளாவது பாபம். அப்படியே அவருடைய பிரீதி என்கிற அநுக்ரஹ (அநுகூலம் செய்யும்) ஸங்கல்பத்துக்கு இலக்காவது புண்ணியம்,

இவ்விஷயத்தில் ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்ரீராமானுஜர் ஸாதித்திருப்பதாவது ?

ஜீவாத்மாவின் புண்யபாபரூபங்களான கருமங்களினலேயே லோகவ்யவஹாரவ்ய வஸ்தைகளெல்லாம் ஸித்திக்கும்போது ஈசுவரன் என்று ஒருவன் வேண்டியதில்லை. புண்யபாபரூபங்களான கர்மங்களினல் ஸம்ஸ்கரிக்கப்பட்ட (பக்குவம் செய்யப்பட்ட) மூலப்பிரகிருதியே எந்த எந்த புருஷார்த்தத்தை (பலத்தை)க் கொடுக்கவேண்டுமோ அவ்வவ்விதமாக மாறுபாடுகளை அடையலாம். எப்படியென்றால் ? விஷம் முதலியவற்றால் கெடுக்கப்பட்ட அன்னபானதிகளாலும் நல்ல ஔஷதங்களினல் பக்குவப்படுத்தப்பட்ட அன்னபானதிகளினலும் முறையே துக்கத்துக்கும் சுகத்துக்கும் காரணமாகக் கூடிய பரிணம (மாறுபாடுகளின்) விசேஷங்கள் அந்ததந்த தேசகாலங்களை யனுசரித்து உண்டாவதைக் காண்கின்றேமல்லவா ? அவ்விதமே ஸ்ருஷ்டி பிரளயம் முதலிய வ்யவஸ்தைகளும் தேவன் மனுஷியன் முதலிய பல வேறுபாடுகளையுடைய ஸ்ருஷ்டியும் அப்படியே மோக்ஷம் என்னும் வ்யவஸ்தையும் எல்லாம் பலபிரகாரங்களாக மாறுதல்களை யடையும் சக்தியையுடைய பிரகிருதியினலேயே உபபந்நமாகலாமே ? (கூடலாமே ?) என்றால், இதற்கு சமாதானம் சொல்லுகிறேம். இது புண்ணியபாபங்களின் ஸ்வருபத்தை யறியாதவர்கள் சொல்லும் ஆக்ஷேபம். அது சாஸ்திரத்தினலேயே அறியப்படவேண்டும். சாஸ்திரமாவது அநாதிஸம்பிரதாயத்தால் வந்திருக்கும் தோஷமற்ற வேதம்தான். அந்த வேதமானது பரமபுருஷனுடைய ஆராதனமேபுண்ணியம். அவனிடத்தில் அபசாரப்படுவதேபாபம், என்று தெரியப்படுத்துகிறது. இந்த ஆராதனத்தினலும் அபசாரத்தினலும் உண்டாகும் பகவானுடைய அநுக்கிரஹங்களும் நிக்கிரஹங்களும் முறையே நமது சுகதுக்கங்களுக்குக் காரணங்கள். ஸ்ரீ திரமிடாசாரியார்.

[illegible]

[illegible] |

தங்கள் கருமங்களினல் பரமாத்மாவைப் பிரீதிசெய்ய முயல்கின்றார்கள். அவனும் பிரீதியடைந்தவனய் பலம் கொடுப்பதற்கு

ஸித்தமாகிறான். இதுதான் சாஸ்திரத்தின் நிலை, என்றருளிச் செய்தார். என்று.

[கர்மஜ்ஞானங்களின் ஸாமரஸ்யம் பகவத்ஸங்கல்பம்.]

கர்மஸ்வரூபம் இப்படி நிரூபிக்கப்பட்டால்.

ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே(அ)ர்ஜுந |
நஹி ஜ்ஞாநேந ஸத்ருசம் பவித்ரமிஹ வித்யதே |

ஓ அர்ஜுந ! ஞானமாகிற நெருப்பு கருமங்களெல்லாவற்றையும் சாம்பலாக்கி விடுகிறது. இந்த உலகத்தில் ஞானத்துக்குச் சமான மான சுத்திசெய்யும் வஸ்து வேறு கிடையாது. என்பதுபோன்ற வசனங்கள் பொருத்த முடையவைகளாகின்றன. இங்கு ஞான மாவது பகவானுடைய உபாஸநம் (பூஜை) அதாவது பகவானுக் குப் பிரீதியை உண்டாக்கக்கூடிய வியாபார விசேஷம். இதை பகவத்பரதை (பகவானிடத்திலேயே ஈடுபட்டிருத்தல்) என்றும் நிரந்தர ஏகாந்த சித்தவிருத்தி (இடைவிடாமல் ஒரே நிலையில் நிற் கும் புத்தியின் நட்பு) என்றும் சொல்லுவார்கள். இதனால் உண் டாகும் பகவானுடைய பிரீதியினால் அநாதிகாலமாய் அவனுக்கு நம் விஷயத்தில் ஏற்பட்டிருந்த கோபம் என்கிற கருமம் அடி யோடு நசித்துவிடும். இதற்கு லோகானுபவமே போதுமான ஸாக்ஷியம். இங்கு ஸ்ரீ பாஷ்யக்காரர் “பாபங்கள் செய்யப்பட் டால் அவை புருஷனுக்கு வைதிக கருமங்களில் யோக்கியதை யில்லாமற் செய்வதுடன் அதைப்போன்ற மற்ற காரியங்களிலும் (பாவத்தொழில்களிலேயே) அதிக ருசியையும் இப்படிப் பலவித கெடுதல்களையும் உண்டாக்கும். அவைகளை விநாசப்படுத்துவ தாவது, அவைகளுக்கு சக்தியில்லாமற் செய்வதுதான். சக்தி யாவது பரமபுருஷனுடைய அப்பிரீதி (கோபம்) தான். ஆகை யால் உபாஸனையானது அதைச் செய்யும், ஜீவனுக்கு உபாஸிக் கப்பட்ட பகவான் அளவற்ற பிரீதிக்குப் பாத்திரனாகிறபடியால் பகவான் தானும் அந்த ஜீவன் விஷயத்தில் அளவற்ற அன்போடு கூடினவனாகும்படி செய்து பரமபுருஷனுக்கு ஆராதனரூபமாவ தால் அது ஜீவனால் பூர்வகாலத்தில் சம்பாதிக்கப்பட்ட பகவா னுடைய அப்பிரீதியை (பிரீதியில்லாமையை, கோபத்தை) நாசப்

படுத்தும். வருங்காலத்திலும் ஈசுவரனுக்கு அப்பிரீதிவராமல் தடுக்கும் என்றருளிச்செய்தார். வருங்காலத்திலும் இப்படித் தடை செய்யவும் என்றது மனிதன் புத்தி பூர்வமில்லாமல் அவசமாய்ச் செய்யக்கூடிய பாபங்களைப்பற்றியது. நெஞ்சாறச் செய்யும் தீச் செயல்களின் பலன்களை யனுபவித்தே தீரவேண்டும். அல்லது அவற்றிற்குத் தகுந்தபரிஹாரங்களைச் செய்யவேண்டும். இது அறியத்தக்கது.

உபாஸகனுடைய மரணகாலத்தில் அவன் தாயத்தைப் புத்திரர்க ளடைவார்கள். சத்துருக்கள் அவன் பாபங்களையும் மித்திரர்கள் அவன் புண்யங்களையும் அடைகிறார்கள், என்னும் சுருதி வாக்கியமும் இவ்விதமாகவே பொருத்தமுடையதாக அறியப்படும். ஒருவன் செய்த பாவத்தை மற்றொருவன் அனுபவிப்பது என்பது முதலியது சரியாகுமோவென்றால், பாகவதர்கள் (பகவானுடைய பிரீதிக்குப் பாத்திரமானவர்கள். பக்தர்கள்) விஷயத்தில் செய்யும் சிநேஹத்தால் பகவானுக்கு பிரீதியும் துவேஷத்தால் கோபமும் வருமென்று இந்த வசனத்துக்கு தாத்பர்யம். இது பித்ருபுத்ர நியாயத்தினால் (புத்திரன் விஷயத்தில் அன்பு முதலியவைகளைக் காட்டும் மனிதர் திறத்தில் தகப்பனுக்கு பிரீதிமுதலியவை உண்டாகும். நியாயத்தினால் தெளிவாகிறது. இப்படியே

𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌮𑌮𑍈𑌵𑌾𑌜𑍍𑌞𑌾 𑌯𑌸𑍍𑌤𑌾𑌮𑍁𑌲𑍍𑌲𑌙𑍍𑌘𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌆𑌜𑍍𑌞𑌾𑌚𑍍𑌛𑍇𑌦𑍀 𑌮𑌮 𑌦𑍍𑌰𑍋𑌹𑍀 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌃 ।

(விஷ்ணுதத்வம். 5-31.)

வேதமும் ஸ்மிருதியும் என் கட்டளைகள். எவன் அவைகளை மீறி நடக்கிறானோ அவன் என் ஆணையைக் கடந்த துரோஹியாவான். என் பக்தனானாலும் வைஷ்ணவன் (என்னையே எல்லாமென்று நினைத்தவன்) ஆகான், என்கிற வசனத்துக்கும் பொருத்தமான அர்த்தம் காணப்படும்.

கருமமானது பகவானுடைய அனுக்கிரஹம் முதலியவற்றை விட வேறுபட்டதாய் சுதந்திரமாய் சக்தியுள்ளதாகும் பக்ஷத்தில் பகவான் அதற்குட்பட்டு அதை யனுசரித்தே பலன்களைக் கொடுக்கவேண்டியவனாவான். அப்படியானால் அவனைப் பிரார்த்

திப்பதினுல் யாதொரு பிரயோஜனமும் இல்லை. இது நியாய ஸித்தாந்திகளின் நிரனுக்ரஹ ஈசுவரவாதம்என்கிற கொள்கையை ஸ்திரப்படுத்தும்.

அல்லது இத்தகை பகவத் பிரார்த்தனைக்குப் பலனுக ஒரு அதிருஷ்டம், என்று ஒரு சக்தி விசேஷத்தைக் கற்பித்து அதனுல் தடைகளைப்போக்குதல் முதலியவைகளையும் கற்பிக்கப் புகுந்தாலும் பகவான் கருமத்துக்குப் பராதீனனுயே (உட்பட்டவனுயே) காரியம் செய்யவேண்டியவனுததால் இந்த ஸாபேக்ஷ ஈசுவர வாதத்திலும் பகவான் பரதந்திரன் என்றே ஏற்படும். இதை விட ஸர்வேசுவரன், என்பவனுக்கு மேலான தோஷம் ஒன்றுமில்லை யென்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்திருக்கிறூர்.

𑌸𑍍𑌵𑌾𑌦𑍃𑌷𑍍𑌟 𑌪𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌰𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌶𑌃 𑌸𑍍𑌵𑌶𑌃 |
𑌪𑌰𑌾𑌦𑍃𑌷𑍍𑌟 𑌪𑌰𑌾𑌯𑌤𑍍𑌤 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑍇 𑌚 𑌹𑌵𑌿𑌷𑌃 𑌪𑌰𑌃 |

தாழ்ந்தவனுகிய ஜீவாத்மா சிற்சில விடங்களில் தன் அதிருஷ்டத்துக்கு மட்டுமே வசமாகிறுன். பரமபுருஷனே வென்றூல் எங்கும் மற்ற எல்லாருடையவும் அதிருஷ்டங்களுக்கும் பாரதீனனுக வேண்டி வரும், என்றதாயிற்று.

இவ்விதமாய் எல்லா மனுஷ்யர்களும் எப்பொழுதும் எங்கேயும் எந்தப் பிரகாரத்தாலும் பகவானுடைய ஸங்கல்பத்தையே எதிர்பார்த்திருக்க வேண்டுமென்று நம்பூர்வாசாரியர்கள் ஸாதித்திருக்கும் வசனங்களுக்கும் தாத்பரியம் விளக்கப்பட்டது. இந்த அபிஸந்தியானது (தீர்ந்த ஞானமும் நம்பிக்கையும்) நிலைநிற்குமாகில் தேஹமே ஆதமா, என்னும் பிரமையும் ஆத்மா தானே ஸ்வதந்திரன். என்னும் மயக்கமும் வேரோடு நசித்துவிடு மென்பது நமது ஸித்தாந்தம்.

[கர்மயோகானுஷ்டானம்]

இவ்வளவால் மனிதன் தன் புத்தி பூர்வமாய் ஸ்வதந்திரனுய் தான் இச்சிக்கும் கருமங்களைச்செய்ய யோக்யதையுடையவனென்றும், ஆகையால் அவற்றிற்கு அவன் உத்திரவாதியாகிய அதனுல்

வரும் பலாபலன்களை யனுபவிக்கவேண்டியவனென்றும் இந்தப் பலாபலன்கள் ஸர்வேசுவரனை பகவானுடைய அநுக்கிரஹநிக்கிரஹ ஸங்கல்பங்களினால் உண்டாகின்றனவென்றும் அந்த ஸங்கல்பமேதான் புண்யபாப ரூபங்களான கருமம் அதிருஷ்டம் என்று சொல்லப்படு பவையென்றும் பகவானுக்குப் பிரீதியை யுண்டாக்கும் ஆராதனரூபமான கருமங்களே புண்யங்கள் அவை தான் அநுகூல பலன்களைக்கொடுப்பவை அவனுக்குக்கோபத்தை உண்டாக்கக் கூடிய கருமங்கள் பாவங்கள் அவையே பிரதிகூல பலன்களைக் கொடுப்பவை என்றும் பகவானுக்குப் பிரீதி உண்டாகும்படி செய்யப்படும் கருமங்களினால் அவன் நம்மை நமது பூர்வ துஷ்கர்மங்களுக்குத் தக்கபடி தெண்டிக்கவேண்டுமென்று செய்திருந்த சங்கற்பம் போக்கிவிடப்படுகிற தென்றும் சொல்லிற்றாயிற்று.

இப்படி பகவத் பிரீதியையே பிரயோஜனமாகக் கோலி பகவானே தான் நமக்குக் கொடுத்த நமது ஆத்மா சரீரம் முதலானவைகளைக்கொண்டு தன் ஆராதனரூபமான நாம் செய்யும் கருமங்களைத் தன்பொருட்டே செய்வித்துக் கொள்ளுகிறான், என்னும் நினைவுடன் நாம் அநுஷ்டிக்கும் காரியத்துக்குக் கருமயோகமென்று பெயர். அதாவது பலத்தில் ஆசை (அபிஸந்தி) கருமத்தில் நமது என்னும் ஒட்டு (ஸங்கம்) நாம் செய்கிறோம் (கர்த்ருத்வம்) என்னும் நினைவு. இவைகளை யொழித்துச் செய்யபபடும் ஸத்கருமங்கள், யோகபுத்தியுடன் இம்மூன்றுவிதத் தியாகங்களுடன் செய்யப்படுமவை என்றபடி. இவைகள்தான் ஸ்ரீகீதையில் நாலாவது அத்யாயத்தில்.

தைவமேவா பரே யஜ்ஞம் யோகிந꞉ பர்யுபாஸதே |
ப்ரஹ்மாக்நாவ பரே யஜ்ஞம் யஜ்ஞேநைவோ பஜுஹ்வதி |

என்று தொடங்கி விதிக்கப்பட்ட தேவார்ச்சனை, யாகம், தானம், தீர்த்தயாத்திரை, வேதாத்தியயனம், முதலியவைகள். இவற்றில் தனக்கிஷ்டமாய் செய்யக்கூடியதாயிருக்குமொன்றை அங்கி (உடல்) ஆகவைத்து தனக்கு சாஸ்திரங்களினால் கட்டாயம்செய்யப்படவேண்டுமென்று விதிக்கப்பட்ட நித்தியமாக அனுஷ்டிக்

கத்தக்க (ஸந்தியாவந்தனம் முதலிய) கருமங்களென்ன. கிரஹ ணம் முதலியவிசேஷங்களை (நிமித்தங்களை) யிட்டு அநுஷ்டிக்கத் தக்க கருமங்கள் (நைமித்திகங்கள்) என்ன இவற்றை மேற்படி உடலுக்கு அங்கங்களாகச்சேர்த்து முன்கூறப்பட்ட மூன்றுவித த்யாகங்களுடன் அதை அநுஷ்டித்துவருவதுதான் கருமயோகம்.

[அதின் பலம்.]

இக்கர்மயோகம் ஞானயோகத்தை முன்னிட்டும் அல்லது முன்னிடாதேயும் தியானயோகம், என்கிற பரிசுத்தஜீவனைப்பற் றிய உபாஸனத்தையுண்டாக்கி மேல் பக்தியோகத்துக்கு உறுப் பாகிய ஆத்மாவலோகனம், என்கிற ஜீவாத்மஸாக்ஷாத்காரத்தை (ஜீவாத்மாவைப்பார்ப்பதை)க்கூட்டிவைக்கும். ஞானயோகமா வது, கர்மயோகத்தால் பரிசுத்தமான அந்தக்கரணத்தோடுகூடச் செய்யத்தகுந்த பரிசுத்த ஆத்மாவைப்பற்றிய நிலையானசிந்தனை. இதை வெகு காலம் அனுஷ்டித்துவந்தால் இது தியானயோகத் தையுண்டாக்கி ஆத்மாவலோகனத்தை ஸாதித்துக்கொடுக்கும்.

தியானயோகமென்பது அங்கங்களோடு விரிவாய் ஸ்ரீ பகவத் கீதையில் ஆறுவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தவரிசை இரண்டாவது அத்தியாயத்திலேயே விளக்கப்பட் டது.

ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தையுணர்ந்து பகவான் செய்விக்கிறான் நம்மால் ஒன்றுமில்லை, என்னும் அகர்த்ருத்வ அநுஸந்தானத்துடன் செய்யப்படும் கருமயோகமே ஞானயோக த்தையிடையில் வேண்டாமல் தானே நேராக ஸுகரமாகி (சிரம மின்றி செய்யத்தகுந்ததாகி)யும் காலதாமதமின்றியும் தவறுதல் களுக்குட் படாமலும்செய்து தியானயோகத்தை யுண்டாக்கி ஆத்மாவலோகனத்துக்கு ஸாதனமாகக்கூடும். இப்படிக்கர்ம யோகம் தானே உபயோகப்படும் பிரகாரம் கீதையின் மூன்றுவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டது. இது தான் எல்லாவற்றிலும் மேலான உபாயமென்றும் எல்லாராலும் அனுஷ்டிக்கத்தக்கதென் றும் ஸ்ரீபாஷ்யகாரரின் திருவுள்ளம்.

5

[ஆத்மஸ்வரூபம்.]

ஆத்மாவின் யாதாத்மியம் (ஆத்மாவின் உண்மையானஸ்வரூபம்) ஆவது? ப்ரத்யக்த்வம், (தன்னைத்தானே அறிந்துகொள்ளும் சக்தி) ஏகத்வம், (ஒரே ஆகாரத்தை உடைத்தாயிருப்பது) அநுகூலத்வம், (தனக்குத்தான் இன்பமாகவேயிருப்பது) பரசேஷைதகரஸத்வம் (பகவானுக்கு சேஷமாக அதாவது கருவியாக இருப்பதையே தன்ஸாரமான குணமாக உடைத்தாயிருக்கை) முதலான ஆத்மஸ்வரூபத்தில் உள்ளடங்கிய தர்மங்கள். (குணங்கள்) ஜீவன் நித்தியன் (நாசமற்றவன்) அணு, ஞானமொன்றையே உருவாக உடையவன், தானபேக்ஷிக்கும் ஸர்வகாமங்களையும் ஸாதித்துக்கொள்ளும் சக்தியுடையவன் (ஸர்வகாமா வாப்தி அர்ஹன்) என்பது முதலான சாஸ்திரங்களினால் அறியப்படத்தக்க தர்மங்கள். முன்கூறியபடிஸ்வரூபநிர்ணயம்பண்ணப்பட்ட ஆத்மாவின் மற்றகுண (விசேஷண)ங்கள். முன்சொல்லப்பட்டவைகளுக்கு ஸ்வரூப நிரூபகதர்மங்கள், என்றும் பின்கூறப்பட்டவைகளுக்கு நிரூபிதஸ்வரூபவி சேஷணங்கள், என்றும் பெயர். ஸ்வரூபத்திலடங்கிய தர்மங்கள் ஸ்வயமாகவே ஆத்மாவுக்குப்பிரகாசிக்கின்றன (ஸ்வயம்பாஸ்யங்கள்) என்றும், தர்மியாகிற ஆத்மாவினாலேயே பிரகாசிக்கின்றன (தர்மிபாஸ்யங்கள்) என்றும் சில ஸம்பிரதாயங்களுண்டு.

ஆத்மஸ்வரூபத்தின் உண்மையை இப்படிக்கொண்டால்தான் மோக்ஷதெசையில் ஜீவர்களுக்குப் பரஸ்பரம்பேதம்ஸித்திக்கும். இல்லாவிட்டால் அத்வைதஸித்தாந்தத்தில்தான் பிரவேசமுண்டாகும்.

ஆகையால் இதை நன்றாயறிந்துகொள்ளவேண்டியது அவச்யமாகிறது.

மூன்றாம் அத்தியாயம்

ஞானயோகம்.

[கர்மஞானங்கள் பகவதாராதனங்கள்.]

இவ்விதமாய் கருமத்தின் உண்மையை நிர்ணயித்ததினால் நாம் செய்கிற சகல கருமங்களும் பகவானுக்கு ஆராதனமாகி அவனுக்குச் சந்தோஷத்தையுண்டாக்கக் கூடியவைகளாக ஆகும்பிரகாரம் விஸ்தாரம் செய்யப்பட்டது. இதைத்தான் பகவானும் ஸ்ரீ கீதையில்,

> 𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌷𑌿 𑌯𑌦𑌶𑍍𑌨𑌾𑌸𑌿 𑌯𑌜𑍍𑌜𑍁𑌹𑍋𑌷𑌿 𑌦𑌦𑌾𑌸𑌿 𑌯𑌤𑍍 ।
> 𑌯𑌤𑍍𑌤𑌪𑌸𑍍𑌯𑌸𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌮𑌦𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ।

ஓ குந்தி புத்திரனே! ஜீவனார்த்தமாக லௌகிக வ்யாபாரங்கள் யாவற்றைச் செய்வாயோ. சரீரத்தை தரிப்பதற்காக யாதொரு ஆகாராதிகளை உட்கொள்வாயோ. தானம் தபஸ் என்று பரலோகஸாதனமான காரியங்கள் எவைகளைச் செய்வாயோ, அவைகளையெல்லாம் எனக்கு அர்ப்பணம் பண்ணிவிடு, என்றருளிச் செய்தார். இதில் மனிதனுக்கு ஸ்வபாவத்தினுண்டாவதும், திரவியம் முதலிய பிரயோஜனங்களைப் பற்றவருவதும், சாஸ்திரங்களினால் விதிக்கப்பட்டதும், (ஸ்வபாவப் பிராப்தம், அர்த்தப்பிராப்தம், சாஸ்திரப்பிராப்தம்) என்று பிரித்துச் சொல்லப்பட்ட எல்லாக் கருமங்களையும் பற்றப் பேசப்பட்டது. ஏனென்றால்?

> 𑌨𑌹𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌜𑌾𑌤𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 ।
> 𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 𑌹𑍍𑌯𑌵𑌶𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌰𑍍𑌵𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌜𑍈𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌃 ।

ஒருவனும் ஒன்றும் செய்யாமல் ஒரு க்ஷணம்கூட இருக்க முடியாது. பிரகிருதி ஸம்பந்தத்தினால் ஸ்வபாவத்தினால் உண்டான குணங்களினால் எல்லாரும் பரவசராகவே வேலைகளைச்செய்யும்படி நடத்தப்படுகிறார்கள், என்று ஸ்ரீ கிருஷ்ணனே அருளிச் செய்தான். ஆகையால் பிரவிருத்தி (செய்தல்) நிவிருத்தி (செய்யாமல்விடுதல்) ரூபங்களான எந்தக்காரியங்களும் சாஸ்திரத்தை

யனுசரித்தும் பலத்தில் இச்சை அபிமானம் கர்த்ருத்வம், இவைகளையொழித்தும், அவைகள் பகவதாராதனங்களாகக்கடவன, என்னும் நினைவுடனும் செய்யப்பட்டால் அவையே மோக்ஷத்துக்கும் ஸதானங்களாகின்றன, என்று ஸித்தாந்தம் செய்யப்பட்டதாகிறது. இதனால் திருஷ்டப் பிரயோஜனத்துக்கும் (இந்த லோகத்து பிரயோஜனங்களுக்கும்) குறைவில்லை. சாஸ்திரத்தினால் தடுக்கப்பட்ட காரியங்கள் லோகத்திலும் நிஷித்தங்களாக (தள்ளப்பட்டவைகளாக)த்தான் காணப்படுகின்றன, என்று அறிவது இங்கு அவசியம்.

[மூன்றுவித மார்க்கங்கள்]

பரம புருஷார்த்தத்துக்குறித்தான உபாயத்தைப் பற்றிய சாஸ்திரவிசாரம் ஆதிமுதற்கொண்டு கேவலகர்மமென்றும் கேவலக்ஞானமென்றும் கேவலபக்தியென்றும் முன்றுவகைகளாகப் பிரிந்து நடந்திருக்கின்றன. இவையெல்லாவற்றிற்கும் ஸ்ரீ கீதையிலேயே ஆதாரம் கிடைக்கும்.

[கேவலகர்மம்.]

இவற்றில் கேவலகர்மமார்கத்தையனுசரித்தவர்களுக்கு முன் காலத்தில் கர்மஜடரென்றும் பூர்வ (முற்பகுதி) மீமாம்ஸகரென்றும் கபந்த மீமாம்ஸகர் (மீமாம்ஸையின் உடலை, முண்டத்தை மட்டும் ஆச்ரயித்தவர்) என்றும் பெயர்கள் உண்டு. இவர்கள் வைதிகர்களே (வேதப்பிராமாணயத்தை யொப்பினவர்களே) யாகிலும் இவர்கள்.

வெதொஷாரா:, வெதாஜ்ஞா:,

(வேதாந்தங்கள் வேதாந்தத்தின்கிளர் நிலங்கள்) என்று ஞானப் பிரதானமானவேத்தின் ஸாரக்ஷேத்திரங்களான உபனிஷத்துக்களை தூஷித்துக்கொண்டு அதின்கர்மகாண்டத்துக்கு மட்டும் பிராமாண்யத்தை அங்கீகரித்துயாகம் முதலிய கருமங்களுக்கே ஐஹிகம் (இந்தலோகத்தது) ஆமுஷ்மிகம் (பரலோக ஸம்பந்தமானது) என்னப்பட்ட ஸகல பலன்களையும் ஸாதித்துக்கொடுக்கும் சக்தியைக்கொண்டார்கள், எனவே, இவர்கள் நினைவில் ஐகாச்ரம்ய

மென்னும் கிருஹஸ்தாச்ரமமே ஸர்வோத்கிருஷ்டமானது. பலத்தில் ஆசையினல் யாகம் முதலியகருமங்களை எப்போதும் அநுஷ்டிப்பவர்களாகையால் இவர்கள் ராகம் (ஆசை)த்வேஷம் (விரோதம்) லோபம் முதலிய பிசாசங்களால் பீடிக்கப்பட்டு சுயநலத்யே தேடுகிறவர்கள், என்று ஸௌகதர் (பௌத்தர்) முதலியவர்களுடைய தூஷணங்களுக்கு முதல் பாத்திரர்களானர்கள். ஸந்யாஸம் முதலிய ஆச்ரமங்கள் குருடன் நொண்டி முதலிய கருமங்கள் செய்ய யோக்கியதையில்லாத புருஷர்களுக்கே ஏற்பட்டதென்றூர்கள். வர்ணாச்ரமவ்யவஸ்தையின்படி லோகயாத்திரையை நடத்திக்கொண்டுயாகம் தானம் ஹோமம் முதலான கருமங்களை நடத்துவதிலேயே ஈடுபட்டிருந்திருந்தார்கள். இவர்களைத்தான் சாந்தோக்ய பிருஹதாரண்ய உபனிஷத்துக்கள் கர்மஜடர்கள் (கருமத்தினுல் மதியிழந்தவர்கள்) என்று நிந்தித்தன. இத்தகையவைதிகவித்தாந்தம் ராகத்வேஷாதிகளை உண்டாக்குமேயன்றி வைராக்யத்தை உண்டாக்காது. என்றும் கேவலம் ஹிம்ஸாமயமாயிருக்குமென்றும் வேதபாஹ்யர்களும்(வேதத்துக்குப்புறம்பானவர்களும்) ஸௌகதர்களும் நிந்திக்கின்றூர்கள்.

[கேவலக்ஞானம்.]

கேவலஞானமார்க்கத்தைப் பின்யாற்றியவர்கள் உத்தர (பிற்பகுதி) மீமாம்ஸகர், என்றும், ராஹு (தலை) மீமாம்ஸகரென்றும் வ்யவஹரிக்கப்பட்டவர்களாய் வேதத்தில் உபனிஷத்து பாகத்துக்குமட்டும் பிராமாண்யத்தை யொப்புக்கொண்டு கேவலஞானமார்க்கத்தையே மோக்ஷஸாதனமாக ஆச்ரயித்தவர்கள். கீதையில்

த்ரைகுண்ய விஷயா வேதா:

(வேதங்கள் முக்குணங்களைப்பற்றியவைகள்)

யாமிமாம் புஷ்பிதாம் வாசம்

(இப்படிக்காய்க் குதவாத பூவைப்போன்றவாக்குகளைச் சொல்லுகிறவர்கள்) என்ற மாதிரிகளில் சொல்லப்பட்டவாக்கியங்களைக் கொண்டு கர்மத்தை தூஷிப்பவர்கள். ஸந்யாஸமென்கிறமோக்ஷாச்ரமத்தை அத்யாச்ரம மென்னும் ஞானத்துக்குப்பரம உபகார

மென்னும் எண்ணுவார்கள். ராகத்வேஷங்களையொழித்து எல்லாவற்றிலும் பற்றுதலைக்களைந்து (ஸர்வஸங்கபரித்யாகம்செய்து) பிரபஞ்சத்தின் உபசமத்தையே (ஒழிவையே பரமபுருஷார்த்தமென்று எதிர்பார்ப்பார்கள். அரண்யம் முதலிய நிர்ஜனப்பிரதேசங்களில் வஸிப்பதையே உகப்பார்கள். சாஸ்திரத்தைக்கேட்டல் (சிரவணம்) அதைமனதில் உருபோடுதல் முதலியவைகளில் இடைவிடாத கெவனத்தைச் செலுத்தி மஹாமௌனிகளான யோகீச்வரராயிருப்பார்கள். ஜடன் (மந்தன்) ஊமைசெவிடன் குருடன் முதலியவர்களைப்போல் நடந்துகொள்ள நிச்சயிப்பார்கள். இத்தகைய வைதிகர்களின் மார்க்கம்தான் கேவலஞானமார்க்கமென்பது.

[கேவலபக்தி]

கேவலபக்திமார்க்கத்தைப் பின்பற்றியவர்கள் தாந்திரிகர்கள் என்றும் பக்தி நிஷ்டர்கள் என்றும் சொல்லப்படுவார்கள். இவர்கள் முன்கூறப்பட்ட இரண்டுவிதவைதிக மார்க்கங்களையும் ஆதரியாமல் யதேச்ச ஆசாரங்களில் ஈடுபட்டவர்களாய் குத்ஸிதமான அருவருக்கத்தக்க வித்திகளாலும் குத்ஸிதமான பிரயோஜனங்களாலும் ஜனங்களை வசீகரித்துக்கொள்வார்கள். வாமாசாரம் ஸமயாசாரம் என்பதுபோன்ற தனிப்பட்ட மார்க்கங்களை அனுசரிப்பவர்கள். கேவலம் தேவதாபக்தியினாலேயே எல்லாவற்றையும் ஸாதித்துக்கொள்ளப்பார்த்து கிருதார்த்தராவோமென்று நிச்சயிப்பவர். வைதிகமார்க்க விதூஷகர்கள், என்று பஹுவித அபவாதங்களுக்குப் பாத்திரராகிறவர்கள். அந்தச்சக்கிர ஆராதநம், பெஹிச்சக்கிர ஆராதனம், விக்கிரஹாராதனம், முதலிய அநேகவித ஆராதனங்களைச் செய்கின்றவர்கள். சிவன், பிரும்ஹா, விஷ்ணு, இந்திரன், உபேந்திரன், முதலான தனித்தனித்தேவதைகளை ஆராதிப்பவர்கள். இவர்களுக்குக் கிரியாயோகநிஷ்டர்களென்று பிரஸித்தமான பெயர் உண்டு. இவர்களுடைய தர்சனபேதங்கள் புராணஸாரத்தில்.

𑌶𑍈𑌵𑌂 𑌚 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 𑌶𑌾𑌕𑍍𑌤𑌂 𑌸𑍌𑌰𑌂 𑌵𑍈𑌨𑌾𑌯𑌕𑌂 𑌤𑌥𑌾 |
𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑌂 𑌚 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌨𑌿 𑌷𑌡𑍇𑌵 𑌹𑌿 |

சைவம், வைஷ்ணவம், சாக்தம், ஸௌரம், வைநாயகம், ஸ்காந்தம், என்று பக்திமார்க்கத்தின் மதங்கள் ஆறுவகையாகப் பிறிந்திருக்கின்றன, என்று சொல்லப்பட்டது.

[இப்பிறிவுக்கு சாஸ்திர ஆதாரம்]

ஸ்தூல திருஷ்டியால் (மேற்பார்வையினால்) பார்க்குமிடத்து உபனிஷத்துக்களிலும் பகவத்கீதையிலும் இம்மார்க்கங்கள் தனித் தனியாய் ஸ்வதந்திரங்கள், என்றுகாட்ட பல பிரமாணங்கள் காணப்படுகின்றன! உதாரணமாய் உபனிஷத்துக்களில்

ദൂരമേതേ വിപരീതേ വിഷൂചീ
അവിദ്യാ യാ ച വിദ്യേതി ജ്ഞാതാ ।

அவித்யை, கருமம், என்றும், வித்தை, ஞானம், என்றும் பெயர் பெற்ற இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று வெகுதூரமுள்ளது. தனித் தனிப் பலன்களைக் கொடுப்பவை பரஸ்பரம் விரோதமானவை.

ദ്വേ വിദ്യേ വേദിതവ്യേ പരാ ചൈവാപരാ ച ।

பரா, மேற்பட்டது அதாவது ஞானம், என்றும், அபரா, தாழ்ந்தது, அதாவது கருமம், என்றும் இருவகைப்பட்டவித்யைகள் அறியத்தக்கவை.

സോഽഹം മന്ത്രവിദേവാസ്മി നാത്മവിത് ।

அத்தகையநான் மந்திரத்தை, கருமத்தை, மட்டும் அறிந்தேனே ஒழிய அர்த்தத்தை, ஞானத்தை அறியவில்லை. இப்படிகளில் பேசப்பட்டது. பகவத்கீதையிலும் இவ்வர்த்தம்,

ജ്യായസീ ചേത് കർമണസ്തേ മതാ ബുദ്ധിർജനാർദന ।
തത് കിം കർമണി ഘോരേ മാം നിയോജയസി കേശവ ।

கர்மத்தைக்காட்டிலும் ஞானமே மேலானதென்று தேவரீர் எண்ணும் பக்ஷத்தில் ஓ கேசவனே! ஏன் என்னை இந்த கோரமான கருமத்தில் ஏவுகின்றீர்? என்ற அர்ஜுனன் வாக்கியத்தால் வெளியிடப்பட்டது.

கர்மமார்கத்துக்கு முக்கிய விரோதிகள் ஸாங்கியஸித்தாந்திகள். அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டியதில் முக்கியமானது

பிரகிருதி புருஷவிவேகம் (பிரகிருதியையும் ஜீவனையும் பற்றிய பகுத்தறிவு) என்று ஞானத்துக்கு பிராதான்யத்தை (முதன்மையை)ச்சொல்லுவார்கள். பகவானும் கீதையில் இவ்விஷயத்தை.

த்யாஜ்யம் தோஷவதித்யேகே கர்ம ப்ராஹுர்மநீஷிண: |

சில ஞானிகள் கருமத்தை தோஷத்தை தள்ளிவிடுகிறமாதிரி தள்ளிவிடவேண்டும் மென்றூர்கள், என்று அநுவதித்தார் இதற்கு மூலமான வேதவாக்கியம்.

ந கர்மணா ந ப்ரஜயா தநேந த்யாகேநைகே அம்ருதத்வ மாநஶு: |

கருமத்தினுலுமில்லை, பிரஜையினுலுமில்லை, பணத்தினுலுமில்லை, எல்லாவற்றையும் விடுவதினுல்தான், அமிருதத்வம், மோக்ஷம் கிட்டும் என்று சிலர் ஞானிகள் சொல்லுகிறூர்கள், என்பது. ஸ்வதந்திரமான ஞானமார்க்கம் கீதையில்.

ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதேऽர்ஜுந |
ந ஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரமிஹ வித்யதே |

ஞானமாகிற நெருப்பு எல்லாக்கருமங்களையும் சாம்பலாக்கிவிடுகின்றது இந்த உலகத்தில் ஞானத்துக்கு மேற்பட்ட பரிசுத்தியைக் கொடுக்கக்கூடியவஸ்துவொன்றுமில்லை. என்றும் சூசிப்பிக்கப் பட்டது.

இவ்விதமாகவே ஸ்வதந்திரமான பக்திமார்க்கமும் ஸ்தூல திருஷ்டியாகப்பலவிடங்களில் பகவத்கீதையில் காட்டப்பட்டிருக்கிறது. எப்படியென்றூல்?

அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் |
ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக்வ்யவஸிதோ ஹி ஸ: |
ஸர்வகர்மாண்யபி ஸதா குர்வாணோ மத்வ்யபாஶ்ரய: |
மத்ப்ரஸாதாதவாப்நோதி ஶாஶ்வதம் பதமவ்யயம் |
மாம் ஹி பார்த்த வ்யபாஶ்ரித்ய யேऽபி ஸ்யு: பாபயோநய:
ஸ்த்ரியோ வைஶ்யாஸ்ததா ஶூத்ராஸ்தேऽபி யாந்தி பராம் கதிம்|
வித்யா விநய ஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி |

ஶுநி சைவ ஶ்வபாகே ச பண்டிதா: ஸமதர்ஶிந: |
நாஹம் வேதைர் ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா |
ஶக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவாநஸி மாம் யதா |

மிகவும் கெட்ட ஆகாரங்களையுடையவனானாலும் வேறிடம் செல்லாதமனதுடன் என்னை பஜிப்பானானால் அவனேஸாதுவெனப்படுவான். அவன் நல்வழியில் நடப்பவனன்றோ? என்னை ஆச்ரயித்தவனாய் எல்லாக்கருமங்களையும் எப்போதும்செய்துகொண்டு வருகிறவன் என் அநுக்கிரஹத்தினால் சாசுவதமானதும் அழிவில்லாததுமான பதத்தை அடைவான். ஸ்திரீகள் வைசியர்கள் சூத்திரர்கள் என்றமாதிரிபாபங்களினால் (குறைவுகளினால்) தாழ்ந்த நிலைமைகளையடைந்தவரேயாயினும் என்னை ஆச்ரயிக்கும் பக்ஷத்தில் அவர்கள் எவருமே உத்தமமான கதியையடைவார்கள். வித்யை விநயம் முதலியவைகளையுடையவனென்ன கேவலம் பிறப்பினால் மட்டும் பிராம்மணனாயிருப்பவனென்ன பசுமாடென்ன, யானையென்ன, நாயென்ன, அதைப்புசிப்பவனென்ன இவர்களெல்லாரையும் அறிஞர்கள் சமமாகவே பார்ப்பார்கள். வெறும் வேதாத்தியயனத்தாலும் தபஸினாலும் யாகத்தினாலும் நீ பார்த்தது போல் ஒருவரும் என்னைக் காணமுடியாது. என்று பலவிடங்களில் சொல்லப்பட்டது. இதை விஸ்திரிக்கவேண்டியதில்லை.

[கீதாசாரியரின் ஸித்தாந்தம்]

இவற்றையெல்லாம்சேர்த்து ஸ்ரீகீதாசாரியன செய்யும் ஸித்தாந்தத்தை இனிக்கவனிப்போம்.

இதம் ப்ரமாணமிதரம் த்வப்ரமாணம் ஹ்யேவமிதி |
நீசா: கலஹமிச்சந்தி ஸந்திமிச்சந்தி ஸாதவ: |

இது ஒன்றுதான் பிரமாணம், மற்றொன்றும் பிரமாணமாகாது. என்று நீசர்கள் பரஸ்பரம் கலஹத்தில் இச்சையுடையவராயிருக்கின்றார்கள். ஸாதுக்களோவென்றால் எல்லாவற்றுக்கும் சேர்க்கையை (சமாதானத்தை)யே இச்சிக்கிறார்கள், என்கிற நியாயப்படி முற்கூறப்பட்டமூன்று மார்க்கங்களுக்கும் அவைகளை யொட்டியவேறு சிலவாதங்களுக்கும் ஸாமரஸ்யத்தை (ஒற்றுமையை)

பகவத்கீதை நிரூபிக்கிறது. எப்படியென்றால்? கருமததாலும் ஞானத்தாலும் உபகரிக்கப்பட்ட பக்தியோகமானது மோக்ஷபரியந்தமான புருஷார்த்தங்களுக்கு உபாயமாகிற தென்றும் அவ்வித பக்தியும்) ஸர்வாந்தர்யாமியாயும் (எல்லாவற்றுக்கும் உயிராயும்) ஸர்வேசுவரனுயுமிருக்கிற பகவான் வாசுதேவனைக் குறித்துச்செய்யத்தக்கதென்றும் கீழ்ச்சொல்லிய மூன்று வழிகளையும் ஒன்ருகச் செய்திருக்கிறது. இந்த நிர்ணயம் தான் தெளிவானது. மற்ற நிர்ணயங்கள் பிராந்திரூபங்கள். என்று,

𑌯𑍋𑌮𑌾𑌮𑍇𑌵 𑌮𑌸𑌂 𑌮𑍂𑌢𑌃 𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 ।
𑌸𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍 𑌭𑌜𑌤𑌿𑌮𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨 𑌭𑌾𑌰𑌤 ।

எவன் புத்தி மயக்க மில்லாமல் இவ்விதமாய்ப் புருஷோத்தமனை என்னை யறிகிருனோ, அவன்தான் எல்லாம் தெரிந்தவன். அவனே என்னைத் தன் எல்லாவித பாவங்கள் (நினைவு) களாலும் அடைகிறன். இதனல் பகவான் அருளிச்செய்தார்.

வேதங்கள் ஸ்மிருதிகள் இதிஹாஸ புராணங்கள் முதலிய எல்லா சாஸ்திரங்களும் பகவானுடைய மாஹாத்மியத்தையே நிரூபிக்கின்றனவென்று கீதையில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

𑌵𑍇𑌦𑍈𑌶𑍍𑌚𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑌹 𑌮𑍇𑌵 𑌵𑍇𑌦𑍍𑌯𑌃 ।
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌕𑍃𑌦𑍍𑌵𑍇𑌦 𑌵𑌿𑌦𑍇𑌵 𑌚𑌾𑌹𑌂 ।

வேதங்க ளெல்லாவற்ருலும் நானே அறியப்பட வேண்டியவனுயிருக்கிறேன். நானே வேதத்தின் பலன்களைக் கொடுப்பவன். அதின் உட்கருத்தை யறிந்தவனும் நானே. என்று இப்படி பகவான் வாசுதேவன் ஸாதித்த அபிப்பிராயமானது வேதவேதாந்த இதிஹாஸாதி சகலசாஸ்திரங்களுக்கும் ஒத்திருக்கின்றதென்பதும் ஸத்துக்களுடைய மனதுக்கு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கத்தகுந்த தென்பதும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

[பகவான் எல்லாவற்றையும் பற்றக்காட்டும் ஸாமரஸ்யம்.]

𑌯𑍋𑌯𑍋 𑌯𑌾𑌂𑌯𑌾𑌂 𑌤𑌨𑍁𑌂𑌭𑌕𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌽𑌰𑍍𑌚𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌤𑌸𑍍𑌯𑌤𑌸𑍍𑌯𑌾𑌚𑌲𑌾𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌂 𑌤𑌾𑌮𑍇𑌵 𑌵𑌿𑌦𑌧𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 ।

𑌸 𑌤𑌯𑌾 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑍀𑌹𑌤𑍇 |
𑌲𑌭𑌤𑍇 𑌚 𑌤𑌤𑌃 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌮𑌯𑍈𑌵 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑍍 𑌹𑌿𑌤𑌾𑌨𑍍 |
𑌯𑍇𑌽𑌪𑍍𑌯𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾 𑌭𑌕𑍍𑌤𑌾 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 |
𑌤𑍇𑌽𑌪𑌿 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌯𑌜𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌿𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 |
𑌅𑌹𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍇𑌵 𑌚 |
𑌨 𑌤𑍁 𑌮𑌾𑌮𑌭𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌤𑌶𑍍𑌚𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 |
𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚𑌾𑌹𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌃
𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌪𑍋𑌹𑌨𑌂 𑌚 |
𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌹𑍃𑌦𑍍𑌦𑍇𑌶𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 |

எந்தெந்த பக்தன் எந்தெந்த தேவதாரூபத்தை சிரத்தையுடன் அர்ச்சனை செய்ய இச்சிக்கிறானோ, அவனவனுடைய அந்தந்த சிரத்தையையே நான் அசைவற்றிருக்கும்படி செய்கிறேன். அவனவனும் அவ்வித சிரத்தையோடு கூடினவனாய்த் தன் தேவதையின் ஆராதனத்திலீடுபட்டு அத் தேவதையிடத்தினின்றும் வேண்டும் பலன்களைப் பெறுகிறான். ஆனால் அவை யெல்லாம் என்னாலேயே கொடுக்கப்பட்டவை. வேறு தேவதைகளின் பக்தர்களானாலும் அத் தேவதைகளை சிரத்தையுடன் பூஜிப்பார்களே யாகில் வழியில்லா வழியிலேனும் அவர்கள் என்னைப் பூஜிப்பவர்களே யாகிறார்கள். எல்லா யாகங்களிலும் கொடுக்கப்பட்ட ஹவிஸ்ஸுக்களையும் நானே உண்கின்றேன். அவற்றிற்காகக் கொடுக்கவேண்டிய பலன்களைக் கொடுக்கும் அதிகாரியும் நானே. இப்படி என்னை உண்மையாக அறியாதவர்கள் கீழே நழுவிவிடுகிறார்கள். எல்லாருடைய ஹிருதயத்திலும் நான் நிலைத்திருக்கிறேன். என்னால்தான் நினைவும் ஞானமும் வருவதும் அவை அழிந்துபோவதும் ஸம்பவிக்கின்றன, ஓ அர்ஜுன. ஈசுவரன் எல்லா பூதங்களுடையவும் (பிராணிகளுடையவும்) ஹிருதயத்தில் நிலையாக இருக்கிறான். என்றிப்படிப் பல விடங்களில் விளக்கப்பட்டது. பிறர்களுக்குச் செய்யப்பட்டதை யெல்லாம் தனக்குச் செய்யப்பட்டதாகக் கருதுவது பகவானுடைய உதார குணத்துக்குப்பொருத்தமானது. ஹிரண்யகசுபுவைப்போல் அஸுரஸ்வபாவ முடையவர்கள்,

த்ரைலோக்யம் வஶமாநிந்யே ப்ரஹ்மணோ வரதர்பித: |
யஜ்ஞபாகாநஶேஷாம்ஶ்ச ஸ்வயம் புபுஜே(அ)ஸுர: |

அந்த அஸுரன் பிரும்மாவின் வரத்தினுல் கர்வம் கொண்டு மூன்று லோகங்களையும் தன் வசமாக்கிக்கொண்டான். தேவதைகளுக்குக் கொடுக்கப்பட்ட யக்ஞ பாகங்களெல்லாவற்றையும்மிகுதியில்லாமல் தானே புஜித்தான், என்றபடியே தானே ஸாக்ஷாத் ஸர்வேசுவரனென்று ஸ்தாபித்துக்கொண்டு எல்லாவற்றையும் தாமே பிறர்க்கின்றி யனுபவிக்க வேண்டுமென்றும் பேராசையோடு கூடி ஸர்வலோகத்தாலும் நிந்திக்கத் தக்கவர்களாக இருப்பார்கள்.

இவ்விதமின்றியே முன் கூறப்பட்டபடி லோக விரோதமில்லாதபடியும் எல்லாரும் ஒப்புக்கொள்ளக்கூடிய பிரகாரத்திலும் வித்தாந்த ஸாரம் உபதேசித்தபடியாலும் அதற்குத் தக்கபடி தான் அனுஷ்டித்துக் காட்டியதாலும் அதற்கனுகுணமான மனோபாவத்தையு முடைத்தாயிருந்ததாலும் அவதாரத்தில் மனுஷியர்களோடு தானும் ஒரு மனுஷியன்போலவே யிருந்தாலும் ஸ்ரீ வாஸுதேவன் ஸர்வேசுவரனுகவே காணப்பட்டான், என்று லௌகிக வ்யவஸ்தையை யனுசரித்தும் வித்தாந்தத்தை சமர்த்திக்கலாம். ஆகையால்தான்,

ந புத்திபேதம் ஜநயேத் அஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம் |
ஜோஷயேத் ஸர்வகர்மாணி வித்வாந் யுக்த: ஸமாசரந் |

கருமங்களி லீடுபட்ட அறிவிலிகளான ஜனங்களுக்கு புத்தியின் மாறுபாட்டத்தை யுண்டாக்கலாகாது.

ஞானியானவன் யோகபுத்தியோடு தன் கருமானுஷ்டானங்களைச் சரிவரச் செய்துகொண்டு அத்தகையவர்கள் எல்லாக்கருமங்களையும் சிரத்தையுடன் நடத்திவரும்படி தூண்டக்கடவன். என்று பகவான் அருளிச்செய்யும்படி யிருந்தது. இந்த வசனம் மற்றதெல்லாவற்றுக்கும் உபலக்ஷணம்(உதாகரணமாகக்கடவது.)

[ஸாங்கிய யோகங்களின் ஸாமரஸ்யம்.]

இப்படியிலேயே ஸாங்கியம் யோகம் என்பவைகளுக்குப் பரஸ்பரமும் வேதாந்தத்தோடும் ஸாமரஸ்யம் ஸ்ரீ கீதையி லருளிச்செய்யப்பட்டது.

𑌲𑍋𑌕𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌪𑍁𑌰𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌮𑌯𑌾𑌨𑌘 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌂 ।
𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑍌 𑌪𑍃𑌥𑌗𑍍𑌬𑌾𑌲𑌾𑌃 𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 ।
𑌏𑌕𑌮𑌪𑍍𑌯𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌸𑌮𑍍𑌯𑌗𑍁𑌭𑌯𑍋𑌰𑍍𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇 𑌫𑌲𑌂 ।
𑌯𑌤𑍍 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑍈𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌤𑌦𑍍𑌯𑍋𑌗𑍈𑌰𑌪𑌿
𑌗𑌮𑍍𑌯𑌤𑍇
𑌏𑌕𑌂 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌂 𑌚 𑌯𑍋𑌗𑌂 𑌚 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌸 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ।

தோஷமற்றவனே: இவ்வுலகில் ஸாங்கியம் என்றும் யோகமென்றும் இருவிதமான நடைகளுண்டென்று ஏற்கனவே என்னால் சொல்லப்பட்டது. ஸாங்கியர்கள் ஞானமார்க்கத்தாலும் யோகர்கள் கரும மார்க்கத்தாலும் விமுக்தியைப் பெறுவார்கள். மதியீனர்கள் ஸாங்கியமும் யோகமும் வெவ்வேறென்று பிதற்றுவார்கள். பண்டிதர்கள் அப்படிச் சொல்லார்கள். இவற்றில் ஒன்றையாவது செவ்வையாய்ப் பின்பற்றினவன் இரண்டினாலும் கிடைக்கக்கூடிய பலன்களையும் பெறுவான். ஸாங்கியர்களால் அடையப்படும் ஸ்தானமே யோகர்களாலும் பெறப்படுகிறது. ஸாங்கியம் யோகம் ஆகிய இவ்விரண்டையும் ஒன்றென்று எவன் உணர்கின்றானோ, அவனே விழிகண்ணுள்ளவனாவான் என்று இதில்.

𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯

(செவ்வையாய்ப்) பின்பற்றினவன், என்றதினால் பிரஸித்தர்களான ஸாங்கிய தந்திரிகளும் யோகநிஷ்டர்களும் செவ்வையா யறியாதவர்கள், என்றதாயிற்று.

மேலும் மீமாம்ஸக வைதிகர்கள் அங்கீகரித்த விசுத்தமான கருமமார்க்கம் யோகர்களினால் பரிஷ்கரிக்கப்பட்டது. மீமாம்ஸகமாகிற யாகவித்தாந்தத்தில் பரமேசுவரனையும் அங்கீகரித்து அவன் ஸங்தோஷத்தை யுத்தேசித்து எல்லாக் கருமங்களுடையவும் பலத்தை அவனுக் கர்ப்பணம் பண்ணும்படியும அக்கருமங்களின் கர்தருத்வத்தை (செய்பவனாயிருக்கையை) பிரகிருதியின் குணங்களில் (ஸத்வரஜஸ்தமஸ்ஸுகளில்) வைத்து அக்கருமாநுஷ்டானங்களைச் செய்யவேண்டுமென்றும் விவேக மியாதி அப்

பியாஸத்தையும் செய்யவேண்டுமென்றும் உபதேசிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இவ்விதமாய்ப் பரிசுத்தமான மனதில்

𑌵𑌿𑌵𑍇𑌕𑍋 𑌵𑍈𑌶𑌦𑍍𑌯

(தெளிவையுணர்தல்) என்கிற ஸாக்ஷாத்கார முண்டாகுமென்றும் அதனுல் சுக்லம் (சுத்தமானது) கிருஷ்ணம் (கலக்கமுள்ளது கருப்பு) என்னப்படும் தர்மங்கள் உண்டாகின்றனவென்றும் தர்மத்தால் பெந்தம் (கட்டு) நிவிருத்தமாய் மோக்ஷம் ஸித்திக்குமென்றும் அவர்களுடைய ஸித்தாந்தம் இருக்கும்படி. இங்கு கருமங்களின் பலம், அவற்றில் பற்று, நாம் செய்தோமென்னும் நினைவு, (பல ஸங்க கர்த்ருத்வங்கள்) இவற்றின் தியாகமே (விடுகையே) ஸந்நியாஸமென்று அபிப்பிராயம். இந்த யோகர்கள் தான் கர்மயோக நிஷ்டர்கள். இவர்களுக்கு இஷ்டமான ஸந்நியாஸத்தையே பகவானும் அங்கீகரித்தான்.

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌾𑌨𑌿 𑌗𑍁𑌣𑍈𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 |
𑌅𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑌰𑍍𑌤𑌾𑌹𑌮𑌿𑌤𑌿 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 |
𑌮𑌯𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌚𑍇𑌤𑌸𑌾 |
𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌵𑌿𑌗𑌤𑌜𑍍𑌵𑌰𑌃 |

பிரகிருதியின் குணங்களினுல் எங்கும் செய்விக்கப்பட்ட கருமங்களை அஹங்காரத்தினுல் மதிமயங்கிய மனிதன் தானே செய்ததாகக் கருதுகிறுன். ஆத்மாவைப்பற்றிய உண்மையான ஞானத்துடன் எல்லாக் கருமங்களையும் என்னிடம் அர்ப்பணம் செய்துவிட்டு பலத்தில் ஆசையையும் மமகாரத்தையும் ஒழித்து மனதில் தாபமற்றவனுய் சண்டையைச் செய்வாயாக என்று இவர்களின் ஸித்தாந்தத்தை அநுவாதம் செய்தான்.

இதற்கு முன்னுல் கருமத்தைச் செய்வதா விடுவதா? என்னும் சங்கைக்கும் பரிஹாரமருளிச் செய்திருக்கிறுன். அதாவது,

𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌂 𑌦𑍋𑌷𑌵𑌦𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑍇 𑌕𑌰𑍍𑌮 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌰𑍍𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌃 |
𑌯𑌜𑍍𑌞𑌦𑌾𑌨𑌤𑌪𑌃𑌕𑌰𑍍𑌮 𑌨 𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌚𑌾𑌪𑌰𑍇 |

சில அறிஞர்கள் கருமம் தோஷத்தைப்போல் விலக்கத்தக்கது, என்றார்கள். யாகம் தானம் தபசு முதலிய கருமங்களை விடவே கூடாது. செய்தே தீரவேண்டும். என்று இவ்வித பரிஷ்காரத்தினால் தான் கர்மயோகத்துக்குக் கேவலம் யோகம், என்னும் வ்யவஹாரம் வந்திருப்பதென்றறியலாம். எப்படியென்றால் ?

𑌏𑌷𑌾𑌤𑍇𑌽𑌭𑌿𑌹𑌿𑌤𑌾𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑍋𑌗𑍇𑌤𑍍𑌵𑌿𑌮𑌾𑌂
𑌶𑍃𑌣𑍁 ।

ஸாங்கியத்தில் நடக்கவேண்டிய புத்தி உனக்கு இப்படிச் சொல்லப்பட்டது. இனி யோகத்தில் நடையாடவேண்டிய புத்தியைக் கேள். இப்புத்தியுடன் கூடிக் காரியங்களைச் செய்வாயானால் கருமத்தின் பெந்தத்தை (கட்டை) தூரத் தள்ளி விடுவாய், என்று ஸாங்கியயோக சப்தங்களின் பொருளைப் பகவானே விளக்கினான். இதனால் கேவலம் ஸாங்கிய மதத்தினர் கருமங்களை ஸ்வரூபத்தோடு அதாவது செய்வதையே விட்டுவிட வேண்டுமென்னும் பக்ஷத்தையும் யோகமதஸ்தர்கள் அவற்றின் பலன்களைமட்டும் தியாகம் செய்யவேண்டுமென்னும் பக்ஷத்தையும் முறையே ஏற்றுக்கொண்டவர்கள் என்பதும் தெளிவாகிறது. இவ் விரண்டு பக்ஷங்களும் வேதத்திலும் சொல்லப்படுகின்றன.

𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌨 𑌪𑍍𑌰𑌜𑌯𑌾𑌧𑌨𑍇𑌨 𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌨𑍈𑌕𑍇 𑌅𑌮𑍃𑌤𑌤𑍍𑌵
𑌮𑌾𑌨𑌶𑍁𑌃 ।
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨 𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌃
𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌾𑌦𑍍𑌯𑌤𑌯𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌃 ।

ஓர் சாராரான ருஷிகள் கருமம் பிரஜை தனம் முதலியவைகளை விட்டு தியாகம் (விட்டுவிடுதல்) என்ற ஒன்றாலேயே மோக்ஷத்தை யடைந்தார்கள். அவர்கள் வேதாந்தத்தைத் தீரவிசாரித்து அர்த்தத்தை நிர்ணயித்து ஸந்நியாஸயோகத்தால் யதிகளாய்ப் பரிசுத்தமான ஸத்வகுணத்தைப் பெற்றவர்கள், என்று.

[தியாக ஸந்நியாஸஸாமரஸ்யம்.]

பகவானும் கீதையில் தமது ஸித்தாந்தத்தில் சொல்லப்பட்ட ஸந்நியாஸமென்பது ஸாங்கியமதத்தில் கூறப்பட்டதியாகம்

தான், என் றுபதேசித்தான். கருமஸ்வரூபத்துகருப் பரித்தியாகம் (விடுதல்) என்பதே கிடையாது. அதாவது கருமத்தைச் செய்யாம லிருக்கலாகாது, என்று திருவுள்ளம்.

𑌅𑌨𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌯𑌃 ।
𑌸 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍀 𑌚 𑌯𑍋𑌗𑍀 𑌚 𑌨 𑌨𑌿𑌰𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌨 𑌚𑌾𑌕𑍍𑌰𑌿𑌯𑌃 ।

பலத்தில் இச்சையில்லாமல் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்பவனே ஸந்நியாஸியும் யோகியுமாவான் அக்னிகாரியங்களை விட்டவனும் மற்றும் ஒரு காரியமும் செய்யாதவனும் அப்படியாகமாட்டார்கள். இம்மாதிரியானவசனங்களினால் பல விடங்களில் பகவான் ரஹஸ்யார்த்தங்களைச் சொல்லியிருந்தும் அது வெளிப்படையாகத் தெளிவதற்காக மறுபடியும் அர்ஜுனன் வினவுகின்றான்.

𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌵𑍇𑌦𑌿𑌤𑍁𑌂 ।
𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌯 𑌚 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶 𑌪𑍃𑌥𑌕𑍍𑌕𑍇𑌶𑌿𑌨𑌿𑌷𑍂𑌦𑌨 ।

மஹாபாஹுவே! ஹ்ருஷிகேசனே! கேசியை முடித்தவனே! தேவரீரிடமிருந்து ஸந்நியாஸத்தினுடையவும் தியாகத்தினுடையவும் உண்மைகளைத் தனித்தனியா யறிய விரும்புகிறேன். என்று.

இதற்கு பகவான் சொல்லும் உத்தரம்.

𑌨𑌿𑌯𑌤𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋 𑌨𑍋𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌮𑍋𑌹𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌤𑌾𑌮𑌸𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ।

அவசியம் செய்யப்பட வேண்டியவை, என்று விதிக்கப்பட்ட கருமங்களை விடுவதென்பது ஒருபடியாலும் பொருந்தாது. மதியீனத்தால் அவைகளைச் செய்யாமலிருப்பது தமோகுணம் தலையெடுத்துவிட்டதாகும், என்றருளிச்செய்தான். இதனுல் முன் சொன்ன அர்த்தத்தையே விவரித்ததாயிற்று. இந்த அபிப்பிராயம் எல்லா பாஷ்யகாரர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இவ்விதம் ஞானமார்க்கத்தை ஸாங்கியமென்றும் கர்மமார்க்கத்தை யோகமென்றும் நிர்ணயிக்கப்பட்டதைத் திருவுள்ளம் பற்றி ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன்,

𑌤𑌤𑍍𑌰 𑌪𑌰𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌮 𑌵𑌿𑌷𑌯𑌜𑍍𑌞𑌾𑌨 𑌯𑍋𑌗 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌕𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌂 | 𑌸𑌮𑌾𑌧𑌿𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌨𑌿𑌷𑍍𑌠𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌯𑍋𑌗𑌂 |

அதில் பரிசுத்தமான ஆத்மஸ்வரூபத்தைச் சிந்திப்பதாகிய ஞான யோகத்தைச் சொல்லும் சாஸ்திரம் ஸாங்கியம், ஸமாதி பரியந்தமான கர்மயோகத்தில் நிலைபெற்ற சாஸ்திரம் யோகம், என்று

[இது அநாதி ஸம்பிரதாயம்.]

இப்படிக் கேவல விசாரத்தை மட்டும் முன்னிட்டு ஸித்தாந்தத்தை நிரூபித்தால் அநாதி காலமாய் வந்திருக்கும் இந்த வைதிக ஸித்தாந்தமும் அவைதிக ஸித்தாந்தங்களைப்போல் ஆதரிக்கத் தகாததாக ஆகலாமே? என்றால், இந்த சங்கைக்குப் பகவானே கீதையில் நாலாவது அத்தியாயத்தில் ஸமாதானம் அருளிச் செய்திருக்கிறார் அதாவது:

𑌇𑌮𑌂 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑍇 𑌯𑍋𑌗𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌹𑌮𑌵𑍍𑌯𑌯𑌂 |
𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍 𑌮𑌨𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌮𑌨𑍁𑌰𑌿𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑌵𑍇𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 |
𑌏𑌵𑌂 𑌪𑌰𑌂 𑌪𑌰𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌮𑌿𑌮𑌂 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃 |
𑌸 𑌕𑌾𑌲𑍇𑌨𑍇𑌹 𑌮𑌹𑌤𑌾 𑌯𑍋𑌗𑍋 𑌨𑌷𑍍𑌟𑌃 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 |
𑌸 𑌏𑌵𑌾𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌤𑍇𑌽𑌦𑍍𑌯 𑌯𑍋𑌗𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌃 |
𑌭𑌕𑍍𑌤𑍋𑌽𑌸𑌿 𑌮𑍇 𑌸𑌖𑌾 𑌚𑍇𑌤𑌿 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌹𑍍𑌯𑍇𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 |

இந்த அழிவற்ற யோகமானது முதலில் விவஸ்வானுக்கு என்னா லுபதேசிக்கப்பட்டது. விவஸ்வான் மனுவுக்கும் மனு இக்ஷ்வாகுவுக்கும் முறையே இதை உபதேசித்தார்கள். இப்படிப் பரம்பரையில் வந்த இந்த யோகத்தை ராஜரிஷிகள் நன்றாய் அறிந்திருந்தார்கள். அத்தகையது வெகு காலங்கள் கடந்ததின் பயனாக நஷ்டமாய்விட்டது. புராதனமானதும் உத்தம ரஹஸ்யமுமான அதே யோகம் இன்று உனக்கு நீ என் பக்தனும்சகாவு மானபடியால் என்னால் உபதேசிக்கப்பட்டது, என்று. அப்படியே ஸ்ரீ பாகவதத்திலும் (11-ஸ்க-அத்.)

𑌕𑌾𑌲𑍇𑌨 𑌨𑌷𑍍𑌟𑌾 𑌪𑍍𑌰𑌲𑌯𑍇 𑌵𑌾𑌣𑍀𑌯𑌂 𑌵𑍇𑌦𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌾 |
𑌮𑌯𑌾𑌦𑍌 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌯𑌸𑍍𑌯𑌾𑌂 𑌮𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 |
𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌸𑍍𑌵𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌯 𑌮𑌨𑌵𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌜𑌾𑌯 𑌸𑌾 |
𑌤𑌤𑍋 𑌭𑍃𑌗𑍍𑌵𑌾𑌦𑌯𑍋𑌽𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍 𑌸𑌪𑍍𑌤 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 |
𑌤𑍇𑌭𑍍𑌯𑌃𑌪𑌿𑌤𑍃𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑍁𑌤𑍍𑌰𑌾 𑌦𑍇𑌵𑌦𑌾𑌨𑌵 𑌗𑍁𑌹𑍍𑌯𑌕𑌾𑌃 |
𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾 𑌸𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌧𑌰 𑌚𑌾𑌰𑌣𑌾𑌃 |
𑌕𑌿𑌨𑍍𑌦𑍇𑌵𑌾𑌃 𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌾 𑌨𑌾𑌗𑌾 𑌯𑌕𑍍𑌷 𑌕𑌿𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌦𑌯𑌃 |
𑌬𑌹𑍍𑌵𑍍𑌯𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌯𑌃 𑌰𑌜𑌸𑍍𑌸𑌤𑍍𑌵 𑌤𑌮𑍋𑌭𑍁𑌵𑌃 |
𑌯𑌾𑌭𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌭𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑌤𑌯𑌸𑍍𑌤𑌥𑌾 |
𑌯𑌥𑌾𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾 𑌵𑌾𑌚𑌸𑍍𑌸𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑌿 𑌹𑌿 |
𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿 𑌵𑍈𑌚𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌤𑌯𑍋 𑌨𑍃𑌣𑌾𑌂 |
𑌪𑌾𑌰𑌂𑌪𑌰𑍍𑌯𑍇𑌣 𑌕𑍇𑌷𑌾𑌂𑌚𑌿𑌤𑍍 𑌪𑌾𑌷𑌣𑍍𑌡𑌮𑌤𑌯𑍋𑌽𑌪𑌰𑍇 |

வேதமென்னப்பட்ட இந்த வாக்கானது வெகுகாலங்கடந்து பிரளயத்தில் நஷ்டமாய்விட்டது. என் தர்மத்தையே உருவமாகவுடைய லக்ஷ்மியினால் ஆதியில் அது பிரும்ஹாவுக்குச் சொல்லப்பட்டது. அவரால் தன் மூத்த குமாரனாகிய மனுவுக்கு அது உபதேசிக்கப்பட்டது. பின்னர் பிருகு முதலிய ஏழு பிரும்ஹரிஷிகள் மனுவினிடத்திலிருந்தும் அவர்களிடமிருந்து அவர்கள் பிள்ளைகளாகிய தேவர் தானவர் குஹ்யர் முதலியவர்களும், மேல் மனிதர்கள், ஸித்தர்கள், கந்தர்வர்கள், வித்யாதரர், சாரணர், கிந்தேவர், கின்னரர், நாகர், யக்ஷர், கிம்புருஷர் முதலானவர்களும் முறையே கிரஹித்தார்கள். ரஜஸ் ஸத்வம் தமஸ் என்னும் குணங்களின் காரணங்களினால் பிராணிகள் பிரிந்திருக்கிறமாதிரியே அவர்களுடைய ஸ்வபாவங்களும் வெவ்வேறு விதங்களாகவிருந்தன. அவரவர்கள் ஸ்வபாவங்களுக்குத் தக்கபடி அவரவர்கள் வார்த்தைகளும் வெகு விசித்திரங்களான பிரவாஹங்களாகப் பெருகின. இப்படி ஸ்வபாவத்தின் ஆச்சிரியபேதங்களினால் மனிதர் புத்திகளும் வேறுபடுகின்றன. சிலரிடத்தில் பரம்பரையாக இப்பேதங்கள் உள. மற்றையவர் நாஸ்திக புத்தியையுடையவராயும் ஆனார்கள், என்று விரிவாகச் சொல்லப்பட்டது. இப்படிப் பிரபஞ்ச சக்கிரம் அனாதியாகச் சுழன்றுவருவதால் புதியது,

பழையது என்னும் வ்யவஹாரத்துக்கே இடமில்லை. இது அற்ப ஞானத்தைப் படைத்தவர்களின் பேச்சேயன்றி மிகக் கற்றவரின தல்ல. இவர்களுக்கு மந்தர்களின் வார்த்தை ஆச்சரியத்தையு முண்டாக்காது.

[கீதை பாஞ்சராத்திரத்தின் ஸாரம்.]

இத்தகைய உபதேசங்களைப் போதிக்கும் ஸ்ரீ கீதையானது பாஞ்சராத்ர சாஸ்திரத்தின் ஸாரமென்றும் அப்பாஞ்சராத்திரம் தானும் ஏகாயனமெனப்படும் வேதத்தையே மூலமாக உடைய தென்றும் மஹாபாரதம் மோக்ஷ தர்மத்தில் 347—349-வது அத்தியாயங்களில் ஸ்பஷ்டமாக கிருஷ்ண த்வைபாயனசார்ய(வ்யாஸ) ரால்வெளியிடப்பட்டது.

ஏவமேஷ மஹாந் தர்ம: ஸ தே பூர்வம் ந்ருபோத்தம |
கதிதோ ஹரிகீதாஸு ஸமாஸவிதிகல்பித: |
ஸமுபோடேஷ்வநீகேஷு குருபாண்டவயோர்ம்ருதே |
அர்ஜுநே விமநஸ்கே ச கீதா பகவதா ஸ்வயம் |

ஓ நரோத்தமனே! உனக்கு இப்படிச் சுருங்கச் சொல்லப்பட்ட இந்த மஹா தர்மமானது முன்னர் குருபாண்டவ ஸைநியங்கள் போர்க்களத்தில் கூடினபிறகு அர்ஜுனன் கோழைமனதை யடைந்தவளவில் அவனுக்கு பகவான் தன்னாலேயே உபதேசிக்கப் பட்டது என்பது முதலியன கவனிக்கத்தக்கவை. எல்லா அவை திக ஸித்தாந்தங்களும் வைதிக ஸித்தாந்தங்களும் இப்பொழு தும் படிக்கப்படும் உபனிஷத்துக்களிலேயே அநுவாதம் பண் ணப் பட்டும் நிரஸிக்கப்பட்டு மிருக்கின்றன. பிராணி ஸமூஹம் அநாதியாகையால் அதையனுசரித்து அபிப்பிராய பரம்பரை களும் ஏற்றச்சால் மூழ்கி எழுந்திருக்கும் கிரமத்தில் மறைந்தும் பிரகாசித்தும் மாறி மாறி வருகின்றன. ஆதலால் நூதனம் புராதனம், என்னும் நினைவுகளைக்கொண்டு ஒன்றை ஆதரிப்பதும் மற்றொன்றை அனாதரிப்பதும் சரியல்ல. அப்படிச் செய்வதற்கு ஆதாரமு மில்லை.

இங்கு ஒரு மதத்தை அதன்விஷயமான கிரந்தத்தைச் செய்தவரின் பெயரால் சொல்லுவது வியவஹார ஸௌகரியத்துக்காகவும் அத்தகைய வருடைய அங்கீகாரத்தைப் புகழுவதற்க்காகவும் அல்லது பாணிநீ முதலியாரைப்போல் அன்னுரால் பிரவசனம் செய்யப்பட்டது, என்பதை வெளிப்படுத்து வதற்காகவும் தான். இவ்வளவைக்கொண்டும் முன்பின் விஷய ஸந்தர்ப்பங்களை வைத்துக்கொண்டும் விசாரங்களைச் செய்வது ரஸிகர்களுக்குத்தப்பாகத் தோன்ருது.

இந்தப்பிரகாரம் பகவத்கீதையில் காணப்பட்ட தத்துவ விஷயமான தேவதைகளைப் பற்றிய விரோதமும், ஹித(உபாய) விஷயமான தியாகம் சந்நியாாசம் இவைகளைப்பற்றச் சொல்லக் கூடிய .விரோதமும் சமாதானம் பண்ணப்பட்டன. இவ்விதமாகவே வர்ணுச்ரமங்களைப் பற்றிய விரோதமும், சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம் (நான்குவித வர்ணங்களையுடைய பிரஜை என்னுல் சிருஷ்டிக்கப்பட்டது) என்பது முதலியவைகளாலும் பரிஹரிக்கப்பட்டது. இப்படியே மற்றும் பலவிரோதங்களின் உபசமமும் ஸ்ரீ கீதையில் காணப்படும்.

[இதுவே ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம்]

இப்படி பகவான் வாசுதேவனுல் உபதேசிக்கப்பட்டும் பின்னுல் வேதாசார்யரால் (ஸ்ரீ வேதாந்த தேசிகனுல்) விசதம் பண்ணப் பட்டதுமான ஸாமரஸ்ய மார்க்கத்தை அவலம்பித்தே ஸ்ரீ ராமானுஜ பகவானுல் விசிஷ்டாத் வைதஸித்தாந்தம் ஸ்தாபிக்கப்பட்டது. இது ஸ்ரீ பாஷ்யத்தில் 2-2-42 இவ்விதமாக வெளியிடப்பட்டது.

ஸாங்க்யம் யோகம் பாஞ்சராத்ரம் வேதாரண்யகமேவ ச |
பரஸ்பராங்காந்யேதாநி பாஞ்சராத்ரஞ்ச கத்யதே |

என்றுமோக்ஷ த 'மத்தில் வேதவ்யாசர் அருளிச் செய்தார். இதனர்த்தம் ஸாங்கிய மென்னும் யோகமென்னும் வேதமென்றும் ஆரண்யக மென்றும் இந்நான்கும் பரஸ்பரம் அங்கபாவத்தையடைந்து ஒரே தத்துவத்தைப் பிரதிபாதிக்க ஏற்பட்டவை

யாகையால் இவையெல்லாம் ஒன்று சேர்ந்த சாஸ்திரத்துக்குப் பஞ்சராத்திரம், என்று பெயர் வந்தது என்று, எப்படியென்றால்? சாங்கியரால் சொல்லப்பட்ட (25) தத்துவங்களையும் யோகருடைய யமம் நியமம் முதலிய (8) அங்கங்களோடு கூடின யோகத்தையும் வேதத்தில் சொல்லப்பட்ட யாகம் முதலிய கர்மஸ்வரூபங்களையும் அங்கீகரித்து, தத்துவங்களெல்லாம் பிரும்மாத்மகங்கள் (பிரும்மத்தைஉள்ளுயிராக உடையவைகள்) என்றும், யோகத்துக்கு பகவானே விஷயம் (பகவானைக்குறித்தே செய்யத்தகுந்தது) என்றும், வைதிக கர்மங்களெல்லாம் பகவானுக்கு ஆராதனங்கள், என்றும் சொல்லிக்கொண்டு பிரும்ஹ ஸ்வரூபத்தை ஆரண்யங்கள் வெளியிடுகின்றன. இந்த அம்சமே பரப்பிருஹ்ம்மமான நாராயணன் தன்னாலேயே பஞ்சராத்திரசாஸ்திரத்தில் விவரிக்கப்பட்டது. சாரீரக (வேதாந்த) சாஸ்திரத்திலோவென்றால்? இதரசாஸ்திரங்களில் சொல்லப்பட்ட சகல தத்துவங்(வஸ்துக்)களும் பிரும்மாத்மகமென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. என்று இந்தப்பிரகாரம் ஸ்ரீபாஷ்யத்தில் சகல சாஸ்திரங்களுக்கும் பொருத்தமாயுள்ள சாம ரகசியம்பிரகாச மாகிறது. இங்கே யோகமென்றால் பரப்பிரும்ம உபாஸநம், என்னப்பட்டது. அதுதான் மோக்ஷஸாதனமான பக்தியோகம். இதுமேலே விவரிக்கப்படும்.

முன் சொன்ன எட்டுவிதமான யோகங்களில் பக்தியோகமே அங்கி. மற்றவைகள் படிப்படியாக இதற்கு அங்கங்களானவை, என்பதும் இந்த ஸாமரஸ்ய ஸித்தாந்தத்தை யொட்டியது. மேற்பார்வைக்கு அவை ஒவ்வொன்றும் தனித்தனி உபாயங்களாகக் காணப்படலாம். ஆனால் அப்படியல்ல. அப்படி நினைத்தால் மோக்ஷோபாயங்களில் விகற்பம் (தனித்தனி சுதந்திரமார்க்கம்) என்பதுபோன்ற பலதோஷங்கள் உண்டாகுமென்று சாஸ்திரகாரர்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

பகவத் கீதையில் சொல்லப்பட்ட இந்த பக்தியோகந்தான் உபநிஷத்துக்களில் கூறப்பட்ட மோக்ஷசாதனமான பரமபுருஷ ஸாக்ஷாத்காரம், (தரிசனம்) என்று ஸித்தாந்தம். இதுவே நாந்ய꞉ பந்தா꞉’ மோக்ஷத்துக்கு வேறுவழி கிடையாது),

என்று வேதத்தில் பேசப்பட்டு இந்த நியாயத்தால் அபூர்வமான விசிஷ்டாத் வைத விஸ்தாரத்தில் ஸம்பிரதாய பரம்பரையில் வந்து ஸ்ரீ ராமானுஜ பகவானால் ஸ்தாபிக்கப்பட்டது. பக்தி மார்க்கமும் உபாஸந மார்க்கமும் வெவ்வேறு வழிகளென்று இதரர்கள் வியாக்கியானம் செய்ததை இவர் ஒரு வழியாக்குகிறார். இது முக்கியமான அம்சம்.

[ஞானகர்மங்கள் சேர்ந்த இவ்வனுஷ்டானத்துக்கு]
வேதத்தில் உதாரணம்,

இப்படி ஜீவாத்ம பரமாத்ம தத்வஞான பூர்வகமாக விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்யவேண்டியது அவசியம். இது கர்மயோகம், ஞானயோகம், ஆகிய இரண்டும் சேர்ந்த அநுஷ்டானம். இதனால் எல்லாவிதப்புருஷார்த்தங்களும் பெறப்படுகின்றன, என்ற விஷயத்தில் நாம் நித்தியமாக அநுஷ்டிக்க வேண்டிய ஸந்தியாவதனத்தை உதாரணமாக்கி அதின் ரஹஸ்யார்த்தத்தை விவரிக்கிறோம். இவ்விஷயம் தைத்தரீய ஆரண்யகத்தில் இரண்டாவது பிரச்னத்தில் உளது.

𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑌿 𑌹𑌵𑌾 𑌪𑍁𑌰𑍋𑌽𑌨𑍁𑌵𑌾𑌕𑍇 𑌤𑌪𑍋𑌗𑍍𑌰𑌮𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤 |
𑌤𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌰𑍍𑌵𑌰𑍇𑌣𑍋𑌪𑌾𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌯𑌤 |
𑌤𑌾𑌨𑌿 𑌵𑌰𑌮𑌵𑍃𑌣𑍀𑌤𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍋 𑌨𑍋𑌯𑍋𑌦𑍍𑌧𑌾 𑌇𑌤𑌿 |
𑌤𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌰𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 | 𑌯𑍋𑌧𑌯𑌧𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 | 𑌤𑌸𑍍𑌮𑌾
𑌦𑍁𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌂 𑌹𑌵𑌾 𑌤𑌾𑌨𑌿 𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯𑍋𑌧𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯𑌾𑌵𑌦𑌸𑍍𑌤
𑌮𑌨𑍍𑌵𑌗𑌾𑌤𑍍 | 𑌤𑌾𑌨𑌿𑌹𑌵𑌾 𑌏𑌤𑌾𑌨𑌿 𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑌿 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌽𑌭𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿
𑌤𑍇𑌨𑌾𑌮𑍍𑌭𑌸𑌾 𑌶𑌾𑌮𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 | 𑌤𑌦𑍁𑌹𑌵𑌾 𑌏𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌃
𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑌾𑌃 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌽𑌭𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑌾 𑌆𑌪
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌵𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑌨𑍍𑌤𑌿 | 𑌤𑌾 𑌏𑌤𑌾 𑌆𑌪𑍋 𑌵𑌜𑍍𑌰𑍀𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌤𑌾𑌨𑌿
𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑌿 𑌮𑌨𑍍𑌦𑍇𑌹𑌾𑌰𑍁𑌣𑍇 𑌦𑍍𑌵𑍀𑌪𑍇 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌿𑌪𑌨𑍍𑌤𑌿 | 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂
𑌤𑍇𑌨 𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌮𑌵𑌧𑍂𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 | 𑌉𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌸𑍍𑌤𑌂𑌯𑌨𑍍𑌤 𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯 𑌮𑌭𑌿
𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌸𑌕𑌲𑌂 𑌭𑌦𑍍𑌰𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇||
𑌅𑌸𑌾𑌵𑌾𑌽𑌽𑌦𑌿𑌤𑍍𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 | 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌸𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌪𑍍𑌯𑍇𑌤𑌿
𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 |

என்று இந்த மந்திரத்துக்கு உள்ளபடியே மேலாக அறியப்படும் அர்த்தமாவது? பூர்வ மொருகாலத்தில் சில ராக்ஷஸர்கள் உக்கிரமான தபஸைச் செய்தார்கள். அவர்களுக்குப் பிரஜாபதி தோன்றி வரங்கேட்கச் சொன்னார். ராக்ஷஸர்கள் ஸூரியனோடு எப்போதும் யுத்தம் செய்யவேண்டு மென்று வரங்கேட்டார்கள். அப்படியே சண்டை செய்யுங்கள், என்று பிரஜாபதியும் மொழிந்தார். இந்த வரத்தைப் பெற்று அவ்வரக்கர்கள் உதயம் முதல் அஸ்தமனம் வரையில் ஆதித்தியனோடு சண்டை செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால் அவர்கள் காயத்ரிமந்திரத்தினால் சுத்தி செய்யப்பட்ட ஜலத்தால் நாசத்தை அடைவார்கள், ஆகையால் பிரும்மவாதிகள் ஸந்தியாகாலத்தில் காயத்ரீ மந்திரத்ததால் சுத்தமான ஜலத்தை ஆகாசத்தில் உயரப்போடுவார்கள். அந்த ஜலங்கள் வஜ்ஜிராயுதங்களாகி மந்தேஹாருணா, என்னப்பட்ட அந்த ராக்ஷஸர்களை வெகுதூரத்திலுள்ள தீ வொன்றில் தள்ளிவிடுகின்றன. இவர்கள் செய்யும் பிரதக்ஷிணத்தால் அந்தப்பாவம் போய்விடும். ஆகையால் சூரியபகவானை உதயத்திலும் அஸ்தமனத்திலும் தியானம் செய்துகொண்டு இந்த காரியத்தைச் செய்துகொண்டு வருகிறவர்கள் இங்கு சகல மங்களங்களையுமடைந்து சூரியபகவானென்கிற பிரும்மத்தையும் அடைந்து பிரும்மமாக ஆய்விடுவார்கள். என்று,

இதன் ரஹஸ்யார்த்தம் யாதெனில்? தேஜோரூபியான ஜீவாத்மாவே சூரியன். இவனோடு தினந்தோரும் பொழுது விடிந்தமுதல் பொழுதுபோகும் வரையில் யுத்தம்செய்கிற மந்தேஹாதி ராக்ஷஸர்கள் ராகம் துவேஷம் முதலிய கெட்ட குணங்களையுடைய வாக்கு முதலிய இந்திரியங்கள். (பிருஹதாரண்யோபனி ஷத்து 3-3-ல் ஸ்ரீ சங்கரபாஷ்யத்தில், ஸ்வாபாவிகமான காமாதி வாஸனையை யுடையவர்கள் ராக்ஷஸர்கள். சாஸ்திரீயமான தயாதாக்ஷிண்யாதி குணமுடையவர்கள் தேவர்கள், என்று சொல்லப்பட்டது) இத்தகைய ராக்ஷஸ்ர்கள் பரிசுத்தனான ஜீவாத்மாவை தினந்தோரும் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு அவனைக் கெட்ட வழிகளில் நடக்கச்செய்கிறார்கள். இந்த ஜீவாத்மா காயத்ரீ மந்திரத்தால் தனக்கு அந்தராத்மாவான (உள்ளுயிரான)

பரமாத்மாவைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறுன். ஸர்வப்பிரேர கனுகவும் (எல்லாவற்றையும் நடத்துகிறவனுனவனும்) ஸர்வாந் தர்யாமியான ஸ்வாமியே ! தேவரீருடைய திவ்யமான தேஜஸ்ஸை ஸதா தியானம் செய்கிறேன். தேவரீர் என்னை நல்ல கருமங் களில் ஏவவேண்டும், என்று. இதுதான் இந்த மந்திரத்தின் அர்த்தம். இப்படி அந்தராத்மாவை பிரார்த்தித்து ஜலத்தை அவன் திருவடியில் ஸமர்ப்பிக்கிறவன் அவனனுக்கிரஹத்தால் அந்த காமக்ரோதாதி ராக்ஷஸர்கள் நாசமடைந்து தயாதாக்ஷிண் யம் முதலிய நல்ல குணங்கள் தலையெடுத்து இந்தலோகத்தில் எல்லா சுகங்களையு மனுபவித்து இந்த தியானத்தால் பரலோகத் தில் சாசுவதமான சுகங்களையு மனுபவிப்பான். என்று.

ஆதித்திய மண்டலத்தின நடுவிலிருக்கும் பரமாத்மாவே ஜீவனுக்கு மந்தர்யாமி யாகையால் அவனுக்குப்பிரதக்ஷிணமாவது அவனுக்கு அநுகூலமாயிருப்பதைக் காட்டும், அபிநயம் அவனுக்கு அநுகூலமாவது அவன் ஆணையை அனுசரித்து வருவது.

இவ்விதமான ஞானத்துடன் கருமங்களைச் செய்யவேண்டு மென்பது அபித்யாயன், குர்வன், என்னும் பதங்களினுல் சொல்லப் பட்டது.

ஆகையால் எந்தக் காரியத்தையும் தத்துவக்ஞானத்துடன் செய்யவேண்டுமென்று கர்மத்தினுடையவும் ஞானத்தினுடைய வும் பிரியவொண்ணுத சேர்க்கை தெரியப்படுத்தப்பட்டது.

நான்காம் அத்தியாயம்

பக்தி யோகம்

[பகவது பாஸனத்துக்கு மூலகாரணம் சாந்தி]

ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம

(காணப் படுமிவையெல்லாம் பிரும்மமே) என்பது முதலான படிகளில் உபனிஷத்துக்களில் சொல்லப்பட்ட பரமாத்மாவின் ஸர்வாத்மத்வத்தை (எல்லாவற்றிற்கும் உயிராயிருத்தலை)யும் ஜீவாத்மாவின் பரஸ்பரஸாம்யத்தை (ஒரேமாதிரியாய் யிருப்பதை யும் நன்றாயறிந்தால் ஸ்நேஹமென்றும் பிரேமை யென்றும் பாவபந்தமென்றும் பிரணயமென்றும் சொல்லப்பட்ட பகவானுக் குக்கூட அளவிடமுடியாதபகவத் பிரீதிரூபமான(தும்) உபாசனத் துக்கு மூலகாரணமு, மான சாந்தியுண்டாகுமென்று ஆரம்பத் தில் சொல்லப்பட்டது. இத்தகையபிரீதியை பகவான்

ப்ரியோ ஹி ஜ்ஞானினோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய: ।

நான் ஞானியின் அளவிடவொண்ணுத பிரீதிக்குப் பாத்திரனு கிறேன். அதற்கனுகுணமாகவே அவனும் என் பிரீதிக்கு விஷய மாகிறுன், என்றருளிச்செய்தார். இத்தகைய சாந்தியை பூர்வா சாரியர்கள் சொல்லும் கிரமத்தில் இங்குவிவரிக்கிறோம்.

[சாந்தி ஸ்வரூபம், அதன் விரோதிகள், பரிஹாரம்]

சாந்தியென்றுல் ராகம் (ஆசை) துவேஷம்மோஹம், இவைகளற் றிருக்கை, இவைகள் உத்கடமான (மிகைபெற்ற) தெசையை யடைந்தால்காமம் கோபம், லோபம் என்னும் பெயர்களால் முறையே பேசப்படுகின்றன. இந்த குணங்களே தேவர் அசுரர் மனுஷ்யர், என்னும்விபாகத்துக்குக் காரணங்கள். ஆகையால்.

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாஶநமாத்மந: ।
காம: க்ரோதஸ்ததா லோபஸ்தஸ்மாதேதத்த்ரயம் த்யஜேத் ।

8

காமம் குரோதம் அப்படியே லோபம் ஆகிய இவை நரகத்துக்கு மூன்றுவிதமான கோட்டை வாசல்கள். ஆத்மாவை நாசப்படுத்துமவைகள். ஆகையால் இவை மூன்றையும் ஒழிக்கக்கடவன், என்றபடியே இவைகளைப் பூரணமாகத் துலைக்க வேண்டியது முதற்கடமை. இதுவே சாஸ்திரத்தின் முக்கிய உபதேசம். இந்த தோஷங்கள் ஜீவாத்ம பரமாத்மஸ்வபாவ நிர்ணயமில்லாதவர்களுக்கு ஸஹஜமாய் உண்டாகின்றன. இவர்களின் ஸ்வபாவங்களிருக்கும் பிரகாரம்.

> 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌵𑌿𑌨𑌯 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 𑌗𑌵𑌿 𑌹𑌸𑍍𑌤𑌿𑌨𑌿 ।
> 𑌶𑍁𑌨𑌿𑌚𑍈𑌵𑌶𑍍𑌵𑌪𑌾𑌕𑍇𑌚 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ।
> 𑌇𑌹𑍈𑌵𑌤𑍈𑌰𑍍𑌜𑌿𑌤𑌃𑌸𑌰𑍍𑌗𑍋 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌸𑌾𑌮𑍍𑌯𑍇𑌸𑍍𑌥𑌿𑌤𑌂𑌮𑌨𑌃 ।
> 𑌨𑌿𑌰𑍍𑌦𑍋𑌷𑌂𑌹𑌿 𑌸𑌮𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿𑌤𑍇𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃।

வித்யையால் விநயமடைந்தவன், கேவல பிராம்மணன், பசு, யானை, நாய், அதை புசிப்பவன், இப்படி வெவ்வேறுபட்ட பிராணிகளிலுள்ள ஜீவாத்மா ஒரேமாதிரி யானவன், ஞானஸ்வரூபன், என்று பண்டிதர்கள் அறிவார். இப்படி எவர்களுடைய மனது சமதர்சனத்திலிருக்கிறதோ, அவர்களால் இவ்வுலகத்திலேயே பிறவி முதலியவை ஜெயிக்கப்பட்டன. பிரும்மம், என்னும் ஆத்மாவுக்கு இயற்கையில் தோஷமில்லை. அதனால் அவர்கள் அத்தைய பிரும்மத்தில் நிலைத்தவரானார்கள், என்பது முதலிய சுலோகங்களால் விவரிக்கப்பட்டது.

ஜீவாத்மாக்கள் ஞானமொன்றையே உருவாக உடையவர்கள் தேவர் மனிதர் பிராணி ஸ்தாவரம் முதலியபேதங்கள் அவர்களுக்கு உடலாயிருக்கும் பிரகிருதிக்குச் சேர்ந்தவைகள். ஆத்மாக்களைச் சேர்ந்தவை யல்ல. ஆத்மாக்களின் இந்தஸாம்யத்தை (ஒன்றான ஆகாரத்தை) ஞானிகள் கண்டறிவார்கள். இத்தகைய ஸமதர்சிகள் இந்தலோகத்திலிருக்கும் போதே முக்தர்கள் (ஜீவன் முக்தர்கள்) எனப்படுவார்கள்.

இந்த ஸமதர்சன முண்டானால் பரமாத்மாவுக்கும் நமக்குமுள்ள ஞானாகார ஸாம்யத்தை (ஒற்றுமையை)யு மறிந்து அவனுடைய ஸர்வாந்தர்யாமித்வத்தை (எல்லாவற்றிக்கும் உள்ளு

யிராயிருப்பதை) யும் நிச்சயித்துக்கொண்டு நம்மிடத்தில் அபகாரம் முதலிய வற்றை ச்செய்யும் பிறர் விஷயத்தில் துவேஷபாவனையற்றிருக்கும் பரிபக்குவம் நமக்குவந்துவிடும், எப்படியென்றால்? அவர்கள் நம்முடைய குற்றங்களுக்குத் தக்கபடி நம்மைத்திருத்தும் பொருட்டு பகவானால் ஏவப்பட்டு அவ்வபகாராதிகளை நமக்குச் செய்தார்கள், என்றறிவோம். மேலும் அவர்களுக்கு ஏதாவது கஷ்டம் வந்தபொழுது தயையால் அவர்களுக்கு நாம் உபகரிக்கவேண்டுமென்னும் நினைவும் (பாவமும்) உண்டாகும். இதை யுண்டாக்குவதற்காகவே,

ஐதாத்ம்யமிதம் ஸர்வம் தத்ஸத்யம் ஸ ஆத்மா தத்வமஸி ச்வேதகேதோ ।

ஓ சுவேதகேதுவே! இவையெல்லாம் இந்த பிரும்மத்தை ஆத்மாவாக வுடையவைகள். அது ஸத்தியம், அதுவே ஆத்மா, நீயும் அதுவே யாகிறாய், என்பது முதலான வுபதேசங்கள் பிரவிருத்திக்கின்றன. இதுதான் பிரஹலாதன் முதலியவர்களின் அபிசந்தி (மனதின் தீர்மானம்)

ஸர்வ பூதாத்மகே தாத ஜகந்நாதே ஜகந்மயே ।
பரமாத்மநி கோவிந்தே மித்ராமித்ர கதா: குத: ।

(விஷ்ணுபுராணம்) அப்பா! பிரபஞ்சத்துக்கெல்லாம் நாதனும் பிரபஞ்சத்தையே உருவாக வுடையவனும் எல்லா பூதங்களுக்கும் உள்ளுயிராயு மிருக்கும் பரமாத்மாவான கோவிந்தனிடத்தில் சிநேகிதன் விரோதி, என்னும் கதைகளும் உண்டாகவோ? என்று பிரஹ்ளாதன் ஹிரண்யகசிபுவை நோக்கிச் சொன்னான். மனுவும்,

ஸர்வபூதேஷு சாத்மாநம் ஸர்வபூதாநி சாத்மநி ।
ஸமம் பச்யந்நாத்மயாஜீ ஸ்வாராஜ்யமதிகச்சதி ।
யோ மாம் பச்யதி ஸர்வத்ர ஸர்வம் ச மயி பச்யதி ।
ஸர்வபூதஸ்திதம் யோ மாம் பஜத்யேகத்வமாஸ்தித: ।

எல்லா பூதங்களிடத்தும் தன்னையும் தன்னிடத்தில் எல்லா பூதங்களையும்ஸமமாகப் பார்த்துக்கொண்டுஆத்மயாகத்தை, (ஆத்

மாவை அர்ப்பணம் பண்ணுதலை)ச் செய்பவன் ஸ்வாராஜ்யத்தை, தன்ஸ்வரூப நிலையைப் பெறுகிறான். இப்படி எவன் எல்லாபூதங்களிடத்தும் தன்னைக்காண்கின்றானோ, அவன் எல்லாருக்கும் ஸமனாகிறான். பரமபதம், என்னப்பட்ட பிரும்மத்தையடைகிறான், என்றார்.

ஸ்ரீ பாகவதத்தில்,

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌦𑍍 𑌭𑌗𑌵𑌦𑍍𑌭𑌾𑌵 𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 |
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌭𑌗𑌵𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌷 𑌭𑌾𑌗𑌵𑌤𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 |

எல்லா பிராணிகளிடத்தும் தன்னுடைய பகவத் பாவத்தையும் அவைகளை பகவானிடத்தும் தன்னிடத்தும் காண்கின்றவனே உத்தம பாகவதனாவான், என்றருளிச் செய்யப்பட்டது.

இத்தகைய ஸமதர்சனம் பெறுவதற்கு நம்மிடத்தில் தாமம் (இந்திரியங்களை யடக்குதல்) தானம் தயை, என்னும் ஆத்மகுணங்கள் பெருகவேண்டும். இவை முறையே முற்கூறப்பட்ட காமம் கோபம் லோபம் ஆகிய துர்குணங்களைப் போக்குவதற்கு இன்றியமையாதவை. இவைகளை விருத்தி செய்து ஆத்மநாசனங்களான காமக்குரோதாதிகளை கிரமமாகச் சமனம் செய்கிறவர்கள் தான் ஆரியர்கள், என்று சாஸ்திராதிகாரிகள் சிக்ஷித்தார்கள்.

[உபனிஷத்தில் உதாரணம்]

இந்த விஷயத்தை விளக்க பிருஹதாரண்யக உபனிஷத்தில் (7-2-ல்) சொல்லப்பட்ட இந்தக்கதை கவனிக்கத்தக்கது.

𑌤𑍍𑌰𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑍌 𑌪𑌿𑌤𑌰𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯 𑌮𑍂𑌷𑍁𑌃 | 𑌦𑍇𑌵𑌾 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾 𑌅𑌸𑍁𑌰𑌾 𑌇𑌤𑌿 | 𑌉𑌷𑌿𑌤𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌊𑌚𑍁𑌃 | 𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍁 𑌨𑍋 𑌭𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 | 𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌹𑍈𑌤𑌦𑌕𑍍𑌷𑌰 𑌮𑍁𑌵𑌾𑌚 | 𑌦-𑌇𑌤𑌿 | 𑌵𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌷𑍍𑌟𑌾3 𑌇𑌤𑌿 | 𑌵𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌷𑍍𑌮𑍇𑌤𑌿 𑌹𑍋𑌚𑍁𑌃 | 𑌦𑌾𑌮𑍍𑌯𑌤𑌨 𑌆𑌤𑍍𑌥𑍇𑌤𑌿 | 𑌓𑌮𑌿𑌤𑌿𑌹𑍋𑌵𑌾𑌚 𑌵𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌷𑍍𑌟𑍇𑌤𑌿 | 𑌅𑌥𑌹𑍈𑌨𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾 𑌊𑌚𑍁𑌃 | 𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍁𑌨𑍋 𑌭𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 | 𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌹𑍈𑌤𑌦𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌰 𑌮𑍁𑌵𑌾𑌚 | 𑌦𑌇𑌤𑌿 | 𑌵𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌷𑍍𑌟𑌾 (3) 𑌇𑌤𑌿 | 𑌵𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌷𑍍𑌮𑍇𑌤𑌿 𑌹𑍋𑌚𑍁𑌃 | 𑌦𑌤𑍍𑌤|

ஆத்தேதி | ஓமிதி ஹோவாச வ்யஜ்ஞாஸிஷ்டேதி | அத ஹைநமஸுரா ஊசு: | ப்ரவீது நோ பவாநிதி | தேப்யோ ஹைததேவாக்ஷரமுவாச | த இதி | வ்யஜ்ஞாஸிஷ்டா3 இதி | வ்யஜ்ஞாஸிஷ்மேதி ஹோசு: | தயத்வமிதி | ஓமிதி ஹோவாச வ்யஜ்ஞாஸிஷ்டேதி |

ததேததேவைஷா தைவீ வாகநுவததி ஸ்தநயித்நு: | த, த, த, இதி தாம்யத தத்த தயத்வமிதி | ததேதத்த்ரயம் ஶிக்ஷேத் தமம் தாநம் தயாமிதி |

இதன் அர்த்தமாவது, பிரும்மாவின் புத்திரர்களான தேவர்களும் மனுஷர்களும் அசுரர்களும் பிதாவிடத்தில் வெகுகாலம் சிஷ்யர்களாயிருந்து வந்தார்களே, அக்காலத்தில் முதலில் தேவர்கள் பிதாவை நோக்கி 'எங்களுக்கு உபதேசிக்கவேண்டும், என்று கேட்டுக்கொண்டார்கள். பிதாவான பிரும்மாவும் த, என்ற ஒரு எழுத்தைமட்டும் அவர்களுக்கு உபதேசித்துவிட்டு 'தெரிந்து கொண்டீர்களா ? என்று கேட்டார். அவர்களும் 'ஆம் தெரிந்து கொண்டோம். தாம்யத-காமகுணத்துக்குக் பதிலாக தமகுணத்தை ஸம்பாதித்துக் கொள்ளுங்கள் என்று உபதேசித்தீர்கள், என்றார்கள். பிரும்மா அப்படியேதான் நன்று யறிந்தீர்கள். என்று மறுமொழி சொன்னார். பிறகு மனிதர்களுடைய வேண்டுக்கோளுக்கும் த. என்றும் ஒரெழுத்தையே உபதேசித்து அறிந்தீர்களா, வென்று பிரும்மா கேட்டார். தத்த, லோபகுணத்துக்கு எதிரிடையான தானகுணத்தை அப்பியாசம் செய்யுங்கள்,என று உபதேசமாகிறதென்றார்கள்.பிரும்மாவும் அப்படித்தான், என்று சந்தோஷத்துடன் அதை ஆமோதித்தார். அநந்தரம் அஸுரர்கள் பிரார்த்தித்ததுக்கும் முன்போல் த; என்னும் மெழுத்தையே பிரும்மா உபதேசித்தார். அவர்களும் தயத்வம், கோபகுணத்துக்கு பதிலாக தயாகுணத்தை விருத்தி செய்யுங்கள், என்று சொல்ல அதைக்கேட்டு அப்படித்தான், என்று பிதா மொழிந்தார். ஆகையால் தான் ஆகாசத்தில் மேக சப்தமானது த, த, த, என்று கேட்கப்படுகிறது. அதைக் கேட்டால் தம தான தயா குணங்களை அவசியம் அப்பியஸித்து காமம் லோபம் கோபம்

ஆகிய துர்குணங்களை ஜயித்து தன்னியராகுங்கோள், என்று தேவ வாக்குச் சொல்லுகிறது போலிருக்கும். இம்மேக சப்தம் பிரும் மாவின் உபதேசந்தானே, என்னும்படியு மிருக்கிறது என்று.

இதில் முக்கிய தாத்பரிய மென்னவென்றால் மனுஷ்யர் களிலேயே காமத்தை மிகுதியாக உடையவர்கள் தேவர்கள். லோபத்தை அதிகமாக உடையவர்கள் மனுஷ்யர். கோபாதிகர்கள் அஸுரர்கள், என்று விபாகம் செய்யலாம். இவர்கள் தங்கள் தங்களிடமுள்ள தோஷங்களைத் தெரிந்து சங்கித்துக்கொண்டு பிதாவான பிரஜாபதியிடத்தில் உபதேசத்துக்குப் போனார்கள். அவரும் இவர்களுடைய தோஷங்களைக் கவனித்து ஒரோர் அக்ஷ ரத்தை யுபதேசித்தவாறே இவர்களும் தங்கள் தங்களிடமுள்ள கெட்ட குணங்களை யுணர்ந்து அதற்குப் பரிஹாரத்தையு மறிந்து கொண்டார்கள். என்று இந்த நியாயம் உலகத்திலும் பிரஸித்தம்.

இந்தக் கதையால் பிதா மாதா முதலானவர்கள் தங்கள் புத் திரர் முதலியவர்களை அவர்களுடைய தோஷத்தைக் காட்டி சிக்ஷிக்க வேண்டுமென்றும் தந்தாமுடைய பிசருகளை யறிந்தவர் கள் தான் அல்ப உபதேசத்தாலும் நல்லவழிக்கு வருவார்களென் றும் சொல்லிற்றாயிற்று.

இதைச் சுருக்கியே வியாக்கியான ரூபமான பகவத்கீதை யில்,

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசநமாத்மந: ।
காம: க்ரோதஸ்ததா லோபஸ் தஸ்மாதேதத் த்ரயம் த்யஜேத் ।

நரகத்துக்கு மூன்றுவிதமான கோட்டை வாசல்கள். காமம் கோபம் லோபம், என்பவை அவை. ஆத்மாவை நாசப்படுத்து மவைகள். ஆகையால் இவை மூன்றையும் ஒழிக்கக்கடவன், என் றருளிச் செய்யப்பட்டது.

[பக்தி யுண்டாகும் கிரமம்]

இப்படியால் விரோதி குணங்களை ஜயித்து பக்திக்கு மூல காரணமான சாந்தியைப் பெற்றுப் பகவானிடத்தில் இடைவிடாத அளவற்ற பிரீதிரூபமான பக்தியைச் செய்ய வேண்டுமென்று

சொல்லப்பட்டது. இனி அது உண்டாகும் படிகளைப் பராமர்சிப்போம்.

> 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌃 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌶𑍋𑌚𑌤𑌿 𑌨 𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑌤𑌿 |
> 𑌸𑌮𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌪𑌰𑌾𑌂 |
> 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌮𑌾𑌮𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌯𑌾𑌵𑌾𑌨𑍍𑌯𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 |
> 𑌤𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑍋 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌶𑌤𑍇 𑌤𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 |

முன் சொல்லப்பட்ட பிரகாரத்தில் சாந்தியுடனும் தெளிவுடனும் ஆத்மாவை யுள்ளபடி யறிந்து ஆத்மானுபவத்திலேயே சுகித்திருப்பவன் துக்கமடைவது மில்லை. ஆசைப்படுவதுமில்லை. எல்லா பூதங்களிடத்தும் ஸமபாவனையை புடையவனைப் அளவிட முடியாத ஞானமே உருவாயிருக்கும் பகவானுக்கு உறித்தாயிருப்பதேயான தன் ஸ்வபாவத்தைத் தெளிகின்றான். இந்த தியான யோகத்தால் மற்றவை யாவையையும் திருணம்போல் நினைக்கிறான். அத்தகையவன் என்னிடத்தில் எல்லையில்லாத பிரீதிரூபமான பக்தியை அடைகிறான். பக்தியினால் என் ஸ்வரூப ஸ்வபாவாதிகளை உண்மையாக வறிகிறான். அப்படியிருந்து என்னிடமே பிரவேசித்து விடுகிறான்· என்று கீதையில் இந்தக்கிரமம் சொல்லப்பட்டது. பக்தியின் பலன் தாத்விகமான (உண்மையான) ஞானம் தர்சனம் பிரவேசம், என்று படிப்படியாகப் பேசப்பட்டது.

ஸமக்ரமான (பூர்ணமான) இந்த பக்தியோகம் கீதை ஒன்பதாவது அத்தியாயத்தில் உபதேசிக்கப்பட்டது. இதில் முதலிலேயே சாமர்த்திய மில்லாவிடில் அப்பியாச யோகம் செய்யவேண்டும். அதிலும் சக்தியில்லாவிட்டால் பக்தியோகத்துக்கு அங்கமான கிரியாயோகம் (பக்திப்பெருக்கும் காரியங்கள்) செய்யவேண்டும். அதுவும் முடியாவிட்டால் மூன்றாவது அத்தியாயத்தில் சொல்லப்பட்ட கர்மயோகத்தைச் செய்யவேண்டும், என்று இந்த வரிசை பனிரண்டாவது அத்தியாயத்தில் விரிக்கப்பட்டது. அங்கேயே அக்ஷரயோகமென்று பக்தியோகத்துக்கு ஸாதனமான மற்றொரு யோகம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதைச் செய்வது மிகவும் கஷ்டம். பக்தியோகத்துக்கு அதிசயத்தைக் காட்டுவதற்கு இதுவும் விவரிக்கப்பட்டது.

இந்தப்பிரகாரம் பகவத்கீதையில் கர்மயோகம், ஞானயோகம் ஞானயோகாத்மகமான கர்மயோகம், தியானயோகம், கிரியாயோகம், அப்பியாஸயோகம், அக்ஷரயோகம், பக்தியோகம், என்று எட்டுவிதமான யோகங்கள் சொல்லப்பட்டன. இவை யெல்லாம் பக்தி யோகத்திலேயே முடிவுபெறக் கடவன.

[பக்தி அதிகாரி பேதங்கள்]

இந்த பக்தியோகம் அதைச் செய்யும் அதிகாரிகளின் பேதத்தை யநுசரித்து எல்லா பலன்களையும் கொடுக்கக்கூடியதென்று,

சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ்ஸுக்ருதிநோऽர்ஜுந |
ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்தார்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப |

ஓ பரதரிஷபனே! ஸுகிருதம் பண்ணின ஜனங்கள் என்னை பக்தியுடன் நான்கு வகைகளாக அடைகிறார்கள். அவர்களாவார்? துக்கத்திலிருந்து மீள ஆசைப்படுகிறவன், ஆத்மஞானத்தை வேண்டுகிறவன், ஐசுவரியத்தை யபேக்ஷிப்பவன், என்னையே ஸர்வமுமென்று அறிந்து என்னையே பெற அபேக்ஷிப்பவன், என்று இந்த சுலோகத்தில் பகவான் தெரிவித்தான்.

அடுத்தாப்போல் துஷ்கிருத்துக்களும் (தீச்செயல் செய்பவர்களும்) நான்கு வகையினர், என்பதும்,

ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: |
மாயயாऽபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பாவமாச்ரிதா: |

கெட்டவர்களான மூடர் (விபரீத ஞானமுடையவர்) நராதமர் (ஞானம்பெற்றும் பகவானிடத்தில் பிரீதி வைக்காதவர்) மாயாவிகள் (பகவான் மஹிமையை குயுக்திகளால் அழிக்கப்பார்ப்பவர்) அஸுர பாவத்தை யடைந்தவர் (பகவான் மஹிமையை எவ்வளவுக்கெவ்வளவு அறிவார்களோ அவ்வளவுக் கவ்வளவு அவனை துவேஷிப்பவர்) ஆகிய இவர்கள் என்னை அடைவதில்லை, என்று சொல்லப்பட்டது.

இவ்வளவால் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய உத்தம ஸாராம்சம் என்னவென்றால்?

ஶரீராரோக்யமைஶ்வர்யம் போகாம்ஶ்சைவாநுஷங்கிகாந் |
ததாதி த்யாயிநாம் நித்யம் அபவர்கப்ரதோ ஹரி: | **என்பது.**

இதனர்த்தம். தன்னை பக்தியுடன் தியானம் பண்ணுகிறவர்களுக்குப் பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தையே கொடுக்க விருக்கிற பகவான் ஹரியானவர் தாமே சரீர ஆரோக்கியம் ஐசுவரியம் இவற்றை யொட்டிய மற்ற போகங்கள் இவைகளை யெல்லாம் நிச்சயமாகத் தருவான், என்றதால் அவனிடத்தில் அற்ப பிரயோஜனங்களைக் கோலாமல் அவன் விஷயமான ஞானம் பக்தி இவைகளை மட்டும் விவேகியானவன் கேட்கக் கடவன், என்றபடி.

[பக்திஸ்வரூபம்]

ஸ்ரீ பாஷ்யகாரர் வேதார்த்த ஸங்கிரஹத்தில் கடைசியில் பக்தியென்பது மோக்ஷத்துக்கு ஸாதனம் (உபாயம்) என்று நிரூபித்தருளினர். அதற்கே பரபக்தியென்றும் பெயர். அந்த பக்தியாவது ?

சாஸ்திரத்தால் தத்துவ ஞானத்தை சம்பாதித்துக்கொண்டு வர்ணாச்ரம தர்மங்களை அங்கங்களாக (உருப்புகளாக) வைத்துக் கொண்டு செய்யப்படும் பகவத்தியான ரூபமாக விருக்கும். இந்த தியானம் பகவானிடத்தில் நிரதிசய (அளவற்ற) பிரீதிரூபமாய் அவனை நேரில் கண்ட மாதிரியாக (பிரத்தியக்ஷஸமானாகாரமாக) ஆனந்த வெள்ளம் பெருகியிருக்கும், என்று ஸித்தாந்தப் படுத்தியிருக்கிறார்.

ஸ்வாத்யாயஶ்ச, ஶாஸ்த்ராதிகத தத்த்வஜ்ஞாந பூ-
ர்வகஸ்வ ஸ்வவர்ணாஶ்ரம விஹித பக்தி நிரதிஶய ஆநந்தமயாதி-
ஶயப்ரிய விஶதப்ரத்யக்ஷதாபந்நாநுத்யாந ரூப பர
பக்திரேவ |

என்று இதன் வியாக்கியானத்தின் ஸாராம்சம் வருமாறு.

ஸ்நேஹபூர்வமநுத்யாநம் பக்திரித்யபிதீயதே |
பக்திஸ்ஸேவோபாஸ்திரிதி நைகவர்த்தகவசோऽபி ச |
ஸஜஸத்ர்யஷயாதநேऽபி ஸோபாயாம் பரிகீர்த்திதா: |

தஸ்மாச் ச ஸேவாரூபோऽயம் ப்ராகாஶ் ஶக்திஶப்தேந ஶப்த்யதே |
இதி தேந யாமுநேந விஶிஷ்டம் ஸம்ப்ராதாயாத்தம் |
வ்யாகாரிகாஜீவிகாயோ: ஶ்ரீஸம்ப்ரதாயேந ஸம்மிதி: |

பிரீதிபூர்வமாக இடைவிடாமல் தியானம் செய்வதே பக்தி யென்னப்பட்டது. அதையே உபாஸ்தி (உபாஸநம்) என்று நிகண்டுகாரர்களும் சொன்னர்கள். பஜ், என்கிற தாதுவுக்கு (வினைப்பகுதிக்கு) ஸேவைசெய்கிறதென்று அர்த்தம். ஆகையால் மிகுந்த ஸேவையைச் செய்வதே பக்தியென்றதாயிற்று. இதுவே அறிஞர்களின் அபிப்பிராயம். ஸ்ரீ போதாயனர் இதை மிகத் தெளிவாய் விளக்கி யிருக்கிறுர். இவ்வர்த்தங்கள் ஸ்ரீ ஸுதர்சனசாரியரால் சுருதப்பிரசாசிகை, சுருத தீபம், என்னும் இரண்டு கிரந்தங்களிலும் விளக்கப்பட்டது.

எனவே, பக்தியேசேவை (கைங்கரியம்) அதே பிரீதிரூபமானது. பிரீதிரூபமான ஸேவையே உபாஸனை என்றதாயிற்று. இதனுல் பகவானுடைய அநுக்கிரஹம் கிடைத்து அதன் மூலமாய் மோக்ஷம் ஸித்திக்கவேண்டும். எனவே வெறும் தத்துவ ஞானமாத்திரத்தினுல் மோக்ஷம் ஸித்திக்காதென்று விளங்கிவிட்டது. கேவல தத்துவ ஞானத்தால் மோக்ஷங் கிடைக்குமென்பது அப (தப்பான) வாதம். இது நிர்தைவத (பகவா னில்லையென்றும்) வாத மென்றும் சொல்லப்படும். தேவதாநுக்கிரஹம் வெறும் ஞானத்துக்குக் கிடைக்காதென்பதும் எல்லாரும் அறிந்த விஷயமே.

[பக்தியின் மேல் பருவங்கள்]

மோக்ஷத்துக்கு உபாயமான பக்தியானது பரபக்தி, பரஞானம், பரம பக்தி, என்று மூன்று படிகளையுடைத்தா யிருக்கிறது. இதில் முதல் பருவமாகிய பரபக்தி பகவானிடத்தில் பிரீதியுடன் கூடிய தியானமாகிய ஸாதனம், என்னப்பட்டது. இத்தியானம் வளர வளர பகவானையே நேரில் காண்கிறமாதிரியான தற்காலிகமான ஒரு அநுபவம் உண்டாகும். இந்த தசைக்கு பரக்ஞானம் என்றுபெயர். இந்த அநுபவம் பெருகப் பெருக பகவானைக் கண்டபடியே இடை விடாமல் விஷய போகங்களைப்போல் அநு

பவிக்க வேண்டுமென்னும் ஆசை யுண்டாகி மேலும் மேலும் அந்த தியானம் விருத்தியடைந்து அத்தகைய நிரந்தர அனுபவமும் கிடைத்து விடும். இந்தப்பருவத்துக்கு பரமபக்தி, என்றுபெயர். இது தான் உபாஸனத்தின் பலம். பக்தியின் இந்த மூன்றுபடிகளுக்கும் முறையே ஞானம், தர்சனம், பிராப்தி, என்றும் பெயர்களுண்டு.

பரபக்தி: பரஜ்ஞானம் பரமாபக்திரிதி த்ரயீ |
த்ரைவிஸ்யம் ஸாதனம் ஸாத்யா ஸாக்ஷாத்காரஸ்ய தீயதே |
ஜ்ஞானம் ஸமாவ்யவஹித ப்ரத்யக்ஷாவஸ்தைதி நிர்ணய: |
அனந்தத்ருஷ்டி: பரமா பக்திவிஷய போதக: |
ததேதத் த்ரிதயம் ஜ்ஞான விசேஷ ப்ராப்தி ஸம்ஜ்ஞிதம் |

இங்கு பகவதனுபவத்துக்கு விஷயானுபவத்தை உதாஹரணமாக்கியதின் அர்த்தம் பின்னால் விஸ்தரிக்கப்படும். சாஸ்திரங்களில் பல விடங்களில் இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது.

யா ப்ரீதிரவிவேகானாம் விஷயேஷ்வனபாயினீ |

அவிவேகிகளுக்கு விஷயபோகங்களில் பிரீதிஎப்படி இடைவிடாமலிருக்குமோ (அப்படியே தேவரீரிடத்தில் எனக்கு பக்தியிருக்கட்டும்;

யயாத ஸம்பரிஷ்வக்தோ ந பாஹ்யம் வேத நாந்தரம் |

பகவானால் அணைந்து கொள்ளப்பட்டவனாய் வெளிவிஷயங்களையோ உள் விஷயங்களையோ ஒன்றையு மறியான்.

யத்ர நான்யத் பச்யதி |

எங்கு வேறொன்றையும் பார்க்மாட்டானோ, என்றிவை முதலியன. இவ்வுதாரணங்கள் லோகானுபவத்துக்கு ஏற்றவை.

யத்ர நான்யத் பச்யதீதி லோக ஸித்த உதாஹ்ருதம் |
நஹி ந்யாய விதாவிஷ்ட உதாஹரண வீக்ஷணம் |

[அர்ச்சனப் பிரணமாதிகள்]

வேதார்த்த ஸங்கிரகத்தின் ஆரம்பத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர்.

அஶேஷ ஜகத்திதாநுஶாஸந ஶ்ருதி நிகர ஶிரஸி ஸமதிகதோऽயமர்த:, ஜீவ பராத்மயாதாத்ம்யஜ்ஞாந பூர்வக வர்ணாஶ்ரம தர்மேதிகர்தவ்யதாக பரபுருஷ சரணயுகள த்யாநார்சந ப்ரணாமாதிரத்யர்தப்ரிய:,

என்றருளிச்செய்தார். இதனர்த்தம் உலகத்துக்கெல்லாம் நன்மையை உபதேசிக்கும் வேதத்திரள்களின் தலையில் (வேதாந்தங்களில்) முக்கியமாக அறியப்படும் பொருள் என்னவென்றால்? ஜீவன் பரமாத்மா இவர்களைப் பற்றிய உண்மைகளை யறிந்து வர்ணாச்ரம தர்மங்களை ஸரியாக அனுஷ்டித்து அவைகளை உறுப்புக்களாகக்கொண்டு பரமபுருஷனுடைய திருவடிகளில்தியானம் அர்ச்சனை நமஸ்காரம் (பிரணாமங்கள்) முதலிய இவைகளைக்கறை கடந்த பிரீதியுடன் செய்யவேண்டும் என்பதே. என்று இவ்விடத்தில் முதலிய (ஆதி) என்றதினால் கீர்த்தனம் யாத்திரை முதலியவைகளும் சொல்லப் படுகின்றன. உபாஸநம். என்பதில் அர்ச்சனம் பிரணாமங்கள் முதலியன உள்ளடங்கியவைகள். பெரிய யாகத்துக்கு உறுப்பாக பிரயாஜம் முதலிய சிறுயாகங்களிருப்பதுபோல் இந்த உபாஸநமாகிய உடலுக்கு வர்ணாச்சிரம தர்மங்கள் உறுப்புக்க (அங்கங்க) ளாக விருக்கின்றன.

இதில் தியானம் மனதினால் செய்யத்தகுந்தது. நாமஸங்கீர்த்தனம் வாக்கின் காரியம். அர்ச்சனை முதலியது காய (சரீர) த்தினால் ஆவது. இப்படி மூன்றுவகை உபாஸமானது

மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு |

என்னிடத்தில் பக்தியுடையவனாய் என்னை தியானம் செய்து என் பூஜையைச் செய்து என்னை நமஸ்கரி, என்றும்.

ஸததம் கீர்தயந்தோ மாம் யதந்தஶ்ச த்ருடவ்ரதா: |

எப்போதும் என்னைக் கீர்த்தனம் செய்கிறவர்களாயும் என் ஆராதனத்தைச் செய்கிறவர்களாயும் என்னிடத்தில் திருடமான விருதத்தை யுடையவர்களாயும், என்றும்

ஶ்ரவணம் கீர்தநம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவநம் |
அர்சநம் வந்தநம் தாஸ்யம் ஸக்யமாத்மநிவேதநம் |

இதி பும்ஸார்பிதா விஷ்ணௌ பக்திஶ்சேந்நவலக்ஷணா |
இத்யாதிகம் ப்ரஸித்தம் ஹி ப்ரமாணம் ஸர்வஸம்மதம் |

எங்கும் நிறைந்த விஷ்ணுவாகிய பகவானுடைய மஹாத்மியத்தைக் கேட்டல், அதைக் கீர்த்தனம் செய்தல், அவனுடைய நாமஸ்மரணம் பண்ணுதல், திருவடிகளில் கைங்கரியம் செய்தல் அர்ச்சனை, நமஸ்காரம், தாஸனுயிருத்தல், தோழன்மாதிரிபாவித்தல், தன்னுத்மாவை அர்ப்பணம் செய்துவிடுதல், இப்படி ஒன்பது விதமான பக்தியை பகவானிடத்தில் மனிதன் செய்யக்கடவன், என்றும். இவ்விஷயத்தில் சொல்லப்படும் பல பிரமாணங்கள் எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய அர்ச்சனை நமஸ்காரம் முதலியவை ஒருவன் யோகத்திலிழுந்து தாரணையென்னும் நிலைமையை யடையும் வரையில் யோகத்துக்கு உறுப்புகளாக (அங்கங்களாக) விருக்குமென்றும் தாரணையில் ஸித்திபெற்ற பிறகு வியுக்தமான காலத்தில் செய்யப்படும் அர்சனை முதலியவை அங்கியோடு (யோகத்தின் உடலோடு, கலந்து ஒன்ருகிவிடுமென்றும் தாத்பர்யதீபிகையில் விளக்கப்பட் டிருக்கிறது. இவ்விதமான யோகத்துக்குக் கிரியாயோகம், என்றும் பெயருண்டு. இதுவே சுதந்திரமான மோக்ஷோபாயமென்று சிலர் நிரூபித்திருக்கிருர்கள். ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தத்தில் இது பகவத்கீதை முதலிய பிரமாணங்களுக் கிணங்க பக்திஸ்வரூபத்தில் சேர்க்கப்பட்டது.

அப்யாஸேऽப்யஸமர்த்தோऽஸி மத்கர்மபரமோ பவ |
மதர்த்தமபி கர்மாணி குர்வந் ஸித்திமவாப்ஸ்யஸி |

அப்பியாஸ யோகத்திலும் நீ சக்தியில்லாதவனுனல் என் விஷயமான கருமங்களிலீடுபட்டுவிடு. என் பொருட்டுக் காரியங்களைச் செய்தால் அவசியம் ஸித்தியை அடைந்து விடுவாய், என்று கீதையில் சொல்லப்பட்டது.

பகவானைக் குறித்துச் சொல்லக்கூடிய இத்தகைய கர்மங்களாவன ? ஆலயங்களை நிர்மானம் செய்தல், பூந்தோட்டம் (உத்யானம்) முதலியவற்றை உண்டாக்குதல், கோவில்களில் தீபம்

போடுதல், கோவில்களைக் கழுவி சுத்தம் செய்தல், கோலம் முத லியவற்றால் அலங்கரித்தல், புஷ்பங்களைச் சேகரித்துக் கொடுத்தல் பூஜையில் பிரவர்த்தித்தல், பிரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்தல் முதலியன. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சக்திக்குத் தக்க படி இவற்றில் எதிலாவது ஸம்பந்தபட்டு கிருதார்த்தராவதற் காக இவை சாஸ்திரங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஆக மப் பிராமாண்யம், என்னும் கிரந்தத்தில் சண்டாளர்களுக்கும் தேவாலய பாலன (ரக்ஷித்தல்) கைங்கர்யம் உண்டென்று ஸ்ரீயா முனாசாரியர் அருளிச் செய்தார்.

[பக்தி ஸுகரூபம்]

பக்தி ஆனந்த ரூபமாயிருக்கு மென்று நிரூபிப்பதற்காக ஸுகம் எப்படி இருக்குமென்பதை முற்படஅறியவேண்டும். சார் வாக மீமாம்ஸர்கள் ஸுகமில்லாமலிருப்பதே துக்க மென்றார்கள். பௌத்தர் ஸாங்கியர் முதலியவர்கள் துக்க மில்லாமலிருப்பதே ஸுக மென்றார்கள். தார்க்கிகர்கள் ஸுகம் துக்கம், இரண்டு மில்லாத உதாஸீந நிலைமை யென்று மூன்றுவித அநுபவங்கள் உண்டென்று ஸமர்த்தித்தார்கள். ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தத்தின் படியில் இம்மூன்றும் ஸம்ஸார தெசயிலுண்டு ஆனால் வாஸ்த விகமான ஸ்திதியிலும் முக்த தெசையிலும் எல்லாம் ஸுகமய மாக விருக்குமென்று நிர்ணயிக்கப்பட்டது. இதுதான் உண்மை. அநுபவிக்கத்தக்க அந்தந்த வஸ்துக்களைப் பற்றிய (விஷய) உணர் சியே (ஞானமே)ஸுகத்துக்காதிகளாகக் கடவன. இத்தகைய ஞானத்தை (உணர்ச்சியை) க்காட்டிலும் ஸுகம் துக்கம் இரண்டு மில்லாமையாகிய இவை வேறென்ன வொன்றுது. முதலில் சொல்லியபடி ஒப்புக்கொண்டால்லௌகிகவ்யவஹாரமும்சுருதிஸ் மிருதி முதலிய ஸகல பிரமாணங்களும் ஸமரஸங்களாகும்.

இப்படியானல், அநுகூலமாக உணரத்தக்கவை யெல்லாம் சுகங்கள், பிரதி கூல உணர்ச்சியைத் தருபவை துக்கங்கள், மற்ற வை இவ்விரண்டு மில்லாதவை, என்ற தாயிற்று. உபாஸநம் அல் லது பக்தியின் ரூபமும் அநுகூலமாக உணரத்தக்கதாவதால் அது ஸுகரூபமாயிருக்கு மென்று சொல்வதில் ஒரு பாதகமுமில்லை.

எனவே தான் புருஷார்த்தங்கள் நான்கு வகைப்பட்டன, என்று பிரித்துச் சொல்வது உசிதமாகிறது. இந்த நியாயத்தைக் கொண்டே ஸூத்திரகாரரும் பகவான் ஜகத்ஸ்ருஷ்டி முதலிய காரியங்களைச் செய்வதை ஸ்வயம்பிரயோஜனங்களான லீலைகளென்று சமர்த்தித்து 'பகவான் வேலை கெட்டுப்போய் இவ்வித வியாபாரங்களைச் செய்கின்றானே, என்னப்படும் பிரயோஜன ஆக்ஷேபத்தை நிரஸித் தருளினார்.

நமது ஸித்தாந்தத்தின்படி பகவதுபாஸநம் மாத்திரம் ஸுகரூபமென்பதல்ல. மேல் இதற்குப் பலமாகக் கிடைக்கும் பிரும்மஸ்வரூபமும் அந்த பிரும்மத்தினுடையது என்பதினால் பிரபஞ்சம் முழுவதும் ஸுக ரூபமாகவே யிருக்கும். முக்தி தெசையில் எல்லாம் அநுகூலமாகுமானதால் அப்போது துக்க ஸம்பந்தமே கிடையாது. எந்த அனுபவம் மனுஷ்யனுக்கு அனுகூலமோ அது தான் சுகம்.

ஆனால் பிரபஞ்சமே துக்கமயம் ஸுகமாய்க் காணப்படுவதெல்லாம் அற்பம் ஸ்திரமற்றது. துக்கத்தை மூலமாக உடையது, அனுபவ தெசையிலும் துக்கத்தோடு கலந்தது. துக்கத்திலேயே முடிவு பெறுவது. தேஹமே ஆத்மா வென்னும் மயக்கத்தோடு கூடினது. ஸ்வபாவத்திலுள்ள பகவதனுபவத்துக்கு விரோதமானது, என்ற ஏழுவித தோஷங்களுக் குட்பட்டது, என்றிப்படிகளில் சொல்லப் பட்டனவே? மேலும்.

நஹி வஸ்து ஸ்வபாவேந வைராக்யாய ச ப்ரீயதே |
ததா ச ஸர்வபூதாநாம் ஸர்வேஷாம் ஸ்வர்க்க வ்யவஸ்தயா |
ஸுகாயைவ யத் ஸ்யாச்ச து:காய நைவம் ச வ்யவஸ்தயா |
மந: ப்ரீதிகர: ஸ்வர்கோ நரகஸ் தத்விபர்யய: |
வஸ்த்வேகமேவ து:காய ஸுகாயேர்ஷ்யாகமாய ச |
கோபாய ச யதஸ் தஸ்மாத் வஸ்து வஸ்த்வாத்மகம் குத: |
ததேவ ப்ரீதயே பூத்வா புநர் து:காய ஜாயதே |
ததேவ கோபாய தத: ப்ரஸாதாய ச ஜாயதே |
தஸ்மாத் து:காத்மகம் நாஸ்தி ந ச கிஞ்சித் ஸுகாத்மகம் |

𑌹𑌿𑌂𑌸𑍍𑌰𑌾 𑌹𑌿𑌂𑌸𑍍𑌰𑍇𑌮𑍃𑌦𑍁 𑌕𑍍𑌰𑍂𑌰𑍇 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌾 𑌵𑍃𑌤𑌾𑌨𑍃𑌤𑍇 |
𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰 𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑌸𑍍𑌯𑌰𑍋𑌚𑌤𑍇 |
𑌪𑌶𑍁 𑌹𑌿𑌂𑌸𑌾𑌦𑌿 𑌸𑌮𑍍𑌬𑌦𑍍𑌧𑍇 𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑍍𑌯𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 |
𑌤𑍇𑌷𑍍𑌵𑍇𑌵 𑌹𑌿𑌯𑌜𑍍𑌞𑍇𑌷𑍁 𑌶𑌾𑌕𑍍𑌯𑌾𑌃 𑌕𑍍𑌰𑍁𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌵𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃 |
𑌜𑌲𑍇𑌶𑍀𑌤𑌸𑍍𑌯 𑌤𑍋𑌯𑍇𑌨𑌤𑍃𑌷𑍋 𑌹𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 |
𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌸𑍍𑌵 𑌕𑌤𑍍𑌤𑍃𑌕𑌂 𑌤𑌦𑍇𑌵𑍋𑌷𑍍𑌣𑌸𑍍𑌯 𑌚𑍇𑌤𑌸𑌃 |
𑌸𑍁𑌹𑍃𑌜𑍍𑌜𑍀𑌵𑌿𑌨𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌦𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌦𑍍𑌵𑍇𑌷𑌿𑌣𑌾𑌂 |
𑌹𑍍𑌯𑌾𑌧𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑌾𑌂 𑌚 𑌸𑌾𑌧𑌰𑌾𑌽𑌪𑌿 𑌸𑍍𑌵𑌾𑌦𑌯𑌤𑍇 |

எந்த வஸ்துவும் தன் சுபாவ குணத்தினுல் மட்டும் புருஷார்த்தம் (வேண்டப்படும் பொருள்) ஆவதில்லையே? அப்படியானுல் எல்லாம் எப்பொழுதும் எல்லாருக்கும் ஒரே மாதிரியாக ஸுகத்துக்காகவோ துக்கத்துக்காகவோ தீர்ந்ததாகக் காணப்பட வேண்டி வரும். அப்படிக் கண்டிலோம். மனதுக்கு ஸந்தோஷத்தைக் கொடுப்பதே ஸ்வர்க்கமென்றும் அதல்லாதது நரகமென்றும்கொள்ளப்படுகிறது. ஒரு வஸ்துவே ஒருவருடைய ஸுகத்துக்கும், ஒருவருடை துக்கத்துக்கும் மற்ருெருவன் பொருமைக்கும் வேறு சிலர்க்கு கோபத்துக்கும் காரணமாகிறது. எனவே, வஸ்துவே இத் தகைய ஸ்வபாவ குணங்களையுடையவை, என்பது எப்படி? ஒன்றே முதலில் பிரீதியை உண்டாக்கிப் பின்னுல் துக்கத்தையும் விளைவித்து விடுகிறது. ஆகையால் ஒன்றும்தானே துக்கமுமல்ல சுகமுமல்ல. அப்படியே ஹிம்ஸை ஹிம்ஸையில்லாதது, மிருதுவானது குரூரமானது, தர்மம் அதர்மம், ஸத்தியம், பொய், முதலியவைகளின் வ்யவஸ்தைகளும் உண்டாகின்றன. எவனெவனுக்கு எதெது ருசியாகத் தோன்றுகிறதோ அததையே அவனவன் மனதில் பாவித்து அடைய முயற்சி செய்கிறுன். பிராணி ஹிம்சை முதலியவற்ருேடு கூடின யக்ஞங்களில் பிராம்மணர் சந்தோஷமடைகின்றூர்கள். அவற்றைக் குறித்தே சாக்கியர்கள் (பௌத்தர்கள்) மனம்நொந்து கோபமடைகின்றூர்கள். ஜலத்தால் சீதம் பண்ணப்பட்ட நெருப்

யும் பசி தணியும் பொருட்டு உட்கொள்ளப்பட்ட உணவும் ஸுக மெனப்படுகிறது. இதற்கு விபரீதமானவை துக்கமென்று மனித ரால் உணரப்படுகிறது. மிகவும் திமிர்பிடித்த அங்கங்களையுடைய வர்களும் சரீர வியாபாரங்களினலேயே ஸுகத்தை நாடுகிறவர் களும் பிராந்திக் ஞானத்தால் மூடப்பட்ட (மயக்கப்பட்ட) இந்தி ரியங்களை யுடையவர்களுமான மனிதர்களுக்கு பிரஹாரமும் (அடி யும்) கூட ஸுகமாகத் தோற்றுகின்றது.

என்றிப்படி லோகானுபவத்தாலும் இதுதான் ஸுகம் இது தான் துக்கம், என்று நிர்ணயிக்க வழியில்லையே ? எனக் கூடும். இதற்கு சமாதானம் உண்டு. எல்லா வஸ்துக்களிலும் இரண்டு விதமான ஸ்வபாவங்களுண்டு. ஜீவர்களுடைய கருமங்களுக் கிடாகவும் காலதேசங்களின், வித்திசாஸங்களினுலும் வஸ்துக் களின் ஸ்வபாவ விசேஷங்களினுலும் ஸுக துக்கங்களின் தாரதம்யங்கள் பகவத்ஸங்கல்பத்தாலுண்டாகின்றன. எல்லா வஸ்துக்களும் எப்பொழுதும் பகவானுடையவைகள், என்னும் காரணத்தினல் அவனுக்கு அவை எல்லாமே அநுகூலங்கள் ஆனது பற்றி இந்த ஸ்வபாவத்தைத்தெரிந்த முக்தனுக்கும் எல்லாம் அநு கூலமாகவே தோன்றும். லோகானுபவத்திலும் ஒருவனுக்கு மற்றொருவன் எல்லை கடந்த பிரீதிக்கு விஷயமானல் இவனுடைய வஸ்துக்களெல்லாம் அவனுக்கும் மிகவும் போக்கியமா யிருப்ப தைக் காண்கின்றோம்.

இக்காரணத்தினல் பிதா புத்திரன் பதி பத்னீ, முதலிய சம் பந்தத்தால் அவர்களுக்குள் பரஸ்பரம் கைங்கரியம் ஸுகரூபமா யிருப்பதுபோல் அதே நியாயத்தால் பகவத் கைங்கரியமும் அள வற்ற பிரீதிரூபமாகக் குறைவில்லை. ஸேவையுடன் கூடிய மோக்ஷம் ஸுகரூபமல்லவென்று சிலர் சொல்லுவது லோக நியாயத்துக் கும் விரோதமான வாதமாகும்.

[பகவத்ஸேவை ஸுகரூபமானது]

எல்லா பிராணிகளுக்கும் ஸ்வாதந்திரியம் மிகவும் இஷ்டமா யிருக்கும். பாரதந்திரியமென்பதே துக்கம், என்றல் மோக்ஷத் தில் எப்போதும் பகவானுக்குப் பரதந்திரனயிருப்பது பரமதுக்க மன்றே ?

10

𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑌰𑌵𑌶𑌂 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌶𑌂 𑌸𑍁𑌖𑌂 |
𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌮𑌾𑌸𑍇𑌨 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌯𑍋𑌃 |

பரவசமா யிருப்பதெல்லாம் துக்கம். தன்வசமாயிருப்ப தெல்லாம் ஸுகம். இதுதான் ஸுகதுக்கங்களின் சுருக்கமான லக்ஷணம், என்றறியத் தக்கது, என்ருர் மனு. (4—160) என்ருல் ?

இது தேஹம் ஆத்மா இவைகளின் ஸ்வரூபங்களை யறியாதவர்கள் சொல்லும் ஆபேக்ஷம். இவர்களுக்கு, போகத்தின் பொருட்டு மனுஷ்யன் தேவன் பசு முதலிய ஜாதி குணங்களுக்கு ஆதாரமாக உண்டாகும் தேஹமே ஸ்வதந்திரமாகக்காரியங்களைச்செய்வதாகத் தோன்றும். அந்ததேகமே ஆத்மா. வேறு ஆத்மாவென்று கிடையாது, என்று ஸம்ஸாரிகளுக்கு தேஹத்தில் அபிமான முண்டாகும். அதற்குத் தக்கபடியே ஸுக துக்கங்களுடைய வியவஸ்தையும் (பிரிவும்) ஏற்படுகிறது. சிங்கம் புலி பன்றி, மனுஷ்யன் யக்ஷர் ரக்ஷஸ்ஸு, பிசாசு தேவர் தானவர் ஸ்திரீ புருஷன், இப்படிகளில் சரீரங்களில் வித்தியாஸங்கள் இருப்பதற்குத் தக்கபடி சுக துக்கங்களும் பரஸ்பரவிருத்தங்களாய் பல பிரகாரங்களாக வியவஸ்தை (பிரிவினை) யுடையதாகக் காணப்படும். எனவே, தேஹமே ஆத்மாவென்று பிரமிக்கும் அவர்களுக்கு சுகம் துக்கம், என்பவை வெவ்வேறு வகைகளாகவே தோன்றும்.

சாஸ்திரத்தினுலும் அனுபவத்தினுலும் ஆத்மா தேஹத்தைவிட வேறுபட்டவன், என்று அறியப்படுகிருன். அவன் ஞானத்தையே உருவாக வுடையவன். பகவானுக்கே சேஷபூதன் (உரித்தான உடைமையாக விருப்பவன்) இத்தகைய ஆத்மாவை தேஹமென்று பிரமிப்பதுபோல் ஆத்மா ஸ்வதந்திரன், என்று நினைப்பதும், பிராந்தியே யொழிய வாஸ்தவமன்று. ஆத்மஸ்வரூபத்தின் உண்மையை யறிந்தவர்களுக்கு பகவானுடைய ஸேவை (கைங்கரியம்) சுகரூபமாகவே யிருக்கும். இது மேலும் விவரிக்கப்படும்.

ஆத்மா பகவானுக்குப் பாதந்திரனுனும் இராஜ குமாரனுக்கு ராஜாவின் ஐசுவரியம் எப்படி நிரதிசயப் (அளவுகடந்த) பிரியமாகுமோ, அப்படியே பகவானுடைய சகல ஐசுவரியங்களும்

முக்த ஜீவனுக்கு நிரதிசயப் பிரியமாகவே இருக்கும். பகவான் லீலா ரஸத்தையும் நித்தியானந்தத்தையும் அனுபவிப்பது போல் முக்தாத்மாவும் பகவானுக்குச் சமானமான ஆனந்தத்தை அநுபவிக்கிறான். என்று ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்ரீராமானுஜர் பல விடங்களில் நிரூபித்திருக்கிறார். ஸ்ரீபாஷ்யம் (4—4—1)

யதா² ஸ்வப்நே ஈஶ்வரஸ்ருஷ்டை: ரதா²த்³யை: கரணை: ஜீவோ ஹர்ஷதே | ததா² முக்தோ(அ)பி லீலா ப்ரவ்ருத்தேநேஶ்வரேண ஸ்ருஷ்டை: பித்ருலோகாதி³பி⁴: லீலாரஸம் ஹர்ஷதே | பர: பரமபுருஷோ(அ)பி மநுஷ்யபா⁴வே லீலாரஸம் யதா² ஹர்ஷதே ததா² முக்தாநாமபி ஸ்வலீலாயை பித்ருலோகாதி³கம் ஸ்வயமேவ ஸ்ருஜதி கதா³சித் | கதா³சிச்ச முக்தா: ஸத்யஸங்கல்பா: பரமபுருஷலீலாங்க³தயா ஸ்வபித்ருலோகாதி³கம் ஸ்வயமேவ ஸ்ருஜந்தி |

எப்படி ஸ்வப்பனத்தில் ஈசுவரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ரதம் முதலிய கருவிகளினால் ஜீவன் ஸுகத்தை யனுபவிக்கிறானோ, அப்படியே முக்தனும் லீலையில் துடங்கிய ஈசுவரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிருதிலோகம் முதலியவைகளினால் லீலா ரஸத்தை யநுபவிக்கிறான். பரம புருஷனும் மனுஷ்ய தர்மங்களை யொட்டிய லீலா ரஸத்தை யநுபவிப்பதுபோல் தன் லீலையின் பொருட்டே முக்தர்களுக்கும் பிதிரு லோகாதிகளைத்தானே சிலசமயங்களில்ஸ்ருஷ்டிக்கிறான். சில சமயங்களில் முக்தர்களே ஸத்திய ஸங்கல்பர்கள் (நினைத்ததை முடிக்கும் சக்தியுள்ளவர்கள்) ஆகையால் பரம புருஷனின் லீலைக்குட்பட்டு பிதிரு லோகாதிகளை ஸ்ருஷ்டித்துக் கொள்கிறார்கள். என்று.

இதன் வியாக்கியானத்தில்

வ்யூஹ ஸம்ப³ந்தி⁴ லீலாவிஶேஷஸ்யாநந்த³கத்வம் வ்யூஹண: ப்ரியதமத்வாதிஶய நிப³ந்த⁴நம் | கதா²ந வ்யூஹண: ப்ராப்யத்வேந க்³ரஹணம் |

பிரும்மத்துக்கு ஸம்மந்தப்பட்ட லீலை ஜீவனுக்கு அநுகூலமாகத் தோற்றுவதற்குக் காரணம் பிரும்மம் (பகவான்) மிகவும் பிரியமாக விருப்பதால். ஆகையால் பிரும்மமே ஜீவனால் அடையத் தக்கவன், என்பதற்கு விரோதமில்லை, என்று விவரிக்கப்பட்டது.

[ஸ்ரீராமானுஜ தர்சனத்தின் அதிசயம்]

இவ்வளவால் உரைக்கப்பட்டதில் இது ஸாராம்சம். இந்தப் பிரபஞ்சம் அத்யந்தம் துக்கமயமென்றும் ஹேயம் (அருவருக்கத் தகுந்தது) என்றும் எல்லா மதஸ்தர்களும் சொல்லுகிறார்கள். இந்த துக்கமயமான பிரபஞ்சத்தை அடியோடு நாசம் செய்வதற்கு (விட்டொழிப்பதற்கு) அது துக்க மென்றும், ஸ்வலக்ஷணமென்றும், க்ஷணிகமென்றும், சூன்யமென்றும் நான்குவித பாவனைகளைச் செய்ய வேண்டுமென்று உபதேசித்து பௌத்தர்கள் தங்கள் ஸித்தாந்தத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். இதற்கு எதிராக ஸாங்கியர் முதலானவர்கள் பிரபஞ்சம் துக்க மயமாக விருந்தாலும் அதின் சம்பந்தத்தை ஒழித்து கொள்ளவேண்டியது அவசியம், என்று நிர்மானித்தார்கள். மற்ற ஸித்தாந்திகளும் ஏறக்குறைய இவ்விரண்டு ஸித்தாந்தங்களிலேயே அடங்கி விடுகிறார்கள்.

ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தத்திலோ வென்றால்? பிரபஞ்சம் உண்மையானது. நித்தியமானது (அழியாதது) பகவானுக்கு லீலா ஐசுவர்யமாக விருப்பது. அவனுடைய லீலா ரஸத்துக்கு அனுகூலமாயிருப்பது. எப்பொழுதும் அநுகூலமாகவே அறியப்படுவது. முக்தர்களுக்கும் ஆனந்த ரூபமாகவே யிருப்பது. ஸ்வபாவத்தில் ஸுகரூபமானது. ஆனால் ஜீவனுடைய கர்மமாகிற பகவத் ஸங்கல்ப்பத்தால் சில சமயங்களில் சுகமாயும் சில சமயங்களில் துக்கமாயும் காணப்படுவது. கர்மபெந்தம் கழிந்தால் எப்போதும் ஸுகமாய் விருப்பத்தக்கதாகவே யிருப்பது. பகவதாத்மகம் (பகவானுக்கு உடலாய் அவனை உள்ளுயிராகக் கொண்டது) என்பதினால் பிரபஞ்சம் ஆதரிக்கத் தக்கதே யன்றி பரிஹரிக்க (ஒழிக்க)த் தக்கதல்ல, என்று இப்படிகளில் நிரூபிக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் இது ஸர்வானுகூல்ய ஸித்தாந்தம், என்று

பெயர் பெற்றது. அதாவது? எல்லாவற்றையும் அநுகூலமாகப் பார்ப்பது, என்றதாயிற்று.

மோக்ஷ தெசையில் பிரபஞ்சம் அநுகூலமயமாக விருந்தாலும் ஸம்ஸார தெசையில் அதை விலக்கவேண்டியது தானே? என்றால், இவ் விடத்திலேயே நாம் பகவானுக்கு லீலா ரஸத்தை யுண்டாக்கிக் கொண்டு மோக்ஷதெசையில் பண்ணப்போகிற கைங் கரியத்துக்கு முனியான கைங்கரியங்களைச் செய்து ஆனந்தானுபவம் பண்ணலா மாகையால் இதுவே பிரபஞ்சத்தில் நாமிருப்பதின் பிரயோஜனமாகிறது. இவ் வர்த்தம் பூர்வாசாரியர்களால் அநேக பிரகாரமாக அநுஸந்திக்கப்பட்டது. ஸ்ரீராமநுஜரின் கெத்யத்தில் பகவான் வாக்கியத்தில்

இஹைவ ஶ்ரீரங்கே ஸுகமாஸ்வ |

இங்கேயே ஸ்ரீரெங்கத்தில் ஸுகமாக வஸித்துக் கொண்டிரு என்று சொல்லப்பட்டது.

ஶ்ரீரங்கே ஶரதஶ்ஶதம் ஸஹ ஸுஹ்ருத்வர்கேண நிர்த்வந்த்வகம்
நிர்வ்யாபத்ஸுகம் ஸுகம் ச ஶாஸ்த்ர விஹிதாம் ஸூக்ஷ்மாவ
ஶ்ருதிம் வராம் |
யாஸ்த்வத்தாஜ்ஞா ஸமாராதநாய ஸ்வஸ்யைகசேஷ்டாவிதா
ஸம்யம்பக்திஶேஷைவ ஸம்ப்ரதீக்ஷாம்யகஸ்மாத்காங்க்ஷாம் ||

ஓ பகவானே! ஸ்ரீரங்கத்தில் நூறு வருஷங்களும் சிநேகிதர் முதலானவர்களோடு தடையற்றதும் துக்கமில்லாததும் சுகரூபமனா உம்முடைய கைங்கர்ய ரஸம் நிறம்பிய மேலான ஸ்மிருத்தியை யனுபவித்துக்கொண்டு உம்முடைய பாத தூளிகளாக இருக்கக் கடவோம். நீரே எங்களுக்குத் தாயும் தந்தையும் மற்றெல்லாமும் புகலிடம். ஆகையால் உமது நிர்வியாஜமான கிருபையை எங்கள் திரத்தில் புரிவீராக.

நிரஸநம் நிவிஸ்தஸ்தீயம் கைங்கர்ய விதாவத ஶேஷி
ரஶவ்யம் |

𑌸𑌤𑍍𑌯𑌂 𑌶𑌪𑍇 𑌵𑌾𑌰𑌣 𑌶𑍈𑌲𑌨𑌾𑌥 𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠 𑌵𑌾𑌸𑍇𑌽𑌪𑌿
𑌨 𑌮𑍇𑌽𑌭𑌿𑌲𑌾𑌷𑌃 ।

ஓ ஹஸ்திகிரி நாதனே !

மனதுக்கெட்டாத தேவரீருடைய திருமேனியின் வடிவழகை இடை விடாமல் அனுபவித்துக்கொண்டு வருகிற அடியேனுக்கு வைகுண்டவாஸத்தில் கூட ஆசைகிடையாது. ஸத்தியமாகச் சொல்லுகிறேன். (தேசிகன்)

𑌕𑌂𑌚𑍇𑌤𑍍 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌸𑌿 𑌤𑌵𑌾𑌸𑍍𑌮𑌿 𑌸𑌮𑍀𑌪𑌤𑌶𑍍𑌚
𑌤𑍍𑌵𑌯𑍍𑌯𑌸𑍍𑌤𑌿 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌧𑌿𑌕𑌾 𑌕𑌰𑌿 𑌶𑍈𑌲𑌨𑌾𑌥 ।
𑌸𑌂𑌸𑍃𑌜𑍍𑌯𑌤𑍇 𑌯𑌦𑌿 𑌚 𑌦𑌾𑌸 𑌜𑌨𑍈𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑍈𑌃
𑌸𑌂𑌸𑌾𑌰 𑌏𑌷 𑌭𑌗𑌵𑌨𑍍𑌨𑌪𑌵𑌰𑍍𑌗 𑌏𑌵 ।

ஓ பகவானே! அத்திகரி நாதனே! தேவரீரும் அடியேனைக் கடாக்ஷித்து தேவரீர் சமீபத்திலும் நானமர்ந்து தேவரீருடைய தாஸஜனங்களுடைய ஸஹவாஸமும் எனக்குக்கிடைத்துவிட்டால் இந்த ஸம்ஸாரமே மோக்ஷமன்றோ ? (தேசிகன்) என்றிவை முதலிய ஸ்ரீ ஸூக்திகள் பராமர்சிக்கத் தக்கவை.

ஐந்தாம் அத்தியாயம்

மோக்ஷ ஸாம்ராஜ்யம்

[பிரும்மானந்தத்தை நிரூபிக்கும் வழி]

மோக்ஷத்தில் பிரும்மானுபவம் ஆனந்த ரூபமாக விருக்குமென்னப் பட்டது. உலகத்தில் பிராணிகள் அநேக விதமான விசித்திர ருசிகளையுடையவர்களாகையால் அந்தந்த மனிதரின், ருசிக்கு அனுகுணமாக ஆனந்த ஸ்வரூபத்தை உபதேசிக்கவேண்டியிருக்கிறது. இதை யொட்டியே உபனிஷத்துக்கள் மோக்ஷானுபவத்தைப் பலவிதமாக உபதேசித்திருக்கின்றன.

இவ்விடத்தில் ஸ்ரீ மாதவாசாரியர் சொல்லியிருக்கும் ஒரு பிடிகை கவனிக்கத்தக்கது. அத்வைத ஸித்தாந்தத்தின் படியில் பிரும்மமானது பிரபஞ்சத்தின் வடிவில்லாததாயும் (ஜகதாகார சூன்யமாயும்) சூன்யமல்லாததாயு மிருக்குமென்று குரு உபதேசித்ததைக்கேட்ட சிஷ்யன், ஜெகதாகார சூன்யமாயும் சூன்யமல்லாததாயு மிருக்கும் வஸ்துவை மனத்தால் நினைப்பதெப்படி? என்று வினவ, குருவும் எப்படி ஒரு வாக்கியத்தால் கேள்வை கேள்க்கிறாயோ அப்படியே வாக்கியத்தின் அர்த்தத்தை மனதில் வைத்துக்கொண்டு தியானம்செய். பிரும்மத்துக்கு ஸமானமான வஸ்து வேறு கிடையாதாகையால் திருஷ்டாந்தம் சொல்ல முடியாது. பிரும்மத்தை அறிவதற்கு ஏதாவது ஒரு வழி காட்டவேண்டுமென்றால் அயர்ந்த (காட) தூக்கத்தின் நிலைமையைக் காட்டலாம். ஆனந்தம் எப்படி யிருக்குமென்றால் அதற்கு உதாஹரணமாக இஷ்டமான விஷயானுபவத்தை நிர்தேசிக்கலாம். சம்சயம் நிவிருத்தியாக வேண்டுமானல் சாரீரகமீமாம்ஸா சாஸ்திரத்தைப் படிக்கவேண்டும். என்று பெதில்கூறினார். என்று.

எனவே, பிரும்மானுபவமானது உலகத்தில் அறியப்படும் அனுபவங்களைக் காட்டிலும் வேறானதென்ற தாயிற்று. இதை உலக அனுபவங்களைக் கொண்டே தெரிந்துகொள்வதற்காக ஜீவ

னுக்கும் ஈசுவரனுக்கும் நாயிகா நாயகபாவம், பிதிருபுத்திரபாவம், ஸ்வாமி (எஜமானன்) பிருத்திய (ஸேவக) பாவம், குரு சிஷ்ய பாவம், லக்ஷ்ய (குறி) போதக (புத்தம் செய்கிறவன்) பாவம், என்று பலவித ஸம்பந்தங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

ரூபேண ஸ்வபா⁴வேந கு³ணை꞉ விப⁴வா ஸர்வேஶ்வர ஸர்வதே³
ரூபாதி³ பா⁴வப்ரேமாதி³ ப்ரஸித்³தா⁴ |

கா³ம்பீ⁴ர்ய மாது⁴ர்ய முகை²ர் வர்ணநா வாசோ யதீ³ய
விப⁴வஸ்ய திரோதா⁴யகமேவ |

ரூபத்தாலும் கல்யாண குணங்களினாலும் எல்லாவற்றுக்கும் மேற்பட்ட ஐசுவரியத்தாலும் கெம்பீரமாயும் மதுரமாயுமுள்ள மனோபாவங்களினாலும் அல்லது மஹிமையாலும் அப்பேர்ப்பட்டவன் இப்பேர்ப்பட்டவன், என்று வர்ணிக்கிற வாக்குக்களெல்லாம் எந்த பரபிரும்மத்தினுடைய வைபவத்தை மறைக்கும் பொருட்டு உண்டாயினவோ, என்றார்கள்.

[சிருங்காரம்]

இவ் வனுபவங்களில் நாயிகா(ஸ்திரீ) நாயக (புருஷன் பாவம் உலகத்தில் பிரஸித்தமான சிருங்கார ரஸத்தை முன்னிட்டு பிரும்மானந்தத்தைக் காட்டுகிறது. ஆகையால் தான் அலங்காரசாஸ்திரக்காரர்களும் ரஸமானது பிரும்மானந்தத்துக்குச் சமானம், என்று நிரூபிக்கிறார்கள். இதைச் சில உபனிஷத்துக்கள்பேசின. இதன் பிரகாரத்தில் முதலில் பிரும்மத்தைப்பற்றிய சிரவணம் (கேட்டல்) பிறகு அதில் ஆசையின் மிகுதியால் பிரும்மத்தை நேரில் காணுதல், அதன்மேல் அதை அனுபவிக்கவேண்டு மென்னும் உத்கட (அளவுகடந்த) அபேக்ஷை பிறத்தல், பின்னர் அனுபவானந்தம், என்று இவை படிப்படியாக வருகின்றன. இவ்வனுபவம் வந்த பிறகு எப்போது மிருக்கும், ஈசுவரனோடு ஸமான போகமாகவிருக்கும். ஈசுவரனும் ஜீவனும் பரஸ்பரம் நிரதிசய அநுகூலர்களாகவே இருந்துகொண்டு ஐசுவரியங்களில் ஒருவித விபாகமுமில்லாமல் லீலாபோக ஐசுவரியங்களை இடைவிடாமல் ஒரே மாதிரியாக அனுபவிப்பார்கள், என்று, இவ்விஷயத்தில் வசனங்கள்.

𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌃 𑌨 𑌮𑍇𑌧𑌯𑌾 𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨 |

𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌃 𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑌨𑍂𑌂 𑌸𑍍𑌵𑌾𑌂 |

இந்தப் பரமாத்மா படிப்பினுலோ புத்தியினுலேயோ மிகுந்தவேதார்த்தியயனத்தினுலோ அடையப்படமாட்டான். எந்த ஜீவனையே அவன் வரிக்கிருனே அவனுலேயே அடையப்படுவான். அவனுக்கே அந்தப் பரமாத்மா தன் ரூபத்தை (உடம்பை)க் காட்டுகிருன். இது கடோபனிஷத்திலும் முண்டகோபனிஷத்திலும் படிக்கப்பட்டிருக்கிறது. இங்கு பிரார்த்தனையைச் சொல்லுகிற வ்ரு, (வரித்தல்) என்னும் வினைப்பகுதி யிருப்பதால் ஜீவனுக்கும் பிரும்மத்துக்கும் பரஸ்பரம் பிரார்த்தனை யிருக்கவேண்டுமென்ற தாயிற்று. அதிருந்தால்தான் தன்னுடம்பை (தனுவை)க் காட்டும்படியாகும். தனுபதம் தன்வீ (மங்கை) என்னும் பதத்தையும் ஸூசிப்பிக்கும். ஆகையால் இங்கு சிருங்காரரஸம் தெளிவாகச் சொல்லப்பட்டதென்னலாம். அப்படியே பிரும்மானந்தம்,

𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌂𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌤𑍋 𑌨 𑌬𑌾𑌹𑍍𑌯𑌂 𑌕𑌿𑌂𑌚𑌨 𑌵𑍇𑌦 𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 |

எப்படி பத்தினியினுல் அணையப்பட்டவன் உள்ளிலும் புறம்பிலும் ஒன்றையு மறியமாட்டானே, என்று ஸ்பஷ்டமாகவே வாஜஸநேயி சுருதியில் காணப்படுகிறது. ரஸானுபவமும்,

𑌯𑌤𑍍𑌰 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌚𑍍𑌛𑍃𑌣𑍋𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌸 𑌭𑍂𑌮𑌾 |

எவ்விடத்தில் வேறென்றையும் காணுனே வேறென்றையும் கேளானே வேறென்றையு மறியானே அதுவே பூமா (எல்லாவற்றுக்கும் மேற்பட்டது) என்று வர்ணிக்கப்பட்டது.

புராணங்களிலும் பகவ தனுபவப்ரீதியை,

𑌯𑌾 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌰𑌵𑌿𑌵𑍇𑌕𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍍𑌵𑌨𑌪𑌾𑌯𑌿𑌨𑍀 |
𑌤𑍍𑌵𑌾𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌤𑌃 𑌸𑌾 𑌮𑍇 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌽𑌪𑌸𑌰𑍍𑌪𑌤𑍁 |

அவிவேகிகளுக்கு விஷயபோகங்களில் பிரீதி எப்படி இடைவிடாமல் மிகுந்திருக்குமோ அவ்விதமாகவே தேவரீரை தியானிக்கிற எனக்கு அந்த பிரீதியானது ஹிருதயத்தைவிட்டு அகலாமலிருக்கட்டும், என்ற படிகளில் விளக்கப்பட்டது.

பகவான் தானே கீதையில்,

𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑍋𑌽𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑌹𑌂 𑌸 𑌚 𑌮𑌮 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ।

நான் ஞானியின் மிகுந்த பிரீதிக்குப் பாத்திரன். அவனளவில் அவனும் என் பிரீதிக்குப் பாத் திரனுகிறுன், என்றருளிச் செய்தான். மேலும்,

𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌮𑌾𑌮𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌯𑌾𑌵𑌾𑌨𑍍𑌯𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 ।
𑌤𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑍋 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌶𑌤𑍇 𑌤𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ।

பக்தியினல் என்னை ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் இப்படிப்பட்டவனென்று அறிந்து அவ்வுண்மையான ஞானத்தால் பிறகு என்னுள் நுழைந்தும் விடுகிறுன். என்று தன்னேடு ஒன்றுவதையும் சொன்னன்.

இப்படிப் பிரியை (நாயகி)யின் விஷயமான ஸகல வ்யவஹாரங்களும் படிப்படியாக அளவுகடந்து பிரியமாவதுபோல் பக்தியும் பரபக்தி, பரஞ்ஞானம், பரமபக்தி, என்று வளர்ந்து வரும் பிரகாரத்தை முன்பே சொன்னேம்.

இவ் விஷயத்தில் இன்னெரு உதாரணத்தைக் கவனிக்க வேண்டும். ஒரு நாயகன் சொல்லும் பிரகார மிது.

𑌯𑌦𑍇𑌵 𑌰𑍋𑌚𑌤𑍇 𑌮𑌹𑍍𑌯𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 ।
𑌇𑌤𑌿 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌨 𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑌾 ।

எனக்கு எது ருசிக்கிறதோ அதையே என் நாயகி செய்கிறுள், என்று நினைக்கிறுனே யொழிய அவன் உண்மையை யறிந்தவனல்ல. ஏனெனில் ? அவள் செய்வதெல்லாமே இவனுக்கு ருசித்திருக்கிறது, என்று, இதில் நாயகியின் ஸ்தானத்தில் முக்த ஜீவாத்மாவையும் நாயகன் ஸ்தானத்தில் பகவானையும் வைத்துக் கொண்டால் முக்தன் செய்யும் காரியங்களெல்லாம் பகவானுக்கு போக்யமாகிறதென்னும் ஸாமரஸ்யம் அறியப்படும்.

[வீரரஸம்.]

வீரஸ்வபாவமுடையவர்களுக்கு பிரும்மானந்த ஸ்வரூபத்தை விளக்க சில உபனிஷத்துக்கள் புறப்பட்டிருக்கின்றன. அவை யாவன ?

𑌧𑌨𑍁𑌰𑍍𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑍌𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 𑌮𑌹𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂
𑌶𑌰𑌂 𑌹𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌾 𑌨𑌿𑌶𑌿𑌤𑌂 𑌸𑌂𑌧𑌯𑍀𑌤 ।
𑌆𑌯𑌮𑍍𑌯 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌗𑌤𑍇𑌨 𑌚𑍇𑌤𑌸𑌾
𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌤𑌦𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 ।

ஓ ஸௌமியனே ! உபனிஷத்தில் சொல்லப்பட்ட மஹா அஸ்திரமாகிய வில்லை எடுத்துக்கொண்டு அதில் உபாஸனையினால் கூராக்கப்பட்ட பாணத்தை ஸந்தானம் பண்ணு. (தொடு) பகவானிடத்தில் வைக்கப்பட்ட மனதுடன் அதை விடுத்து அக்ஷரம் (அழிவற்றது) என்னப்பட்ட பகவானாகிய அந்த இலக்கையே அந்த பாணத்தினால் துளை செய்து விடு.

𑌪𑍍𑌰𑌣𑌵𑍋 𑌧𑌨𑍁𑌃 𑌶𑌰𑍋 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌅𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑍇𑌨 𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌶𑌰𑌵𑌤𑍍𑌤𑌨𑍍𑌮𑌯𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

பிரணவமே வில், ஜீவாத்மாவே சரம், அதற்கு பிரும்மமே இலக்கு, என்னப்படுகிறது. அவ்விலக்கைத் தவறுதலில்லாமல் துளைத்து பாணம்போல் அதோடு அதாக ஆய்விடவேண்டும், என்பது முதலியவை.

இவ் வுபனிஷத்துக்களின்படியில் ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை பாணமாக நினைத்து அதை உபாஸனை என்கிற சாணைக்கல்லில் நன்றாகத் தீட்டி பிரணவம் (ஓங்காரம்) என்கிற குறியைக் கட்டி பரப் பிரும்மமென்கிற லக்ஷ்யத்தை (இலக்கை) அடித்தால் ஜீவன் அதில் புகுந்து பரப்பிரும்ம ஸ்வரூபனாகவே ஆகி அவனோடு பேதம் தெரியாதபடி அவனுடைய ஸாம்யத்தை (ஸமானமாயிருத்தலை) யடைவான், என்றதாயிற்று. இவைகளில் உபாஸனம் இந்த ரீதியில் சொல்லி யிருப்பதால் இந்த வீரரஸானுபவத்தால் வரும் ஆனந்தம் அந்த ருசியையுடையவர்களுக்கு அனுகூலமாயிருக்கும், என்று தெரிகிறது.

[பயாநகரஸம்]

இது பயம், என்றும் ஸ்வபாவத்தை முன்னிட்டது. பயத்தால் ஸ்வாமியின் கட்டளையைத் தவருமல் நடத்தவேண்டுமென்றிருக்கும் ஸ்வபாவமிது. இந்த மனோபாவம் இவ்வுபனிஷத்து வாக்கியங்களினுல் அநுபவத்துக்கு வரும்.

யதிதம் கிஞ்ச ஜகத் ஸர்வம் ப்ராண ஏஜதி நிஸ்ஸ்ருதம் |
மஹத்பயம் வஜ்ரமுத்யதம் ய ஏதத்விதுரம்ருதாஸ்தே பவந்தி

இந்தப் பிரபஞ்சத்தில் காணப்படுமவற்றையெல்லாம் பிராணன், என்னனப்பட்ட பரப்பிரும்மமே உள்ளே பிரவேசித்து நியமனம் பண்ணுகிறது. வஜ்ஜிராயுதத்தை உயரத் தூக்கி வெருட்டுவது போல் மஹாபயத்தை யுண்டாக்குகிறது. இதை அறிகிறவர்கள் மரணமில்லாதவர்களாகிருர்கள்.

பீஷாऽஸ்மாத்வாத: பவதே பீஷோதேதி ஸூர்ய: |
பீஷாऽஸ்மாதக்நிஶ்சேந்த்ரஶ்ச ம்ருத்யுர்தாவதி பஞ்சம: |

இவனிடத்தில் (பரப்பிரும்மத்தினிடத்தில்) பயத்தினுல் காற்று அடிக்கிறது. ஸூரியன் உதிக்கிருன். அக்கியும் இந்திரனும் தந்தம் காரியங்களைச் செய்கிருர்கள். ஐந்தாவனுகிய யமனும் பறக்கிருன்

ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி ஸூர்யா சந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத: |

ஏஷ ஸேதுர்விதரண: | ஏஷாம் லோகாநாமஸம்பேதாய |

இந்த அக்ஷரனுடைய கட்டளையில் ஓ கார்க்கியே! ஸூரியனும் சந்திரனும் தரிக்கப்பட்டு நிலைநிற்கிருர்கள். இவ்வுலகங்களெல்லாம் அழிந்துவிடாமலிருக்க அவைகளுக்கு இவனே காக்கும் கரையாய்த் தாங்குகிறவனுமாகிருன் என்று,

மனுவும்,

பயாதஸ்யாக்நிஸ்தபதி பயாத்தபதி ஸூர்ய: |
பயாதிந்த்ரஶ்ச வாயுஶ்ச ம்ருத்யுர்தாவதி பஞ்சம: |

𑌸𑌰𑍍𑌵𑍋 𑌦𑌣𑍍𑌡𑌜𑌿𑌤𑍋 𑌲𑍋𑌕𑍋 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑍋 𑌹𑌿 𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌨𑌰𑌃 ।
𑌦𑌣𑍍𑌡𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌭𑌯𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌗𑌦𑍍𑌭𑍋𑌗𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇 ।

எல்லாப் பிரஜைகளையும் தண்டனையே ஆளுகிறது தண்டனையே ரக்ஷிக்கிறது. தூங்குகிறவர்களிடத்தில் தண்டனை விழித்துக் கொண்டே யிருக்கிறது. ஆகையால்தான் புத்திமான்கள் தண்டனையை அங்கிகரித்தார்கள். உலகமெல்லாம் தண்டனையால் ஜயிக்கப்படுகிறது. அதில்லாமல் பரிசுத்தனாயிருக்கும் மனிதன் கிடைப்பது அரிது. தண்டனையின் பயம் இருப்பதனால்தான் உலகம் ஸுகத்தைக்கொடுப்பதாகிறது என்றார்.

இவை முதலிய வாக்கியங்களை விமர்சித்தால் பகவானிடத்தில் விலக்ஷணமான (சிறந்த) பயபக்தி.

பாவமுண்டாவதற்கு இது மிகவும் பயன்படத்தக்க ஒரு மார்க்க மென்று ஏற்படுகிறது. இந்த பயாநுபவத்தை இப்படி நிரூபிக்கலாம். அதாவது ? ஸேவகன் (தாஸன்) தான் தன்னுடைய ஸகல பரிவாரத்துடனும் ஸ்வாமிக்காகவே இருப்பதாக பாவிக்க வேண்டும். சீலமுடைய ஸ்வாமியும் (எஜமானனும்) தன்னுடைய எல்லா பரிவாரத்துடனும் ஸேவகனுடைய நன்மைக்காகவே யிருப்பதாகக் கருதவேண்டும். இப்படி பரஸ்பரபாவனைகள் கலந்தால் அதில் வரும் ரஸாநுபவம் அவ்வவர்களுக்கேஉணரக்காணும் படியான உயர்ந்த நிலைமையிலிருக்கும். இதைப் பூர்வாசாரியர்கள் அநுபவித்த பிரகாரத்தை இந்த சுலோகங்களினால் அறியலாம்.

𑌪𑌰𑌿𑌜𑌨 𑌪𑌰𑌿𑌬𑌰𑍍𑌹𑌾 𑌭𑍂𑌷𑌣𑌾𑌨𑍍𑌯𑌾𑌯𑍁𑌧𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌵𑌰
𑌗𑍁𑌣 𑌗𑌣𑌾𑌶𑍍𑌚 𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌯𑌸𑍍𑌤𑍇 ।

𑌪𑌰𑌮𑌪𑌦𑌮𑌥𑌾𑌣𑍍𑌡𑌾𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌦𑍇𑌹𑌸𑍍𑌤𑌥𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌰𑌦 𑌸𑌕𑌲
𑌮𑍇𑌤𑌚𑍍 𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌂 𑌚𑌕𑌰𑍍𑌥 ।

ஹே வரதா ! உம்முடைய ஸேவகர்களென்ன நிசார் முதலியவைகளென்ன, ஞானம் சக்தி முதலிய பெருங்குணங்களென்ன, பூஷணங்கள் நகைகளென்ன, பரமபதம் அப்படியே இவ்வண்டங்களென்ன, உம்முடைய சரீரம் அப்படியே உமது ஆத்மா (ஸ்வரூபம்) என்ன, இவையெல்லாவற்றையும் உம்மை ஆச்ரயித்தவர்

களின் பிரயோஜனத்துக்காகவன்றோ செய்துவைத்திருக்கிறீர் ? என்று ஸ்ரீ கூரத்தாழ்வான் அருளிச்செய்தார். இது ஸ்வாமியின் (எஜமானின்) மனோபாவ மிருக்கும்படியைக் காட்டுகிறது. ஸ்ரீ பட்டரும்.

𑌉𑌪𑌾𑌧𑌤𑍍𑌤𑍇 𑌸𑌤𑍍𑌤𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌿 𑌨𑌿𑌯𑌮𑌨𑌾𑌦𑍍𑌯𑍈𑌶𑍍𑌚𑌿𑌦𑌚𑌿𑌤𑍌 𑌸𑍍𑌵
𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌿𑌤𑌿𑌵𑌦𑌤𑌿𑌵𑌾𑌗𑍌𑌪𑌨𑌿𑌷𑌦𑍀 |
𑌉𑌪𑌾𑌯𑍋𑌪𑍇𑌯𑌤𑍍𑌵𑍇 𑌤𑌦𑌿𑌹 𑌤𑌵 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌤𑍁 𑌗𑍁𑌣𑍌
𑌅𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑌯 𑌶𑌰𑌣 𑌮𑌵𑍍𑌯𑌾𑌜 𑌭𑌜𑌨𑌂 |

ஹே ரங்கத்தில் பள்ளிகொண்ட பகவானே ! உபநிஷத்து வாக்கியங்கள் ஸ்ரீமானாகிய தேவரீர் எல்லா சேதனாசேதனங்களையும் ஸத்தை (ஸ்வரூபம்) ஸ்திதி (இருப்பு) நியமனம் (ஏவுதல்) முதலியவைகளைக் கொடுத்து தேவருடைய பிரயோஜனத்துக்காகவே உபயோகப்படுத்திக் கொள்ளுகிறீர்கள், என்று சொல்லுகின்றன. எனவே, தேவரீரே மோக்ஷத்துக்கு உபாயமாயும் மோக்ஷத்தில் உபேயமாகவும் (அடையப்படவேண்டியவரென்றும்) சொல்லப்படுவது தேவரீருடைய தத்துவம் (உண்மையான ஸ்வரூபம்) வெறுங்குணங்களல்லவென்று தீர்மானமாகிறது. ஆகையால், ஒருவிதமான வியாஜத்தையும் (நிபந்தனையையும்) கோலாமல் அடியேன் தேவரீரைச் சரணமடைந்தேன், என்று தாஸனுக்கு (ஸேவகனுக்கு) இருக்கவேண்டிய மனோபாவத்தை விளக்கியருளினார். இதில் ஜீவன் தான் பகவானுடைய உபயோகத்துக்காகவே ஏற்பட்டிருப்பவனானையால் பகவத் கைங்கரியத்தை தனக்கு இயற்கையான வியாபாரமென்று நினைத்து ஆனந்திக்கவேண்டியவன், என்று தெரியவருகிறது.

[வாத்ஸல்ய ரஸம்]

இது பிதாவுக்கும் புத்திரனுக்கும் இருக்கும் பாவத்தால் நிருபணம் செய்யப்படுகிறது. இந்த ஸந்தர்ப்பத்திலேயே மதாசாரியர்கள் வழிதப்பிப்போன ராஜ குமாரனின் திருஷ்டாந்தத்தைச் சொல்லுகிறார்கள். உபநிஷத்திலும் ஜீவர்கள் “𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 𑌕𑍁𑌮𑌾𑌰𑌕𑌾𑌃, (எண்ணிறந்த குமாரர்கள் சிறுவர்கள்) என்று பேசப்படுகிறார்கள். வழிதப்பிப்போய் வேடர்குலத்தில்வளர்ந்த

ராஜகுமாரன் கதையை ஸ்ரீ சங்கராசாரியரும் ஸ்ரீ பாஸ்கராசாரியரும் ஸ்ரீ ராமானுஜாசாரியரும் ஸ்ரீ வேதாந்தாசாரியரும் அவரவர்களுடைய கிரந்தங்களில் உதாஹரித்திருக்கிறார்கள். ஸ்ரீ சங்கராசாரியர் இந்த உபாக்கியானத்தை (கதையை) ஸம்பிரதாயம் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள், என்று உரைப்பதால் இது தொன்றுதொட்டு பஹுஜனங்களால் அங்கீகரிக்கப்பட்டதென்று தெரிகிறது. இந்த உதாரணத்தின் ஔசியத்தையும் பூர்வாசாரியர்கள் பலபடிகளில் பேசியிருக்கிறார்கள்.

ஸார்வபௌமனை ஒருராஜா தன் அந்தப்புரம் பரிவாரங்கள் முதலியவர்களுடன் வேட்டைக்குச் சென்றிருந்தபோது காட்டில் விளையாடிக்கொண்டிருந்த வார்த்தைகூட வறியாத ராஜகுமாரன் வழிதப்பி எங்கேயோ ஒரு வேடுவச் சேரியில் எடுத்தார் கைப்பிள்ளையாய் வேடரோடு வேடராய் வளர்ந்து அவர்களுடைய ஊணையே உண்டு அவர்களுடைய ஹீநமான தொழில்களையே கற்றும் செய்தும் தான் ராஜகுமாரன், தன்னுடைய போகங்களும் அனுவல்களும் வேறு, என்பதை அடியோடு மறந்து கிடந்தவந்தான். இப்படி வெகுகாலம் சென்றது. அரசன் குமாரனைக் காணுமல் அவனைத் தேடத் தன் பரிஜனங்களை யனுப்பினான். ஒரு சமயத்தில் இவர்களுக்கு இந்த வேடுவச் சேரியில் வளரும் குமாரன் தென்பட்டான். பின் அவர்களும் அவனுக்குத் தன் பிறப்புரிமை முதலியவைகளைத் தெரிவித்துத் தன் பிதாவிடம் சென்று ராஜபோகங்களை யனுபவிக்க வேண்டுமென்னும் ஆசையை உண்டாக்கினார்கள். இவனைக் கண்ட வரலாற்றை அரசனுக்கும் தெரிவித்து அவனுக்கும் பிள்ளையைக் காணவேண்டுமென்னும் த்வரையைஉண்டாக்கினார்கள். இவர்கள் சகாயத்தால் பிதாவும் குமாரனும் ஒன்று சேர்ந்து பிதாவின் புத்திரவாத்ஸல்யத்தால் புத்திரனுக்கு யௌவ்வராஜ்ய பட்டாபிஷேகம் கிடைத்தது. இப்படியே அநாதிகர்மத்தின்பலனாய் ஜீவன்தான் பகவானுக் குரித்தான அழிவில்லாத ஞானஸ்வரூபன், என்பதை மறந்து பிரகிருதியாகிற தேஹமே எல்லாம், என்று அதைச் சேர்ந்த சிற்றின்பங்களில் உழன்று தன்ஸ்வரூபம், பகவத் ஸம்பந்தம், தனக்கு பிறப்புரிமை போலுள்ள பகவத் கைங்கரியம், பிரும்மானந்தம், முதலியவற்றை

அறியாமல் இழந்து கிடக்க ஒருக்கால் தன் பூர்வபுண்ய மொன்றின்பலனுக நல்ல ஆசாரியர்களுடையவும் பாகவதர்களுடையவும் ஸஹவாஸ உபதேசாதிகள் நேர்ந்து அவற்றின் மூலமாக பகவத் கிருபையையும் நித்தியமான மோக்ஷானந்தத்தையு மடைகிறுன், என்று இந்தக் கதையின் உபதேசம்,

மாதா பிதாக்களுக்குப் புத்திரர்களிடத்தில் உள்ளவாத்ஸல்யத்தையும் (அன்பையும்) புத்திரர்களுக்கு அவர்களிடத்தில் உள்ள பக்தியையும் பரஸ்பரம் அநுஸந்தானம் செய்வதால் அனுபவிக்கப் படும் ரஸம் இங்கு பிரும்மானந்தத்துக்கு அறிகுறியாகக் காட்டப் படுகிறது.

இதை பகவான் கீதையில்,

வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: |

வாஸுதேவனே எல்லாமென்றிருக்கும் அத்தகைய மஹாத்மா மிகவும் அரியவன், என்றருளிச்செய்தார். இதனுல் ஸாதாரணமாய் மனிதர்கள் தங்கள் தங்கள் ருசியின்படி மனதில் பாவனை செய்கிறுர்களேயன்றி யதார்த்தத்தை உணர்ந்து பகவானிடத்திலேயே எல்லாவித பாவனைகளையும் செய்கிறதில்லை, என்னும் பொருள் கிடைக்கிறது.

அர்ஜுனனும் பகவான்சொன்னபடியே அவனை ஸாக்ஷாத்காரம்பண்ணி,

த்வமேவ மாதா ச பிதா த்வமேவ
த்வமேவ பந்துச்ச ஸகா த்வமேவ |
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தேவ தேவ |

தேவதேவனே! தேவரீரே எனக்குப் பிதாவும் அன்னையும் பெந்துவும் குருவும். தேவரீரே எனக்கு வித்யையும் தனமும் மற்றெல்லாமும், என்றனுசிந்தித்தான்.

பூர்வாசாரியர்களும்,

பிதா த்வம் மாதா த்வம் தயித தநயஸ் த்வம் ப்ரியஸுஹ்ருத்
த்வமேவ த்வம் மித்ரம் குருரஸி கதிச்சாஸி ஜகதாம் |

𑌤𑍍𑌵𑌦𑍀𑌯 𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑍍𑌭𑍃𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑌵 𑌪𑌰𑌿𑌚𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑍍𑌗𑌤𑌿𑌰𑌹𑌂 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌶𑍍𑌚𑍈
𑌵𑌂 𑌸𑌤𑍍𑌯𑌹𑌮𑌪𑌿 𑌤𑌵𑍈𑌵𑌾𑌸𑍍𑌮𑌿 𑌹𑌿 𑌭𑌰𑌃 ।

ஸ்ரீ ஆளவந்தார்.

தேவரீரே தந்தையும் தாயும் அருமைப் புதல்வனும் நண்பனும் ஸ்நேகிதனும் குருவும் உலகத்துக்கெல்லாம் கெதியாயுமிருப்பவர். அடியேன் தேவரீரின் உடைமையும் அடிமையும் ஸேவகனுமாக விருக்கிறேன். தேவரீரையன்றி எனக்குவேறு கெதியில்லை. ஆன துபற்றி தேவரீரைச் சரணமடைந்தேன். தேவரீரே என்னைக்காப் பாற்றவேண்டிய பாரத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் படியாயு மிருக்கிறேன், என்கிறபடிகளில் அநுஸந்தித்தார்கள்.

இந்தப்பிரகாரம் பகவானிடத்தில் அன்புவைத்து எவ்வளவுக் கெவ்வளவு மோக்ஷ ஐசுவரியத்தை விஸ்தரித்து அநுஸந்தானம் செய்கின்ருேமோ அவ்வளவுக்கவ்வளவு பகவானுடைய ஐசுவரிய மான இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றவும் நமது பிரீதியானது விருத் தியாகும். பிரபஞ்சத்தின் விஷயத்தில் நமது அன்பு அதிகரிப்ப தற்குத்தக்கபடி அதைக்குறித்து நாம் நடந்துகொள்ளவேண்டிய முறைகளும் இருக்கவேண்டுமென்று நமது ஸித்தாந்தம் உபதே சிக்கிறது. இதுமற்ற மதங்களின் உபதேசங்களைவிட தனிப்பட்ட ஏற்றத்தை யுடையதாக விருக்கிறது. முக்தனுடைய ஸகலவித ஆனந்தானுபவமும் பகவானுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய தாகையால் அவை பகவானுடைய கைங்கரியங்களேயாகக்கடவன.

[புராணங்களில் நிரூபணம்]

இவ்விதமாக உபனிஷத்துக்களில் சொல்லப்பட்ட அபிப்பிரா யத்தை இதிஹாஸ புராணங்கள் பல பிரகாரங்களில் விவரித்தன. இவைகளைச்சுருக்கி.

𑌕𑌾𑌮𑌾𑌦𑍍𑌗𑍋𑌪𑍍𑌯𑍋 𑌭𑌯𑌾𑌤𑍍𑌕𑌂𑌸𑌃 𑌦𑍍𑌵𑍇𑌷𑌾𑌚𑍍𑌚𑍈𑌦𑍍𑌯𑌾𑌦𑌯𑍋 𑌨𑍃
𑌪𑌾𑌃 । 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌾𑌦𑍍𑌵𑍃𑌷𑍍𑌣𑌯𑌃 𑌸𑍍𑌨𑍇𑌹𑌾𑌦𑍍𑌯𑍂𑌯𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌯𑌂
𑌵𑌿𑌭𑍋 । 𑌯𑍇𑌨𑌕𑍇𑌨𑌾𑌪𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑍇𑌨 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌸𑍍𑌤𑍁 𑌪𑌾𑌵𑌨𑌃 ॥

(நாரதர்.)

காமத்தினுல் கோபிகளும் பயத்தினுல் கம்ஸனும் த்வேஷத்தினுல் சிசுபாலன்முதலிய அரசர்களும் விருஷ்ணி வம்சத்தவர்களாகிய

நீங்கள் ஸ்ரீகிருஷ்ணனேடு குடல் துவக்காலும் ஸ்நேஹத்தாலும் பக்தியாலும் நாமும் (ஓ பிரபுவே! உம்மை) அடைந்தோம். ஏதோ ஒரு உபாயத்தினல் (தேவரீருடைய) ஸம்பந்தம்கிடைத்தால் அது வே எல்லாவற்றையும் பரிசுத்தம்செய்யும், என்று சொல்லப் பட்டது.

இத்தகைய பகவதனுபவத்தை ஸகலரும் எளிதாக அறிந்து கொள்ளும்பொருட்டு விஷயானுபவத்தை முன்னிட்டு அவதார கதைகளைவர்ணிக்கும்போது ராஸக்கிரீடைமுதலிய அதிசயோக்தி கள் புராணங்களில் பேசப்படுகின்றன. இக்கதைகளைப் பற்றிய ஆக்ஷேபஸமாதானங்களும் அங்கங்கேயே பலவிதமாகக் காணப் படுகின்றது.

ஸ்ரீ பாகவதத்தில் ராஸக்கிரீடை விருத்தாந்தத்தில் பகவான் திறத்தில் சொல்லப்படும். தோஷத்தை ஸ்ரீ சுகரே ஆக்ஷேபித்துக் கொண்டு அதற்கு ஸமாதானமும் அருளிச்செய்கிறர். பகவான் ஸர்வேசுவரன் எல்லாருக்கும் ஆத்மா (உயிர்) ஆகையால் அவன் நடவடிக்கைகளைப்பற்றி தோஷம் சொல்ல வொண்ணதென்றும் பிறர்க்கில்லாத தன்னுடைய அபூர்வமான மாயையைக் காட்டின ரென்றும் இந்தக்கதையைக் கேட்கிறவர்களுக்கு பகவானிடத்தில் நிரதிசய (அளவற்ற) பிரீதி பிறப்பதற்காக இப்படிச் சொல்லப் பட்டதென்றும் ஸமாதானங்கள் சொல்லப்பட்டன.

அங்கேயே,

𑌯𑌾𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑍍𑌪𑌰𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌨𑌾𑌸𑍂𑌯𑌨𑍍 𑌖𑌲𑍁 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯 𑌮𑍋𑌹𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑌾𑌯𑌯𑌾 ।
𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌃 𑌸𑍍𑌵𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌾𑌨𑍍 𑌦𑌾𑌰𑌾𑌨𑍍 𑌵𑍍𑌰𑌜𑍌
𑌕𑌸𑌃 ।

(இடைப்பாடியிலிருந்தவர்கள்) இக்கதைகளைக் கேட்டு மனதை கிருஷ்ணனிடமே செலுத்தினவர்களானர்கள்.

கிருஷ்ணனுடைய மாயையினல் மோஹமடைந்தவர்களாய் அவனிடத்தில் அஸூயைப்படாமல் தங்கள் தங்கள் பக்கத்தி லேயே தங்கள் தங்கள் பெண்சாதிகள் இருந்துகொண்டிருப்பதா கவே அறிந்தார்கள், என்று சொல்லியிருப்பது கவனிக்கத்தக்கது.

இந்த நியாயத்தைக்கொண்டு மஹாபாரதத்தில் குந்திக்கும் பாண்டுவுக்கும் நடந்த ஸம்பாஷணைக்கு விஷயமான சுவேதகேது விருத்தாந்தம் பகவத் பக்தியை போதிப்பிக்கச் சொல்லப்பட்ட கட்டுக்கதையென்றே நம் பூர்வாசாரியர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். பாவப்பிரகாசிகையில் ஸ்ரீ ரெங்கராமானுஜ ஸ்வாமியின் ஸ்ரீ ஸூக்தியைப் பார்க்கவும். தந்திரவார்த்திகமென்னும் கிரந்தத்தில் குமாரிலப்பட்டர் புராணக் கதைகளைப்பற்றி,

> 𑌨𑌾𑌤𑍀𑌵 𑌉𑌪𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑍇𑌷𑍁 𑌤𑌦𑌾𑌹𑌿 𑌨𑌿𑌵𑍇𑌶𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌃 ।
> 𑌵𑍇𑌦𑍇 𑌹𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑌿 𑌵𑍈𑌦𑌿𑌕𑌾𑌨𑌿 𑌵𑌾𑌕𑍍𑌯𑌶𑍇𑌷𑌾𑌯 𑌨
> 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌭𑌿𑌃 𑌤𑌦𑍍𑌵𑍇𑌦𑍍𑌯𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌿 𑌸𑍍𑌤𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 ।
> 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌧𑌿𑌷𑍁 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌂 𑌵𑍇𑌦𑌤𑌃 ।

உபாக்கியானங்களின் உண்மைகளைப்பற்றி அதிகப் பிடிவாதம் காட்டக்கூடாது. வேதப்பிரஸ்தானங்களிலிருந்தன்றோ வால்மீகர் வியாஸர் முதலியவர்களால் அவைகளை யொட்டியே தங்கள் தங்கள் வாக்கியங்களும் சொல்லப்பட்டன. சொல்லப்படவேண்டியவர்கள் அநேகவித விசித்திர புத்திகளை யுடையவர்களாகையால் இது மிகவும் யுக்தமாகவே யிருக்கின்றது என்று சொன்னது கெவனிக்கத்தக்கது. அக்கதைகள் போதிக்கிற நீதிகளைப் பொருள் படுத்த வேண்டுமேயன்றி கதைபாகத்தை நுட்பமாகச் சீர்தூக்கக் கூடாது, என்றதாயிற்று. கோபிகள் விருத்தாந்தத்தைப்பற்ற ஸ்ரீ வேதாந்த தேசிகன் சததூஷணியில் சொல்லியிருப்பதாவது? கோபிகள் ஜன்மாந்தரத்தில் பகவானை யனுபவிக்கவேண்டி விரதம் செய்திருந்தபடியாலும் அவர்கள் அப்ஸரஸ்ஸுக்களானபடியாலும் அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு தோஷமில்லை, என்னப்பட்ட ஸமாதானத்தை அநுவதித்துவிட்டுப் பிறகு 'பகவான் நந்தகோகுலத்தி லிருந்தகாலத்தில் இடையனுகவே அபினயம் செய்துகொண்டிருந்தபடியால் அங்கு வர்ணுச்ரம தர்மங்களின் அநுஷ்டானம் அவசியமில்லை. பிறகு மதுரைக்கு வந்த மேல் க்ஷத்திரிய தர்மத்தை அபினயம் செய்துவந்தபடியால் அக்காலத்திய பகவதனுஷ்டானம் சாஸ்திர ஸம்மதமாகவே யிருந்தது

என்று விசேஷ ஸமாதானமொன்றை அருளிச்செய்தார். அப்போது பகவான்

> कृतशौचाह्निकः कृतजपः हुताग्निस्स्वलङ्कृतः ।
> तत उद्यन्तमादित्यं उपातिष्ठत माधवः ।

லக்ஷ்மீபதியாகிய ஸ்ரீ கிருஷ்ணன் விதிப்படி ஸ்நானம் ஜபம் அக்னிஹோத்திரம், முதலியவற்றைச் செய்து நல்ல அலங்காரங்களையும் பண்ணிக்கொண்டு உதயத்தில் ஸூரியனை வழிபட்டருளினார், என்று கர்மானுஷ்டானம் செய்தது ஸூசிப்பிக்கப்பட்டது.

பகவான் தானும் அர்ஜுனனைநோக்கி,

> न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किञ्चन ।
> नानवाप्तमवाप्तव्यं वर्त एव च कर्मणि ।

பார்த்தனே! மூவுலகினும் நான் செய்யவேண்டுவதொன்றுமில்லை. எனக்குக் கிடையாத தொன்றில்லை. கிடைக்க வேண்டியது மில்லை. ஆனால் விதிப்படி கருமங்கள் நடத்தியே வருகிறேனல்லவா? என்றருளிச்செய்தார்.

மேலும் அசுவத்தாமன் அஸ்திரத்தால் தெஹிக்கப்பட்ட உத்தரையின் கெர்ப்பத்திலிருந்து பரீக்ஷித்து மஹாராஜனைக் காப்பாற்ற சக்கிராயுதத்தை விடும்போது பகவான் சபதம்பண்ணினதை வர்ணிக்குமிடத்தில்,

> शुश्रूषाशेषु वासव विष्णोः विशिष्टनया महोत्सवं जीवनावसरे, सायिकासेवा षोडशस्त्रीसहस्रपरिगोपा वृन्दावनविहारी, वल्लवी व्रज निविष्ट यौवनारम्भो महानुभाव सेवापि च ।

> यदि मे ब्रह्मचर्यं स्यात् सत्यं च मयि तिष्ठति ।
> अव्याहतं ब्रह्मचर्यं तेन जीवतु बालकः ।

பதினாறாயிரம் ஸ்திரீகளோடு ரமித்தவனும், பிருந்தாவனத்தில் விளையாடினவனும், கோபஸ்திரீகளின் மத்தியில் வெளிக்காட்டிய யௌவனத்தை யுடையவனுமான பகவான் தானே 'எனக்கு பிரும்மசர்ய முண்டானால் ஸத்தியம் என்னிடம் நிலைத்திருந்தால்

என் ஐசுவரியமும் குறைவற்றிருக்குமேயானல் இந்த பாலகன் பிழைக்கட்டும்" என்று சபதம் பேசினர், என்று சொல்லப்பட்டது. இதைப் பார்த்தால் பாகவத கிருஷ்ணன் வேறு பாரத கிருஷ்ணன் வேறு, என்று சில லௌகிகர்கள் சொல்லும் விபாகம் கூட ஒரு படியில் யுக்தமாகவே காணப்படுகிறது.

இப்படியே விஷ்ணு லோகத்தில் பகவானுடைய வாசற்காற் பவராகிய ஜயவிஜயர்கள் துர்வாஸரிடம் சாபம்பெற்ற விருத்தாந்தம் முதலியவையும் வைதிகன் பிள்ளைகள் இருந்தபடியே ஸ்ரீ வைகுண்டத்துக்குக் கொண்டுபோகப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணனால் மீண்டும் இவ்வுலகத்துக்குக் கொண்டுவரப்பட்ட கதையும் இவை பற்றச் சொல்லப்படும் ஆக்ஷேப ஸமாதானங்கள் மற்றோரிடத்தில் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆறும் அத்தியாயம்.

பகவத் கைங்கரியம்

[தர்மம்]

𑌭𑍂𑌃 𑌪𑌾𑌦𑍌 𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌯𑌦𑌸𑌰𑌨𑌿𑌲𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰 𑌸𑍂𑌰𑍍𑌯𑍌 𑌚 𑌨𑍇𑌤𑍍𑌰𑍇, 𑌕𑌰𑍍𑌣𑌾𑌵𑌾𑌶𑌾𑌃 𑌶𑌿𑌰𑍋 𑌦𑍍𑌯𑍌𑌰𑍍𑌮𑍁𑌖𑌮𑌪𑌿 𑌦𑌹𑌨𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌵𑌾𑌸𑍍𑌤𑍇𑌯𑌮𑌬𑍍𑌧𑌿𑌃 । 𑌅𑌨𑍍𑌤𑌃𑌸𑍍𑌥𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌸𑍁𑌰𑌨𑌰𑌖𑌗𑌗𑍋𑌭𑍋𑌗𑌿𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌦𑍈𑌤𑍍𑌯𑍈𑌃, 𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌰𑌂𑌰𑌮𑍍𑌯𑌤𑍇 𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌵𑌪𑍁𑌷𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑍀𑌶𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 ॥

பூமி இரண்டு பாதங்களாயும் ஆகாசம் தொப்புளாயும் காற்று பிராணனுயும் சந்திர ஸூரியர்கள் கண்களாயும் திக்குகள் காதுகளாயும் ஆகாசம் தலையாயும் அக்னியே முகமாயும் மஹா ஸமுத்திரமே இருப்பிடமாயும், இப்படி மூவுலகங்களையும் தன் சரீரமாகக் கொண்டும் எவனுள் பிரபஞ்சம் முழுமையும் உளதோ, எவன் தேவர் மனுஷ்யர் பக்ஷி பசு நாகங்கள் கெந்தர்வர் தைத்தியர் முதலானவர்களைக் கொண்டு பிரபஞ்ச லீலையை யனுபவிக்கின்றனே. அந்த விஷ்ணுவாகிய ஸர்வேச்வரனை நமஸ்கரிக்கின்றேன்.

𑌨 𑌸𑌾 𑌸𑌭𑌾 𑌯𑌤𑍍𑌰 𑌨 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃, 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾 𑌨 𑌤𑍇 𑌯𑍇 𑌨 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑌮𑍍 । 𑌨𑌾𑌸𑍌 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌨 𑌸𑌤𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑌿, 𑌨 𑌤𑌤𑍍 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌯𑌚𑍍𑌛𑌲𑍇𑌨𑌾𑌨𑍁𑌵𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 ॥

எங்கு பெரியோர்களில்லையோ அது ஸபையாகாது. தர்மத்தை யுரைக்காதவர்கள் பெரியோர்களாகார். ஸத்திய மில்லாதது தருமமு மல்ல. வஞ்சனை கலந்ததும் ஸத்தியமாகாது.

இவ்வுலகத்தில் எல்லா வஸ்துக்களும் எல்லா அபிப்பிராயங்களும் மாறி மாறிக்கொண்டே வெகு விதமாய் வித்தியாஸப்பட்டுக்கொண்டும் வருகிற தென்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப் பட்டது. இந்த அபிப்பிராயத்தை யனுசரித்தே தர்மாதர்ம லக்ஷணங்களும் பற்பல பிரகாரங்களாக வேறுபடுகின்றன வென்றால் அது ஆச்சரியமன்று. இதுபற்றியே இந்த பாரதபூமியில் ஆர்ய

ஸம்பிரதாயத்திலேயே தர்ம ஸ்வரூபம் வெகுவிதமாக விகல்பிக்கப்பட்டிருக்கிறது.

𑌦𑍇𑌶𑌭𑍇𑌦𑌾𑌤𑍍 𑌕𑌾𑌲𑌭𑍇𑌦𑌾𑌤𑍍 𑌪𑍁𑌂𑌭𑍇𑌦𑌾𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 ।
𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌇𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑍍𑌮𑌨𑍍𑌵𑌾𑌦𑌯𑌃 ।

தேச பேதத்தாலும் கால பேதத்தாலும் புருஷ பேதத்தாலும் சாஸ்திரார்த்தங்கள் வெவ்வேறு விதங்களாக முடிவு பெறுகின்றன, என்று மனு முதலியவர்கள் சொன்னார்கள். என்னப்பட்டது.

இப்படியானாலும் நமது சித்தாந்த திருஷ்டியால் பராமர்சித்துப் பார்த்தால் ஸநாதன தர்மங்களிலும் வர்ணாச்ரம தர்மங்களிலும் யக்ஞயாகாதி தர்மங்களிலும் மோக்ஷஸாதன தர்மங்களிலும் எல்லாவற்றிலும் தொடர்ந்து வரும் தத்துவம் பரோபகாரமே, என்று நிர்ணயிக்கப்படுகிறது. இதுதான் பகவதாராதனமென்றும் பகவத் கைங்கரியமென்றும் மோக்ஷ ஸாம்ராஜ்யமென்றும் நிரூபணமாகிறது. மனு,

𑌧𑍃𑌤𑌿𑌃 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌦𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍇𑌯𑌂 𑌶𑍌𑌚𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ।
𑌦𑌾𑌨𑌂 𑌦𑌮𑍋𑌦𑌯𑌾 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌦𑌶𑌕𑌂𑌧𑌰𑍍𑌮 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 ।

தைரியம் பொறுமை அடக்கம் திருட்டில்லாமை சுத்தி இந்திரியங்களை யடக்குதல் தானம் தன்னடக்கம் தயை பொறுமை, என தருமத்தின் லக்ஷணம் பத்துவகைப்படும், என்றும், யாக்ஞ வல்க்கியரும் இவ்வர்த்தத்தைய அஹிம்ஸையையும் சேர்த்து,

𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌸𑌤𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑍇𑌯𑌂 𑌶𑍌𑌚𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ।
𑌦𑌾𑌨𑌂 𑌦𑌮𑍋𑌦𑌯𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑌾𑌧𑌨𑌂 ।

என்றும் ஸநாதன தர்மங்களை விவரித்தார்கள்.

இவைகளைப் பராமர்சித்தால் எல்லாம் பரோபகாரத்தால் முடிவு பெறும் ஆத்ம குணங்கள்தான் ஸநாதன தர்மங்களென்றதாயிற்று. வர்ணாச்ரமதர்மத்தை நிஷ்கர்ஷம் செய்திருக்கும் ஸர்வக்ஞான மாதவாசாரியார்,

X 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑍇𑌽𑌪𑌿 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮 𑌬𑌾𑌧𑌕𑌃 ।
𑌕𑍃𑌪𑌾𑌮𑌪𑍍𑌰𑌾𑌪 𑌹𑍃𑌷𑍍𑌟 𑌦𑍇𑌹𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑌾𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌵𑌃 ।

நான்கு வர்ணங்களுக்கும் ஆசாரமே தர்மத்தைக் காப்பது ஆசாரமில்லாத தேஹத்தை யுடையவர்களுக்கு தர்மம் பராங் முகமாய் விடும். முகங்கொடா தென்றபடி என்றதினால் சிஷ்ட ஸம்மதமான தயா தாக்ஷிண்யம் விநயம் இவைகளோடு கூடின நடத்தையே ஆசாரமெனப் பட்டது. இவ்வாசாரமே சுருதிஸ்மிருதி இவைகளினால் விதிக்கப்பட்ட தர்மங்களைக் காப்பாற்றும். எப்படியெனில்? இவ்வித ஆசார மில்லாவிட்டால் ராகம் த்வேஷம் கோபம் அஸூயை முதலியவை விருத்தியாய் தர்மத்தின் பிரவிருத்திக்குத் தடையுண்டாகும். ஒரு வேளை பிரவிருத்தியுண்டானாலும் தருமமே பின்னடையும்படியாகும். ஆகையால் ஆசாரம் தர்ம பாலகம் என்னத் தட்டில்லை. இது நான்கு வர்ணங்களுக்கும் பொதுவாயிருக்கும். ஆகவே வர்ணாச்ரம தர்மங்களும் பரோபகாரத்திலேயே முடிவு பெறுகின்றன வென்பதை விரிக்க வேண்டுவதில்லை.

தபஸ் முதலிய நிவிருத்தி தர்மங்களும்கூட பரோபகாரத்தில் முடிகின்றனவென்று கூர்ம புராணத்தில் சொல்லப்பட்டது. சரீரத்தை உலர்த்துதல் தபஸல்ல. அஹிம்ஸை ஸத்திய வசனம் பிறர்க்கனுகூலமா யிருத்தல் பொறுமை தயை இவையன்றோ தபஸென்று மேதாவிகள் சொன்னார்கள், என்று பராசரமாதவீயத்தில் (1-62) உதாஹரிக்கப்பட்டது.

அஹிம்ஸா ஸத்யவசனமாந்ருசம்ஸ்யம் தமோ க்ருணா |
ஏதத் தபோ விதுர்தீரா ந சரீரஸ்ய சோஷணம் |

[ஈசுவரரூபம்]

அனுக்கிரஹகம் முதலிய சக்திகளையுடைய பகவானை ஒப்புக்கொள்ளுகிற பரமவைதிகர்கள் சுருதிஸ்மிருதி புராணம் இதிஹாஸம் முதலியவற்றில் சொல்லப்பட்டபடியே பரமேசுவரனை ஸர்வக்ஞன் ஸர்வ சக்தன் பரம காருணிகன் எல்லா வஸ்துக்களிலும் வியாபித்திருப்பவன் எல்லாவற்றையும் நியமனம் பண்ணுகிறவன் எல்லாவற்றுக்கும் மேற்பட்டவன் சகல கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமானவன் சகல தோஷங்களாலும் தொடப்படாதவன், என்றறிவார்கள். அவனுடைய முதல் ரூபமே பிரபஞ்சம்(விச்வம்)

ஆகையால் அவனுக்கு விச்வரூபன், என்றுபெயர். புருஷ ஸூக்தத்தில் பகவானை.

𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑍀𑌰𑍍𑌷𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 |

புருஷன் ஆயிரம் தலையுடையவன் என்று சொல்லியிருக்கிறது. ஸஹஸ்ர நாமத்திலும்,

𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 |

விச்வமே விஷ்ணு, என்று ஆரம்பத்திலேயே பகவான், ஸ்துதிக்கப் படுகிறான். வேதாந்த மென்னும் பதத்தின் அர்த்தத்தை யனுசரித்து வேதத்தின் கடைசியான வாஜஸனேய உபனிஷத்திலும் பகவத்கீதாதி சாஸ்திரங்களிலும் பிரபஞ்சமே பகவானுடைய முதல் ரூபமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது பகவானுக்கு மிகவும் இஷ்டமான ரூபம் என்றும் அதற்கு உபகாரம் செய்வதே தனக்கு ஆராதனம் என்று அவன் நினைப்பதாயும் தெரியவருகிறது. அவ்வுபனிஷத்தின் ஆரம்பத்தில்,

𑌈𑌶𑌾𑌵𑌾𑌸𑍍𑌯 𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 |

இந்த பிரபஞ்சமெல்லாம் ஈசுவரனுக்கு வஸிக்குமிடமாயிருக்கிறது, என்று சொல்லப்பட்டது. பகவத்கீதையிலும்,

𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌹𑍃𑌦𑍍𑌦𑍇𑌶𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 |

ஓ அர்ஜுனா! எல்லா பிராணிகளுடைய ஹிருதயத்திலும் ஈசுவரன் நிலைத்திருக்கிறான், என்றும்,

𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚𑌾𑌹𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 |

எல்லாருடைய ஹிருதயத்திலும் நான் இருப்பையுடையவன், என்றும்,

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤 𑌗𑍁𑌹𑌾𑌶𑌯𑌃 |

எல்லா பிராணிகளுடையவும் ஹிருதயகுகை அவனுக்கு இருப்பிடம், என்றும்,

𑌮𑌯𑌿 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑍋𑌤𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 𑌮𑌣𑌿𑌗𑌣𑌾 𑌇𑌵 |

நூலில் மணிக்கணங்கள்போல் என்னிடத்தில் இவையெல்லாம் கோர்க்கப்பட்டிருக்கின்றன, என்றும்,

ஸர்வபூதநிவாஸோऽஸி வாஸுதேவ நமோऽஸ்து தே

ஓ வாஸுதேவனே ! தேவரீர் எல்லா பிராணிகளுக்கும் வாஸஸ் தானமாயிருக்கிறீர்கள். தேவரீருக்கு நமஸ்காரம், என்றும் இவ் வர்த்தம் பலபடிகளில் பேசப்பட்டது. விஷ்ணுபுராணத்திலும்

ஜகதேதந்மஹாஸ்சர்யம் ரூபம் யஸ்ய மஹாத்மந: |
தேநாஸ்சர்யவரேணாஹம் பவதா க்ருஷ்ண ஸங்கத: |

ஹே கிருஷ்ண ! மஹா ஆச்சரியமான பிரபஞ்சமானது அத்தகைய மஹாத்மாவான பரப்பிரும்மத்தின் ரூபமாயிருக்கிறது. அந்த மேன்மையான ஆச்சரியத்தோடு கூடின பிரும்மமாகிய தேவரீரோடு அடியேன் இப்போது சேர்ந்தேன், என்று கூறப்பட்டது.

[பகவதாராதனம்]

இத்யாதிவசனங்களால் பரமேசுவரன் எல்லாவற்றுக்கும் உள் ளுயிராயிருப்பவன் (ஸர்வசரீரீ) என்றும் சரீரியாகிய ஆத்மாவை அதன் உடம்பின் (சரீரத்தின்) மூலமாகவே பூஜிக்கவேண்டியது போலவும் பிதிருக்களை பிராம்மணர் மூலமாக பூஜிக்கவேண்டியது போலவும் பகவானை அவன் சரீரமாகிய லோகத்தின் மூலமாயே ஆராதிக்கவேண்டும், என்று ஏற்படுகிறது. மேலும்,

சரா சராணி ஸர்வாணி பூதாநி பகவத்வபு: |
அதஸ்ததாநுகூல்யம் வை கர்தவ்யமிதி நிஸ்சய: |
யேநகேநாப்யுபாயேந யஸ்யகஸ்யாபி தேஹிந: |
ஸந்தோஷம் ஜநயேத் ப்ராஜ்ஞ: ததேவேஸ்வர பூஜநம் |

சராசரங்களாகிய பிராணிகளெல்லாம் பகவானுடைய சரீரங்கள். ஆகையால் அவைகளுக்கெல்லாம் அனுகூலத்தைச் செய்வதே கடமை, என்று தீர்மானிக்கவேண்டும். நன்குயுணர்ந்தவன் எந்த வித உபாயத்தை நாடியாவது எந்தப்பிராணிக்காவது ஸந்தோஷத் தை உண்டாக்கக்கடவன். அதுவே, ஈசுவரனுடையபூஜை, என்ற வசனங்களால் உலகத்துக்கு ஸந்தோஷத்தைச் செய்விப்பதே பகவானுக்கும் ஸந்தோஷமாகிறதென்று ஸ்பஷ்டமாகிறது.

இப்படியானால் கோவில்களில் அர்ச்சாவிக்கிரஹ ஆராதனம் முதலியவை வேண்டுவதில்லையோ வென்றால் அவ்வாராதனமும்

அஹிம்ஸை அஸ்தேயம் (திருட்டுஇல்லாமை) முதலிய ஆத்ம குணங்களில் தானம், என்னும் குணத்தைமுன்னிட்டு பகவானுக்கு ஆராதனமாவதால் இதுவும் லோகோபகாரகமாகவே ஆகின்றது. நாம் பகவானுக்கு ஸமர்ப்பணம் பண்ணுகிறகோவில் குளம் புஷ்பம் சந்தனம் தூபதீபநைவேத்தியங்கள் முதலியவையெல்லாவற்றையும் அணுவளவும் தமக்காக வைத்துக்கொள்ளாமல் தம் பக்தர்களுக்கே விநியோகப்படுத்துகிறானன்றோ? சாஸ்திரம் இப்படியேதான் சொல்லுகிறது. இதனால் லோகதிருஷ்டியாலும் பகவதபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. பக்தன் தனதெல்லாவற்றையும் ஸ்வாமிக்கு ஸமர்ப்பிவிக்கவேண்டும். ஸ்வாமியும் தன் ஐசுவரியத்தையெல்லாம் தன்னை யடைந்தவர்க்கு (ஆச்ரிதர்க்கு) உபயோகப்படுத்தவேண்டும். என்று.

இத்தகைய பகவதாராதனம்தான் திரவியயக்ஞம், என்பது. ஞானம் தயை தாக்ஷிண்யம் முதலிய குணங்களைக் காட்டிலும் மனுஷ்யஸ்வபாவத்தில் ஊன்றிக்கிடக்கும் லோபகுணத்தை விட்டறுக்கை வெகு கஷ்டமாகையால் எல்லாசாஸ்திரங்களும் விசேஷமாகக் கொண்டாடுகின்றன. உதாரணமாக ஸப்தரிஷி ஸம்வாதத்தில்,

यज्ञार्थं संचयो यस्य द्रव्याणां सः प्रशस्यते ।
तपस्संचय वनवासैः विशिष्टो द्रव्यसंचयः ।

தர்மத்தின்பொருட்டு எவன்செய்யும் திரவியச்சேர்க்கை சிலாகிக்கப்படுகிறதோ, அத்தகைய உயர்ந்த பணக்குவியலானது அவனுக்கு தபஸ்ஸின் குவியலேயாகிறது. என்றும், மனுஸ்மிருதியில் (11-8)

योऽसाधुभ्योऽर्थमादाय साधुभ्यः संप्रयच्छति ।
स कृत्वा प्लवमात्मानं संतारयति तावुभौ ।

எவன் அஸாதுக்களிடமிருந்து தனத்தைப்பற்றி ஸாதுக்களுக்களிக்கின்றானோ, அவன் தன்னை ஓடமாக்கிக்கொண்டு அவ்விருவரையும் (ஸம்ஸாரக்கடலை) தாண்டும்படிசெய்கிறான், என்றும் சொல்லப்பட்டிருப்பவைகளைப் பராமர்சிக்கலாம். அசுவமேத பர்வத்திலும்

> காமாத்3யநுபேதம் ஹ்ருத3யம் வாக3ஸத்யாத்3யதூ3ஷிதா |
> ஹிம்ஸாதி3 ரஹித: காய: கேஶவாராத4நம் பரம் |

ஆசை முதலியவை தொடாதமனது. பொய் முதலானவைகளால் அசுத்தமாகாத வாக்கு. ஹிம்ஸை முதலானவையோடு ஸம்பந்தப்படாத சரீரம், என்றிவை மூன்றும் கேசவனுடைய ஆராதனங்களாகின்றன. என்று மூன்று கரணங்களாலும் செய்யக்கூடிய பகவத் பூஜை சொல்லப்பட்டது,

> வாக்3த3ண்டோ3(அ)த2 மநோத3ண்ட3: காயத3ண்ட3ஸ்ததை2வ ச |
> யஸ்யைதே நியதா த3ண்டா3: த்ரித3ண்டீ3தி ஸ உச்யதே |

எவனுக்கு வாக்கு தண்டம், (வாக்கில் அடக்கம், சரீர தண்டம், தீச்செயல்களைச் செய்யாமை, மனதின் தண்டம், கெட்ட நினைவில்லாமை, ஆகிய இவை மூன்றும் நிலை பெற்றிருக்கின்றனவோ அவனே திரிதண்டீ ஸந்யாஸி, எனப்படுவான். என்னும் வசனத்தையும் கவனிக்கலாம். இப்படியே காஞ்சனமாலீ வாக்கியமும்.

> த4ர்மம் ப4ஜஸ்வ ஸததம் த்யஜ பூ4தஹிம்ஸாம் |
> ஸேவஸ்வ ஸாது4புருஷாந் ஜஹி காமஶத்ரும் |
> அந்யஸ்ய தோ3ஷகு3ணகீர்தநமாஶு முஞ்ச |
> ஸத்யம் வதா3ர்சய ஹரிம் ப4ஜ ஜந்மஸாரம் ||

எப்போதும் தர்மத்தையடை. பிராணி ஹிம்ஸையைவிடு. ஸாது ஜனங்களோடு சேர்ந்து பழகு, காமமாகிற விரோதியைக்கொல்லு. பிறருடைய தோஷகுணங்களைப்பேசுதலை யகற்று. உண்மையையே உரை. இவ்விதமாக பகவான் ஹரியைப் பூஜை செய். அதனுல் இந்த ஜன்மம் படைத்ததின் பலத்தைப்பெறு, என்றிருக்கிறது. இவ்வித வசனங்கள் அநந்தங்களிருக்கின்றன. இவற்ருல் முக்கியமாக அறியப்பட வேண்டுவதென்ன வென்ருல்? ஆத்மகுணங்களை விருத்திபண்ணி ஜகத்துக்கு உபகாரம் பண்ணுவதே உத்தமமான பகவதாராதனம், என்று.

[முன்னோர்களின் அநுஷ்டானம்]

பூர்வர்களான மஹான்களின் அநுஷ்டானத்தைப் பார்த்தாலும் இவ்வர்த்தம் பிரகாசமாகிறது. இதிஹாஸ ஸமுச்சயத்தில் முதலத்தியாயத்தில்,

𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍋 𑌮𑍁𑌨𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌕𑍇𑌵𑌲𑌾𑌤𑍍𑌮𑌹𑌿𑌤𑍋𑌦𑍍𑌯𑌤𑌾𑌃 |
𑌵𑍇𑌦𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌤𑍁 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌹𑌿𑌤𑍇 𑌰𑌤𑌃 |
𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌿 𑌕𑌿𑌂 𑌵𑌾𑌨𑍍𑌯𑌜𑍍𑌜𑌗𑌦𑍍𑌧𑌿𑌤𑍈𑌷𑌿𑌣𑌾 |
𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌂 |
𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌣𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌹𑍃𑌦𑍍𑌯𑌾𑌣𑌿 𑌵𑌶𑍍𑌯𑌤𑌾 |
𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌾 𑌭𑌾𑌰𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌾𑌃
𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑌾𑌨𑍍 𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌨𑍍𑌯𑌾𑌂𑌸𑍍𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌾𑌨𑍍 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌃 |
𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑌾𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑌾 𑌸𑍋𑌽𑌯𑌂 𑌵𑍇𑌦𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 |
𑌧𑌰𑍍𑌮𑍇 𑌚𑌾𑌰𑍍𑌥𑍇 𑌚 𑌕𑌾𑌮𑍇 𑌚 𑌮𑍋𑌕𑍍𑌷𑍇 𑌚 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 |
𑌯𑌦𑌿𑌹𑌾𑌸𑍍𑌤𑌿 𑌤𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌯𑌨𑍍𑌨𑍇𑌹𑌾𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌤𑌤𑍍𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 |
𑌇𑌦𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑌦𑌦𑍍𑌵𑌯𑍇 |
𑌆 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌅𑌲𑍍𑌪𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 |
𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌂 𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌕𑍋𑌟𑌿𑌭𑌿𑌃 |
𑌪𑌰𑍋𑌪𑌕𑌾𑌰𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌯 𑌪𑌾𑌪𑌾𑌯 𑌪𑌰𑌪𑍀𑌡𑌨𑌂 |

ஸாதாரணமாய் ருஷிகளெல்லாம் தாம் கடைத்தேறுவதிலேயே முயற்சியுள்ளவர்களாக யிருக்கிறார்கள். வியாஸபகவானே வென்றால் எல்லா பிராணிகளுடையவும் நன்மையிலீடுபட்டவர். வேறு எவ்விதமாயவரை ஸ்துதிப்பது? உலகத்தின் நன்மை யொன்றையே அபேக்ஷித்த அவரால் வேதத்திலிருந்து பிறித்தெடுத்து அற்புதமான மஹாபாரதம் செய்யப்பட்டதன்றோ? எல்லோரும் கஷ்டத்தை தாண்டட்டும், எல்லோரும் உயர்ந்த பேற்றையடையட்டும் என்று நினைத்தல்லவோ வேதார்த்தங்களனைத்தையும் மஹாபாரதத்திலவர் காட்டியருளினார். அவற்றையெல்லாம் நன்றாய் விளக்கவேண்டுமென்றல்லவோ அவராசைப்பட்டது? மஹாத்மாவாகிற அந்த ரிஷியின் ஸிம்மநாதத்தைக் கேளுங்கள். ஓ பரதக்களிரே! அறம் பொருள் இன்பம் வீடு, எனப்படுமவைகளைப் பற்ற இந்த பாரதத்தில் சொல்லப்பட்டவைகளே மற்றவிடங்களிலுள. இதிலில்லாதது வேறு எங்குமில்லை. இதுவே புண்ணியம். இதுவே பாபம், என்கிற இரண்டுமொழிகளில் சண்டாள பரியந்த

மாக வறியும்படி சாஸ்திரத்தின் பிரயோஜனம் சுருங்கச் சொல்லப்பட்டுவிட்டது. கோடிக்கணக்கான கிரகந்தங்களால் சொல்லப்பட்ட தருமங்களின் திரண்ட பொருளைக்கேள். அதுதான் பரோபகாரமே புண்யம் பிறரை வருத்துவதே பாபம், என்னப் பட்டது, என்று ஜகதநுக்கிரஹமே ஈசுவர ஆராதனமென்று பிர காசமாய்ச் சொல்லப்பட்டது.

இப்படியே ஸ்ரீபாகவதத்தில் ரந்திதேவமஹாராஜன் சொல்லுகிறான்.

𑌨 𑌕𑌾𑌮𑌯𑍇𑌽𑌹𑌂 𑌗𑌤𑌿𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌅𑌷𑍍𑌟𑌰𑍍𑌦𑍍𑌧𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌮𑌪𑍁𑌨𑌰𑍍𑌭𑌵𑌂 𑌵𑌾 । 𑌆𑌰𑍍𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇𑌽𑌖𑌿𑌲𑌦𑍇𑌹𑌭𑌾𑌜𑌾𑌂 𑌅𑌨𑍍𑌤𑌃𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌯𑍇𑌨 𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌦𑍁𑌃𑌖𑌾𑌃 ।

எனக்கு ஈசுவரர்களுடைய பதவிகளும் வேண்டாம் எட்டு ஐச்வரியங்களோடு கூடின மறு பிறப்பில்லாத மோக்ஷமும் வேண்டாம். ஆனல் எல்லா பிராணிகளுடையவும் உள்ளிருந்து அவர்களுடைய கஷ்டங்களையெல்லாம் நானே அனுபவித்து அவர்களுக்கெல்லாம் துக்கமே யில்லாமலிருக்கும்படி செய்யும் நிலைமையை யடைவேனுக, என்று.

வைதிகமதத்துக்குப் புரம்பான புத்தர் முதலியவர்களின் வாக்கியங்களையும் இது விஷயத்தில் நம்மவர்கள் உதாஹரித்திருக்கிறார்கள். தந்திர வார்த்திகத்தில் அநுவாதம் செய்யப்பட்ட புத்த வாக்கியம்.

𑌕𑌲𑌿𑌕𑌲𑍁𑌷𑌕𑍃𑌤𑌾𑌨𑌿 𑌯𑌾𑌨𑌿 𑌲𑍋𑌕𑍇,
𑌮𑌯𑌿 𑌨𑌿𑌪𑌤𑌨𑍍𑌤𑍁 𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑌾𑌂 𑌹𑌿 𑌲𑍋𑌕𑌃 ।

கலியின் தோஷத்தினுல் உலகத்தில் உண்டாகு மவையெல்லாம் என்னிடத்தில் குவியட்டும். எப்படியாவது உலகம் விடுதலை பெறட்டும். என்று.

அப்படியே பாஸ்கர பாஷ்யத்தில் புத்த வாக்கியம்

𑌆𑌕𑌾𑌶𑌸𑍍𑌯 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌰𑍍𑌯𑌾𑌵𑌚𑍍𑌚 𑌯𑌾𑌵𑌚𑍍𑌚 𑌜𑌗𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ।
𑌤𑌾𑌵𑌨𑍍𑌮𑌮 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌰𑍍𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌲𑍋𑌕𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌿 𑌨𑌿𑌘𑍍𑌨𑌤𑌃 ।

ஆகாசமும் பூமியும் எவ்வளவு காலம் ஸ்திரமாயிருக்குமோ அவ்வளவு காலம் நானும் நிலைத்திருந்து உலகத்தாரின் பாவங்களை யெல்லாம் நானே திரட்டிக்கொள்ளக்கடவேன், என்று எடுத்துரைக்கப்பட்டது.

காவியம் நாடகம் முதலியவைகளை இயற்றிய மஹாகவிகளும் இந்த அபிப்பிராயத்தைப் பலவாறாகப் பேசியிருக்கிறார்கள். நாகாநந்த நாடகத்தில்,

𑌶𑌯𑍍𑌯𑌾 𑌶𑌾𑌦𑍍𑌵𑌲𑌮𑌾𑌸𑌨𑌂 𑌶𑍁𑌚𑌿𑌶𑌿𑌲𑌾 𑌸𑌦𑍍𑌮 𑌦𑍍𑌰𑍁𑌮𑌾𑌣𑌾𑌮𑌧𑌃 ।
𑌶𑍀𑌤𑌂 𑌨𑌿𑌰𑍍𑌝𑌰𑌵𑌾𑌰𑌿 𑌪𑌾𑌨𑌮𑌶𑌨𑌂 𑌕𑌨𑍍𑌦𑌾𑌃 𑌸𑌹𑌾𑌯𑌾 𑌮𑍃𑌗𑌾𑌃 ।
𑌇𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑌲𑌭𑍍𑌯𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌭𑌵𑍇 𑌦𑍋𑌷𑍋𑌽𑌯𑌮𑍇𑌕𑍋
𑌵𑌨𑍇 𑌦𑍁𑌷𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑌿 𑌯𑌤𑍍 𑌪𑌰𑌾𑌰𑍍𑌥𑌘𑌟𑌨𑌾 𑌵𑌨𑍍𑌧𑍍𑌯𑍈𑌰𑍍𑌵𑍃𑌥𑌾
𑌸𑍍𑌥𑍀𑌯𑌤𑍇 ।

இளம்பசும்புல்த்தரை படுக்கையாயும் பரிசுத்தமான சிலையே ஆஸனமாயும் மரங்களின்கீழ் வசிக்குமிடமாயும் சீதலமான அருவியின் ஜலம் பானமாயும் கிழங்குகள் ஆகாரமாயும் மான்கள் சிநேகிதர்களாகவும் இப்படி நாம் ஆசைப்படாமலே கிடைக்கக்கூடிய எல்லா வைபவங்களையுமுடைய ஆரண்யத்தில் ஒரு பெரியதோஷம் இருக்கிறது. அதாவது? இங்கு நம்மை யாசிப்பவர்களே கிடையாது. அயலாருக்கு உபகாரம் செய்யக்கூடிய காரியலேசமுமில்லை. ஆகையால் இவ்விடத்தில் நாமிருப்பது மிகவும் வீணே, என்னப்பட்டது.

இந்த வாக்கியங்களால் பகவானை இசையாதவர்களும் லோகோபகாரமே செய்யவேண்டுமென்னும் போது ஸர்வஜகத்தையும் தனது உடலாகக்கொண்டிருக்கும் ஸர்வேசுவரனை ஒப்புக்கொண்ட ஆசாரியர்கள் இப்படி உபதேசிப்பது ஆச்சரியமல்லவென்று புலப்படுகிறது.

நம் பூர்வாசாரியர்களில் ஸ்ரீ ஆளவந்தார்,

𑌨 𑌦𑍇𑌹𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍 𑌨 𑌚 𑌸𑍁𑌖𑌮𑌶𑍇𑌷𑌾𑌭𑌿𑌲𑌷𑌿𑌤𑌂,
𑌨 𑌚𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍 𑌕𑌿𑌮𑌪𑌿 𑌤𑌵 𑌶𑍇𑌷𑌤𑍍𑌵𑌵𑌿𑌭𑌵𑌾𑌤𑍍 ।
𑌬𑌹𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌂 𑌨𑌾𑌥 𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌸𑌹𑍇 𑌯𑌾𑌤𑍁 𑌶𑌤𑌧𑌾 ।
𑌵𑌿𑌨𑌾𑌶𑌂 𑌤𑌤𑍍 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌮𑌧𑍁𑌮𑌥𑌨 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌮𑌿𑌦𑌮𑍍 ॥

தேவரீருடைய கைங்கரியமென்னும் ஐசுவரியம் கிடைத்ததினால், என் தேஹம் பிராணங்கள் ஸாதகங்கள் விரும்பத்தக்கவை யெல்லாம் என்ஆத்மாவும் மற்றும் எல்லாம் இவையொன்றையும் நான் வைத்துக்கொள்ள ஸஹிக்கமாட்டேன். தேவரீருக்குப் புறம்பான அவை யெல்லாம் நூற்றுக்கணக்கான நாசங்களை யடையட்டும். ஓ மதுஸூதனனே ! அக்ஞானத்தையொழிப்பவனே ! இதுதான் தேவரீரிடத்தில் என் விண்ணப்பம். இது ஸத்தியம், என்றருளிச் செய்தார். இவ்விடத்தில் சேஷத்துவ (கைங்கரிய) சப்தத்தைப் ராமர் சித்தால் ஸகலத்தையும் பகவானுக்குஸமர்ப்பிவித்து அவன் திருவுள்ளம்படி வினியோகிக்கப்படும்படி விட்டுவிடும்பக்ஷத்தில் எல்லா ஐசுவரியங்களும் வேண்டியவைதான். இல்லாவிட்டால் எல்லாமும் அருவருக்கத்தக்கவையே (ஹேயமே) என்று தாற்பரியமாகிறது. இவ்வர்த்தத்தை ஸ்ரீ ராமாநுஜ பகவானும் கீதா பாஷ்யத்தில்,

𑌯𑌜𑌨𑌂 𑌨𑌾𑌮 𑌪𑌰𑌿𑌚𑌰𑍍𑌯𑌾 𑌶𑍇𑌷𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 ।

என்பது முதலான வாக்கியங்களால் வெளியிட்டருளினர். நம꞉ என்பதின் அர்த்தமும்அர்ப்பணம், என்பதுதான். ஆத்மாவையே ஸமர்ப்பிவிக்கும்போது ஆத்மீயங்களுடைய (தனக்கு சொந்தமானவைகளினுடைய) ஸமர்ப்பணமும் தானே சேர்ந்து வர வேண்டுமென்பதைக் கேட்பானேன், என்று தாற்பரியம்.

ஆகையால் உலகத்தின் நன்மையில் முடிவுபெறும்படியான ஆத்மகுண பூர்த்தியென்கிறது தைவீசம்பத்தை அபிவிருத்தி செய்வதான பகவதாராதனம், என்று ஸாரதமமான அர்த்தம்.

[முக்கடன் தீர்த்தல்.]

உலகத்தில் பிறந்து சாஸ்திரத்துக்கு அதிகாரியாகும் மனிதன் பிறக்கும்பொழுதே மூன்றுவிதக் கடன்களோடு உண்டாகின்றான், என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அம் மூன்றுகடன்களும் தீர்ந்த பிறகே மோக்ஷத்தைக் குறித்துப் பிரயத்தினம் செய்யவேண்டுமென்று மனு முதலிய ரிஷிகள் உபதேசிக்கிறார்கள்.

𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑍋 𑌵𑍈 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌃 𑌋𑌣𑌵𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇 ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑍇𑌣 𑌋𑌷𑌿𑌭𑍍𑌯𑌃 । 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌦𑍇𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 । 𑌪𑍍𑌰𑌜𑌯𑌾 𑌪𑌿𑌤𑍃𑌭𑍍𑌯𑌃 ।

𑌋𑌣𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑍀𑌣𑍍𑌯𑌪𑌾𑌕𑍃𑌤𑍍𑌯 𑌮𑌨𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑍇 𑌨𑌿𑌵𑍇𑌶𑌯𑍇𑌤𑍍 ।
𑌅𑌨𑌪𑌾𑌕𑍃𑌤𑍍𑌯 𑌮𑍋𑌕𑍍𑌷𑌂 𑌤𑍁 𑌸𑍇𑌵𑌮𑌾𑌨𑌃 𑌵𑍍𑌰𑌜𑌤𑍍𑌯𑌧𑌃 ।

என்று.

பிருப்மசரியத்தினல் ரிஷிகளின் கடனையும் யாகத்தால் தேவர்களின் கடனையும் பிரஜையினல் பிதிருக்களுடைய கடனையும்தீர்க்க வேண்டும். இக்கடன்களைத் தீர்க்காமல் மோக்ஷத்தில் பிரயத்தினம் செய்கிறவன் அதோகெதியில் விழுகிறான், என்னப்பட்டது இவற்றில் முதலாவதான பிரும்சரியமாவது வித்தியாப்பியாஸம் இவ்வித்தியாப்பியாஸமானது ரிஷிகளால்.

𑌵𑍇𑌦𑌸𑍍𑌵𑍀𑌕𑌰𑌣𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌵𑌿𑌚𑌾𑌰𑍋𑌽𑌭𑍍𑌯𑌸𑌨𑌂 𑌜𑌪𑌃 ।
𑌤𑌦𑍍𑌦𑌾𑌨𑌂 𑌚𑍈𑌵 𑌶𑌿𑌷𑍍𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌵𑍇𑌦𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑍋 𑌹𑌿 𑌪𑌞𑍍𑌚𑌧𑌾

(தக்ஷர்)

முதலில் வேதத்தை கிரஹித்தல். பிறகு அதை விசாரம்பண்ணுதல். உருப்போடுதல். ஜபித்தல். சிஷ்யர்களுக்கு உபதேசித்தல், என்று வித்தியாப்பியாஸம் ஐந்து வகைப்படும், என்றும்.

𑌅𑌧𑍍𑌯𑌾𑌪𑌨𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑌜𑍍𑌞𑌃 𑌪𑌿𑌤𑍃𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑍁 𑌤𑌰𑍍𑌪𑌣𑌂 ।
𑌦𑍈𑌵𑍋 𑌹𑍋𑌮𑌃 𑌬𑌲𑌿𑌰𑍍𑌭𑍌𑌤𑌃 𑌨𑍃𑌯𑌜𑍍𑌞𑍋𑌽𑌤𑌿𑌥𑌿𑌪𑍂𑌜𑌨𑌂 ।

(மனு)

பிரும்மயக்ஞம் என்பது வேதத்தைப் படித்தல். பிதிருயக்ஞம் தர்ப்பணம். தேவயக்ஞம் ஹோமம். பூதயஞ்ஞம்பலி. மனுஷ்யயக்ஞமென்பது அதிதி போஜனம் செய்வித்தல், என்றும் சொன்னார்கள். இதில் அத்தியாபனம் (வேதத்தைப்படித்தல்) என்கிற பதம் கெவனிக்கத்தக்கது. இதனல் ரிஷிகளுக்குப் பட்ட கடன் தீருகின்றது. தேவர்களின் கடன் யக்ஞம் முதலியவைகளால் தீர்க்கப்படுகின்றது. அவையாவன ?

𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌪𑍃𑌕𑌾𑌯𑌿𑌕𑌾𑌦𑍍𑌯𑌾𑌯𑌃 𑌸𑌨𑍍𑌤𑍁 𑌸𑍋𑌽𑌯𑌂 𑌵𑌿𑌵𑍇𑌕
𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ।

த்ரைவார்ஷிகாதிகாந்நா: க்ரியா: கார்யா: யஸ்யாந்நம் வார்ஷிகம் ஸம்பவேத் |
தக்ஷிணா ஸர்வயஜ்ஞாநாம் தாதவ்யம் ஸர்வவித்தகா |
இதி ப்ராஜாபத்யேஷ்டிஷு ஸர்வவேதஸ தக்ஷிணாநாமேவ சோதிதம் |
விச்வஜிதா யஜேத |

மூன்றுவருஷம் அதற்கு அதிகமானது, ஒருவருஷம், இப்படி அன்ன தானங்கள் செய்யப்படவேண்டிய யாகங்கள் மிகுந்த தக்ஷிணைகளைக் கொடுத்துச் செய்யப்படவேண்டுமென்றும் விச்வஜித், அதாவது தன் பொருளனைத்தையும் பிறர்க்குக் கொடுத்து விடவேண்டிய யாகங்களைச் செய்யவேண்டுமென்றும் சொல்லப் பட்டன. இவ்வித யாகங்களினால் லோபகுணத்தை ஒழித்து பணத்தைப் பிறர்விஷயத்தில் தாராளமாகச் செலவு செய்யவேண்டு மென்றும் உபதேசிக்கப்பட்டது.

பிதிருக்களின் கடன் கிருஹஸ்தாச்ரமத்தை ஏற்று புத்திர ஸந்ததி உண்டுபண்ணுவதால் தீருகிறது என்றும், புத்திரஸந்ததி ஸ்வரூபம் இன்னவிதமாக இருக்கவேண்டுமென்றும் வேதத்தில் சொல்லப்பட்டது. சதபதப் பிராம்மணத்தில்,

தஸ்மாத் புத்ரம் அநுசிஷ்டம் லோக்யம் ஆஹு: | தஸ்மாதேநம் அநுசாஸதி | ஸ புத்ரவாநஸ்மிந் லோகே ப்ரதிதிஷ்டதி | இதி

ஆகையால், நன்றாய் கற்பிக்கப்பட்ட புத்திரனே உலகத்தின் நன்மையின் பொருட்டு ஆகிறான், என்றார்கள். ஆகையால் இவனுக்கு நல்ல புத்திரனையுடையவன் இந்த லோகத்தில் ஸ்திரமாக இருக்கிறான் என்று உபதேசம் செய்கிறது. என்று சொல்லப்பட்டது இதனால் புத்திரனை உண்டுபண்ணுவதால் மட்டும் பிதிருக்களின் கடன் தீராது ஆனால் அவனைச் சரியாக சிக்ஷைசெய்து உலகத்துக்கு ஹிதத்தைச் செய்யும்படி யாக்கினால் தான் தீரும், என்றதாயிற்று.

இப்படி முக்கடன் தீர்ப்பதும் லோக ஆராதனமே ஆகிறது.

[புஷ்பாஞ்சலி சமர்ப்பணம்]

பகவதாராதனம் கேவல பத்திரம் புஷ்பம் பலம் முதலானவைகளைச் சமர்ப்பிவித்துச் செய்யப்படுவதைக் காட்டிலும் இந்த மாதிரி பரோபகாரரூபமாகச் செய்யப்படவேண்டிய பிரகாரங்கள் எல்லா சாஸ்திரங்களிலும் காணப்படுகிறது. இதன் விவரம் ஸ்ரீ பாகவதத்தில்,

𑌪𑌶𑍍𑌯𑍈𑌤𑌾𑌨𑍍 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌾𑌨𑍍 𑌪𑌰𑌾𑌰𑍍𑌥𑍈𑌕𑌾𑌨𑍍𑌤 𑌜𑍀𑌵𑌿
𑌤𑌾𑌨𑍍 । 𑌵𑌾𑌤𑌵𑌰𑍍𑌷𑌾𑌤𑌪𑌹𑌿𑌮𑌾𑌨𑍍 𑌸𑌹𑌨𑍍𑌤𑍋 𑌵𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 𑌨𑌃 ।
𑌅𑌹𑍋 𑌏𑌷𑌾𑌂 𑌵𑌰𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑍁𑌪𑌜𑍀𑌵𑌨𑌂 । 𑌸𑍁𑌜
𑌨𑌸𑍍𑌯𑍇𑌵 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌵𑍈 𑌵𑌿𑌮𑍁𑌖𑌾 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌨𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑌃 । 𑌪𑌤𑍍𑌰𑌪𑍁𑌷𑍍𑌪
𑌫𑌲𑌚𑍍𑌛𑌾𑌯𑌾 𑌮𑍂𑌲𑌵𑌲𑍍𑌕𑌲𑌦𑌾𑌰𑍁𑌭𑌿𑌃 । 𑌗𑌨𑍍𑌧𑌨𑌿𑌰𑍍𑌯𑌾𑌸𑌭𑌸𑍍𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑍋
𑌕𑍍𑌮𑍈𑌃 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌵𑌿𑌤𑌨𑍍𑌵𑌤𑍇 । 𑌏𑌤𑌾𑌵𑌜𑍍𑌜𑌨𑍍𑌮𑌸𑌾𑌫𑌲𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿
𑌨𑌾𑌮𑌿𑌹 𑌜𑍀𑌵𑌤𑌾𑌂 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌰𑌰𑍍𑌥𑍈𑌰𑍍𑌧𑌿𑌯𑌾𑌵𑌾𑌚𑌾𑌶𑍍𑌰𑍇𑌯 𑌆
𑌚𑌰𑌣𑌂 𑌸𑌦𑌾 । 𑌪𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌫𑌲𑌂 𑌤𑍋𑌯𑌂 𑌯𑍋 𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾
𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 । 𑌤𑌦𑌹𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌂 𑌅𑌶𑍍𑌨𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।

மஹாபாக்கியசாலிகளான இந்தவிருக்ஷங்களைப்பாருங்கள். அவைகள் பிறர்கென்றே ஜீவித்திருக்கின்றனவன்றோ? அதற்காககாற்று வெயில் மழை பனி முதலியவற்றை ஸஹித்து அவைகளினின்றும் நம்மைக் காப்பாற்றுகின்றனவன்றோ? எல்லாப் பிராணிகளுக்கும் உபகாரம் செய்துகொண்டு வாழும் இவைகளின் உயர்ந்த வாழ்வே வாழ்வு இவைகளிடமிருந்து யாசகர்கள் பணக்காரனிடத்திலிருந்து திரும்புவதுபோல முகங்கோணி நிராசையாய் திரும்புவதில்லையே? இலை புஷ்பம் பழம் நிழல் வேர் மரவுரிகட்டைவாசனை பால் சாம்பல் கரி கன்று முனை, இவை யெல்லாவற்றாலும் பிராணிகளின் ஆசைகளை நிறைவேற்றுகின்றனவன்றோ? இப்படிகளிலன்றோ உயிரோடிருக்கும் பிராணிகளின் ஜன்மம் ஸபலமாக வேண்டும்? தன் பிராணன்களாலும் திரவியங்களாலும் புத்தியினாலும் வாக்கினாலும் எப்போதும் பிறர்க்கு நன்மையையே புரிந்துகொண்டிருக்க வேண்டும்.

இலை பூ பழம் தண்ணீர் இவைகளில் எதையும் எவன் பக்தியோடு எனக்கு ஸமர்ப்பிக்கிறானோ, அந்த உண்மையான பக்தன்

கொடுப்பதை நான் ஸந்தோஷமாக புஜிக்கிறேன், என்று வெகு அழகாக பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட புஷ்பங்களில் விசேஷமானவையும் பகவானுக்கு மிகவும் பிரீதிகரமானவையும் இவைதான் என்னப்பட்டது அவையாவன ?

𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌦𑌯𑌾 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌤𑌪𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌸𑌤𑍍𑌯𑌮𑌷𑍍𑌟𑌵𑌿𑌧𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌕𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

பகவானான விஷ்ணுவுக்கு மிகுந்த பிரீதியைச் செய்யும் புஷ்பங்களில் முதலானது அஹிம்ஸை. அடுத்தது இந்திரியங்களை ய
குதல். மேல் புஷ்பம் எல்லாப் பிராணிகளிடத்தும் தயை கா
தல். பொறுமை ஒரு உயர்ந்த புஷ்பம். மற்றவை சாந்தி தப
தியானம் ஸத்தியம், ஆகிய இவை. இப்படிப் புஷ்பங்கள் எ
வகைப்பட்டன, என்று. அத்தகைய பகவானிடத்தில் நான் செ
வது யாவையும் சாப்பிடுவதையும் ஹோமம் செய்வதையும் த
என்று செய்யப்படு மவையையும் அர்ப்பணம் செய்து விடுகிறே

𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌷𑌿 𑌯𑌦𑌶𑍍𑌨𑌾𑌸𑌿 𑌯𑌜𑍍𑌜𑍁𑌹𑍋𑌷𑌿 𑌦𑌦𑌾𑌸𑌿 𑌯𑌤𑍍 ।
𑌯𑌤𑍍𑌤𑌪𑌸𑍍𑌯𑌸𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌮𑌦𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥

ஸ்ரீ 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑌸𑍍𑌤𑍁

ஸ்ரீ: